Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 18.00

දිනමුරසු වාරමලර් செப் 08 - 14, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 630



## பிரிவினைப் போராட்டங்களும் பிந்திய நிலைப்பாடுகளும் ஈழப் போராட்டம் எத்திசையை நோக்கி?

## பேராசிரியரின் வல்லூறவு தேசியத்திற்குத் தேவைதானா?

## நமீதாவின் நச் செய்திகள்

## தற்கொலை முயற்சியில் அதிகம் ஈடுபடுவது யார்?

லேடீஸ் ஸ்பெஷல்

## ஆன்மீகம்

### நம்பினோர் கெடுவதில்லை


**வி**ஞ்ஞான அறிவு விரைவாக மேலும் மேலும் முன்னேறி வருமிக் கலியுகத்தில் மெய்ஞ்ஞானமாக விளங்கி இப்பரந்த உலகெங்கும் நிறைந்துள்ள இறை சக்தியை எவ்வகையிலும் எதனாலேயும் வெல்லமுடியாது; அளவிடமுடியாது என்பதை நாம் அனைவரும் உணர்ந்துதான் ஆகவேண்டும்.

இயற்கையின் சீற்றமான சுனாமி சுழற்றி அடித்து துள்ளிப் பாய்ந்து எத்தனையோ வித இழப்புக்களை ஏற்படுத்திச் சென்றதைக் கண்டும் மனங்கலங்கி நிற்பதைத் தவிர நம்மால் வேறு என்ன தான் செய்ய முடிந்தது.

கணனி யுகம் கொடிகட்டிப் பறந்தாலும் இழப்புக்கள் வருமுன்பு தகுந்த நடவடிக்கையைக் காணவில்லையே. சூறாவளி, துள்ளிப்பாயும் கடற்கோள் அலை, விடாது பெய்யும் மழை, வெள்ளம், மின்னாமல் முழங்காமல் வரும் பூகம்பம், இப்படி இயற்கையின் செயற்பாட்டு அழிவுகளை எப்படித் தடுப்பது என்று இன்றும் சிந்தனைச் சிதறல்களே சிறகடித்துப் பறக்கின்றன. ஆனாலும் தீர்க்கமான முடிவுதான் தெரியவில்லை.

அனைத்துக்கும் ஆக்கமான இறைசக்தி, காக்கும் கடவுள், பார்க்குமிடமெல்லாம் பரவியுள்ள பரம்பொருள் எல்லோர்க்கும் பொதுவானவன். மேலானவன். வேண்டுதல் மூலம் வரும் வினைகளைப் போக்கமுடியும்; வேறு காப்பரண் இல்லை என்று இறைவனின் காலடியை நம்புவார்க்கு வாய்ப்பாக வந்து உதவுவான். இது இந்துமதம் கூறும் மெய்வாக்கு!

-சிவஶ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.



### இறைவனின் தண்டனை தப்பாது!

"**உன்** தந்தையை முழு உள்ளத்துடன் மதித்து நட. உன் தாயின் பேறுகாலத் துன்பத்தை மறவாதே. அவர்கள் உன்னைப் பெற்றெடுத்தார்கள். அதற்கு ஈடாக உன்னால் எதையும் செய்ய முடியாது என்பதை நினைவில் இருத்து."

(சீராக் 7:27-28)

அன்புச் சகோதரர்களே! எமக்குப் பாலூட்டி, எம்மைத் தாலாட்டி, எம் மழலைச் சொற்களைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தவள் எம் தாயல்லவா! அது மட்டுமா! நாம் நோய்வாய்ப்பட்ட போது எத்தனை இரவுகள் கண்விழித்து, கண்ணீர் விட்டழுது எம்மைக் காப்பாற்றியிருப்பாள். நாம் கல்வி கற்று இந்நிலைக்கு வந்தது யாரால்! அந்தத் தாய், தந்தையர்களால் தான் என்பதை நினைவு கூர்வீர்களா? இல்லவேயில்லை.

சொத்தாசை பிடித்த ஒரு வெறியன் தன் தாயைக் கொலை செய்துவிட்டு தப்பியோட எத்தனித்தபோது தாயின் இதயம் பேசியது. "மகனே கவனமாகச் செல். தவறி விழுந்து விடாதே" என்ற வார்த்தைகளே! பார்த்தீர்களா தாயன்பை!

இவ்வுலகிலுள்ள அனைத்துச் செல்வங்களையும் நாம் ஒரு சில நிமிடங்களில் இழந்துவிடலாம். கூட கோபுரங்கள், மாட மாளிகைகள் சிதறுண்டு போகலாம். ஆனால் தாயன்பை எவராலும் அழிக்க முடியாது.

26-12-04இல் ஏற்பட்ட சுனாமி இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இச் 'சுனாமி'யில் தங்கள் பிள்ளைச் செல்வங்களைப் பலிகொடுத்த பெற்றோர் இன்றும் வடக்கு, கிழக்கு, தெற்கில் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் காட்சி வேதனை நிறைந்தது. தாயன்பிற்கு முடிவேயில்லை.

-ஜோசப் அருள்சாமி, இராஜவெல்ல.

### இறை தூதர் கூறும் வழி

**ஒரு** நாள் அண்ணல் நபியிடம் அருமை ஸஹாபாக்கள் "இறை தூதரே! எங்களில் நல்லடியார்களும் தக்வா உள்ளவர்களும் இருக்கும் பொழுது நாங்கள் அழிக்கப்படுவோமா?" என வினவினார்கள். அதற்கு அவர்கள், "ஆம் தீமைகள் நன்மைகளைவிட அதிகரிக்கப்பட்டால்" என்று பதிலளித்தார்கள்.

இன்று தீயோர்கள் மலிந்து தீமைகள் புரிகின்றனர். இதனால் எங்கு பார்த்தாலும் அழிவுகளும் அனர்த்தங்களும். அன்று அண்ணல் நபி கூறியது இன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

இவற்றை எல்லாம் தடுப்பதற்கு இறை தூதர் கூறும் வழி: "மனிதர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக நீங்கள் நன்மையைப் பிறருக்கு ஏவிக்கொண்டே இருங்கள். தீமையை விட்டும் அவர்களைத் தடுத்துக் கொண்டே இருங்கள். அநியாயக்காரனை அநியாயத்தை விட்டும் தடுத்து, அவனை சத்தியத்தின் பக்கம் இழுத்துக் கொண்டு வந்து சேருங்கள். இவைகள் மூலம் நீங்கள் அல்லாஹ்வால் பாதுகாக்கப்படுவீர்கள்" என்பதுதான்.

-ஆதாரம் : தர்கீப்.

-எம்.சி. கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.630



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 14.09.2005.

கவிதைப் போட்டி இல.630
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### பரிசுக்குரிய கவிதை

### ஏக்கம்

வறுமை நரைத்துவிட்டது!....
செல்வம் சிலரது சட்டைப்பையில்!
இரண்டு கை ஒப்பங்கள் - எங்கள்
இன்னலைத் தீர்க்கு மென்றார்!
சமாதானத்துக்காக - இன்னும்
துப்பாக்கிகள்தான் வெடிக்கின்றன!

சீனிராசா எடிசன்,
கொழும்பு 13.

### கவிதைப் போட்டி இல.627



### தியாக அன்னை

உலகில் எத்தனை தியாகங்கள்
அத்தனையும் உன் தியாகத்திற்கு
ஈடாகுமோ?
நீ தெய்வமானாலும் - உன்
தெய்வீகம் குறையவில்லை
இப்பூமியில்.

–சுமதி, பதுளை.

### நியமனம்

அநாதைப் பட்டியலின்
புதிய அங்கத்துவ
நியமனமோ இக்
குழந்தை....

–ஏ.எம்.றஜீஸாத்,
அட்டாளைச்சேனை – 16.

### எத்தனை பேரோ!

என்னைப் போன்ற அநாதைகள்
இவ்வுலகில் எத்தனை பேர்?
ஆனால் இன்று உன்னைப்
போன்ற
தியாக தீபங்கள் எத்தனை
பேரோ!

–ரெ.ரேணுகா, கொட்டகலை.

### அங்கேயும் இங்கேயும்!

அழுகின்ற
பிள்ளைக்காக
அல்லப்படுகிறது
ஓர் ஆத்மா - அங்கே!
ஆனால் - பல பிள்ளைகளை
அழ வைத்து....
அநாதையாக்கி....
சந்தோஷப்படுகின்றன
விடுதலை எனும் பெயரில்
பல ஆத்மாக்கள் - இங்கே!!

–நதுர்ஷிகா நாகேந்திரன்,
ஆரையம்பதி – 03.

### ஏன் வந்தது?

உலக சமாதானத்துக்காக - நீ
போராடினாய் - இன்று
சமாதானம் ஏன் வந்தது என
நாம் அங்கலாய்க்கிறோம்.

–பரிமளா, யாழ்ப்பாணம்.

### பிறக்கப்போவதில்லை!

உன் போல் யாரையும் - நாம்
பார்க்கவில்லை - தியாகத்திற்கு
உன் போல் இனி யாரும்
பிறக்கப் போவதில்லை.

–மயூரன், கிராண்ட்பாஸ்.

### துக்கம் இல்லை

இங்கே வறுமை இல்லை! - நீ
ஏழைகளின் இதயத்தில்
நிறைந்திருப்பதால்....! உன்னை
நினைக்கையில் துக்கம்
இல்லை
தியாகமே நீயாக
இருப்பதால்....!

–பொன்.செல்வன், புத்தளம்.




### வாழ்கிறேன்

வறுமை வாட்டியது
வயிறு பசித்தது
வழியோ தெரியவில்லை
வந்தாய் நீ கடவுள் போல்
வாழ்த்தினாய் என்றும் வாழ
வாழ்கிறேன் உன் அருளால்
என்றும் அன்னையே!

–விந்தன், திருகோணமலை.

### அனாதை இல்லை

அழுகின்ற இவன் அனாதையா?
அனாதை ஆக்கப்பட்டவனா?
அன்னையை சரணடைந்த இவன்
என்றும் அனாதை இல்லை!

-திவ்யா, மன்னார்.

### அன்பு

தள்ளாடும் வயதிலும்
தாயன்பைக் காட்டும்
தரணி போற்றிய
அன்பிற்கு அன்னை
இவர் அணிகலன்

–கெ.கோடீஸ்வரன்,
களுவாஞ்சிக்குடி.

## வாசகர் சாலை

### வாழ்த்துகிறேன்

திகிலடையச் செய்யும் செய்திகளை
தீபமாய் வெளிக் கொணரும்
தினமுரசே...
வண்ண வண்ண
தோற்றத்தில் உந்தன்
மேனியழகும்......
காட்சியோடு
கச்சிதமாய் வடிவமைத்து....
கட்டமிடப்பட்ட
கவிதைப் போட்டியும்....
வாசகர்களின்
வாசகத்தூவல்களை
வெளிப்படுத்தும்
வாசகர்சாலைப் பகுதியும்.....
கவிதைக்கு
கண்ணியமாய்
களமமைக்கும்
தேன் கிண்ணப் பகுதியும்.....
அரசியல் செய்திகளை
அட்டகாசமாய்.....
அதட்டி விடும்
எக்ஸ்ரே பகுதியும்.....
இன்னும் - உன்னுள்
புதையுண்ட......
அத்தனை அம்சங்களும்
எம்மைக் கவர்ந்தவையே....
ஆக...உன் சேவை
காலமெல்லாம் களங்கமில்லாமல்
கச்சிதமாய் வளர வாழ்த்துகிறேன்...!

-எம்.ரி.எம்.யூனுஸ், காத்தான்குடி.

### வாழ்க முரசே!

நெஞ்சமெல்லாம்
நிறைந்த
தித்திக்கும் தீந்தமிழ்
தினமுரசே!
நித்திலத்தைப்
போல
நீயும் நீடு புகழ்
கொண்டு
எத்திக்கும் உன்
பெயர் ஒலிக்க
மனமார
வாழ்த்துகிறேன்.

–கிஷோனி,
மன்னார்.

### தினமுரசே ஏற்றுக் கொள்!

தினமுரசை படித்தும்
திருந்தாதவர்கள்
எந்தாண்டில்
வாழ்கிறோம்
என்று
தெரியாதவர்கள்.
முரசில்
வெளிவருகின்ற
முகமலர்ச்சி - பல
முக்கிய
முக்காடுகளையும்
மக்களுக்குத்
தேவையான
மாண்புறு
சேவையையும்
மானில
நிலவொளியில்
மாலை...மாலையாய்
சரி எது.....
பிழை எதுவென
அச்சொட்டாய்
பிரித்து(க்)
காட்டுவதைக்
கண்டு
பாரே
கைதட்டி(ப்)
பாராட்டுவதை
தினமுரசே - நீ
ஏற்றுத்தானாக
வேண்டும்.

–.கா.மு.றிஸ்வின்,
மூதூர் – 01.

### மேலும் வளர்க!

உலகெங்கும் தித்தித்து
உனக்கென தனியிடம் பிடித்து
ஓங்கி வரும் தினமுரசே!
வானத்திலிருந்து வரும்
மின்னல்கூட - சத்தத்தோடுதான்
வரும் - ஆனால்
நீ வருவதோ யாருக்கும்
தெரியாமல்.
நீ சுமந்து வரும்
செய்திகளோ! வானின் மின்னலை
விட
பல மடங்கு அதிகம்.
இது மட்டும் போதாது - மேலும்
வளர என் வாழ்த்துக்கள்.

–ரி.ஆனந்த், டோஹா – கட்டார்.

## உங்கள் பக்கம்

### அஹதியா ஆசிரிய, ஆசிரியைகளுக்கு சம்பளப் பணம் வழங்க வேண்டும்

**பல** வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்த அஹதியா இயக்கம், சிறு மரக்கன்றாக இருந்து பெரிய மரமாகி கிளைகள் நிரம்பியதாக பெரிய விருட்சமாக வளர்ந்து மிளிர்கின்றது. இதன் சேவை மகத்தானது. அஹதியா பாடசாலை மூலம் முஸ்லிம் ஆண், பெண் பிள்ளைகள் மார்க்க அறிவைக் கற்றுச் செல்ல வழிவகுக்கின்றது. பெற்றோரும் அஹதியா பாடசாலைக்குப் பெரும் உற்சாகத்துடன் அழைத்துச் செல்கின்றனர். ஆனால் அஹதியா பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகளுக்கு சம்பளப் பணம் வழங்கப்படுவதில்லை என்பது ஒரு குறையாக உள்ளது.

ஒரு சில ஆசிரியைகள் தூர இடங்களில் இருந்து தமது சொந்தச் செலவில் வருகின்றார்கள். வசதி படைத்த ஆசிரியைகள் சேவை மனப்பான்மையுடன் செய்கிறார்கள். ஏழ்மையில் உள்ள ஆசிரியைகளும் நல்ல சேவை மனப்பான்மையுடன் மிகச் சிறப்பாகப் போதிக்கின்றார்கள். ஆசிரியைகளுக்கு சீருடை வழங்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது. இந்த ஆசிரிய, ஆசிரியைகளுக்கு சம்பளம் வழங்க நகரத்தில் அல்லது ஊரில் உள்ள முஸ்லிம் தனவந்தர்கள், கொடை வள்ளல்கள் முன்வர வேண்டும். ஒரு தனவந்தர் மட்டும் எல்லா மாதங்களிலும் சம்பளப் பணம் வழங்குவது சாத்தியப்பட்டு வராது. அப்படி தனவந்தர்கள் விரும்பினால் பெருமனதுடன் ஆசிரிய, ஆசிரியைகளுக்குச் சம்பளப் பணம் வழங்க முன்வரவேண்டும். இந்த வேண்டுகோளைப் புறக்கணிக்காமல் நடைமுறைப்படுத்த உதவ முன்வருமாறு முஸ்லிம் தனவந்தர்களை பெற்றோர்கள் சார்பில் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

-ஏ.எஸ்.எம்.ரவூப், கொழும்பு - 15.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# ஜே.வி.பி. - மஹிந்த உடன்பாடு எவ்வகையில் தமிழர்களுக்கு எதிரானதென தமிழ் ஊடகங்கள் விளக்க வேண்டும்

## அரசியல் விமர்சகர்கள் கருத்து



ஜனதா விமுக்தி பெரமுன சமர்ப்பித்த 12 அம்ச யோசனைகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க ஜே.வி.பி. இணங்கியுள்ளது. இருதரப்பும் விட்டுக் கொடுப்புடனும் நெகிழ்ச்சிப் போக்குடனும் முக்கிய பிரச்சினைகளில் இணக்கம் கண்டிருப்பதானது மாற்றுத்தரப்பினருக்கு எரிச்சலை மூட்டியிருப்பது தவிர்க்க முடியாதது என்று பிரபல அரசியல் ஆய்வாளரான பெரிய தம்பி மணிவண்ணன் தெரிவித்தார். சமாதான முன்னெடுப்பு, தேசிய இனப் பிரச்சினை யுத்த நிறுத்தம், பல்தேசிய கம்பெனிகளின் செயற்பாடுகள் நாட்டின் தேசிய உற்பத்தியை அதிகரித்தல், உட்பட முக்கியஸ்தம் வாய்ந்த பல தேசிய பிரச்சினைகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஜே.வி.பி.க்கும் மத்தியில் முரண்பாடுகள் இருப்பது உண்மைதான். ஆனால் இவை பேசித் தீர்க்கப்படக்கூடிய சிநேகபூர்வமான முரண்பாடுகள். மோதிக் கொள்ளக்கூடிய பகைமை முரண்பாடுகளல்ல. பொது எதிரிகளான உள்நாட்டு வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் இருநேச சக்திகளும் இணைந்து கொள்வது தவிர்க்க முடியாதது. இரண்டாம் உலக யுத்த காலத்தில் தமக்குள் மோதிக் கொண்ட நேச நாடுகள் பொது எதிரியான ஜேர்மனிக்கும் ஜப்பானுக்குமெதிராக ஐக்கியப்பட்டுப் போராடியதே இதற்கு முன்னுதாரமாக் குறிப்பிடலாம். ஜே.வி.பி. தனித்துப் போட்டியிட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் வீழ்ச்சியேற் படும் என்று கருதிய பிற்போக்கு சக்திகளே இவ்வாறான தீய பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிடுகின்றன.

வடக்குக் கிழக்கிற்கான சுனாமி கட்டமைப்பில் திருத்தங்கள் தேவையென்று உயர் நீதிமன்றமே தீர்ப்பளித்திருக்கிறது. எனவே பொதுக்கட்டமைப்பு தொடர்பாக மாற்றங்களையேற்படுத்த இருதரப்பும் இணங்கியிருப்பது தமிழர்களுக்கு எதிரானதல்ல. இதைப்போன்று தான் நோர்வேயின் பங்களிப்பு குறித்து மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று தமிழ் மக்கள் உட்பட பலத் தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தியா போன்ற நாடுகளின் பங்களிப்பை புலிகளும் கோரியிருக்கும் இத்தருணத்தில் அவற்றைத் தமிழ் மக்களுக்கு எதிரான கோரிக்கை என்று கூறுவது அர்த்தமற்றது. இறுதித் தீர்வோடு சம்பந்தப்பட்டே இடைக்காலத் தீர்வும் இருக்க வேண்டுமென்று இருதரப்பும் இணங்கியிருப்பது எந்த வகையில் தமிழ் மக்களுக்கெதிரான தென்று சம்பந்தப்பட்ட தமிழ் ஊடகங்கள் விளக்குவது நல்லது. ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படவேண்டுமென்பது நீண்டகாலமாக இந்த நாட்டில் நிலவி வரும் கோரிக்கையாகும். இதுவும் வடக்கு கிழக்கு மக்களின் விடிவுக்கு எந்த வகையில் எதிராக அமைந்திருக்குமென்பது சம்பந்தப்பட்ட தமிழ் ஊடகங்களுக்கு மட்டுந்தான் தெரியும். பொதுவான வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் பொது அறிக்கை ஐக்கியப்பட்டிருக்கும் இருதரப்பும் ஐக்கியமும் போராட்டமும் என்ற நிலையில் விடயங்களைக் கையாளு வார்கள் என்பதே உண்மை.

## உண்மையும் பொய்யும்

வடக்கு - கிழக்கில் ஜனநாயகமும், பன்முகத்தன்மையும், மனித உரிமைகளும் பேணப்பட வேண்டுமென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி. பிரதிநிதிகளோடு நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது இணக்கம் கண்டிருப்பது எந்த வகையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிரானது என்று சட்டத்தரணி பொன் தியாகராஜா கேள்வி எழுப்புகிறார். மனித உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்களுக்கு முண்டு கொடுப்பவர்களே இவ்வாறான அவதூறுப் பிரசாரங்களில் ஈடுபடுகின்றனரென்றும் அவர் சொன்னார்.

## புலிகளின் யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து ஐ.நா. பிரதிநிதிக்கு ஈ.பி.டி.பி. மகஜர்

இலங்கை அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்குமிடையில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வொன்றினைக் காணுவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தும் முகமாகவே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இந்த எதிர்பார்ப்பு பயனற்று போய்விட்டதென்று இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ.நா. விசேட பிரதிநிதி லக்டார், பிராஹிமியுடன் கடந்த 6ஆம் திகதி கொழும்பில் பேச்சுவார்த்தை நடாத்திய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது. அமைச்சரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா தலைமையில் தூதுக்குழு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

புலிகள் வன்செயல் நடவடிக்கைகளை கைவிட்டு மனித உரிமைகளை மதிக்க வேண்டுமென்பதற்காகவே யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

எனினும் எவ்வித பயனுமின்றி புலிகள் இயக்கம் ஒப்பந்தத்தை மீறி தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறது. அப்பாவிக் குடிமக்களையும் அரசியல் எதிரிகளையும் கடத்துகின்றனர், கொல்லுகின்றனர். சிறுவர்களைத் தமது படையணிகளில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கின்றனர். மக்களை மிரட்டுவதுடன் கப்பமும் வசூலிக்கின்றனர். யுத்த நிறுத்த காலப் பகுதியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட அரசியல் எதிரிகளை கடத்தியுள்ளனர் அல்லது கொன்றிருக்கின்றனர். நூற்றுக்கு மேற்பட்ட குடிமக்களைக் கொன்றிருக்கின்றனர். 2000க்கு மேற்பட்ட ஏழைத்தமிழ் பிள்ளைகளை பலாத்காரமாக கடத்தி தமது படையணிகளில் சேர்ந்துள்ளனர். அரசியல் பன்முகத்தன்மைக்கு சிறிதும் மதிப்பளிக்காத பாஸிச இயக்கமே புலிகள் இயக்கமாகும். 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற தேர்தலில் தமது முகவரான தமிழ் தேசியக் கூட்டமைப்புக்காக பாரிய தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டனர் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்தும் அதனை குழப்புவதற்கு தென்னிலங்கையைச் சேர்ந்த சில சக்திகளுடன் இணைந்து புலிகள் மேற்கொண்ட நடவடிக்னைகள் குறித்தும் இந்த மகஜரில் விளக்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம் காங்கிரஸூம் ஆதரவு

எதிர்காலச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் புலிகளுடன் மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி நடத்தப்படுமென்று ஜே.வி.பி.யுடனான பேச்சுவார்த்தைக்கு இணக்கம் காணப்பட்டிருப்பது ஆரோக்கியமானதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். இதே நேரம் தான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் தரகர்களின் உதவியின்றி நேரடியாகப் பிரபாகரனுடன் பேச முயற்சியெடுப்பேனென்று பிரதமர் கூறியிருப்பதும் வரவேற்கக் கூடியதென்று அவர் கூறினார்.

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம்

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் நியமனங்கள் பெற்றுள்ள சகல பயிலுநர் பட்டாதாரிகளும் அடுத்த மாத முடிவுக்கு முன்னர் நிரந்தரமாக்கப்படுவார்களென்று பிரதமரும் ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். பட்டதாரிப் பயிலுநர் சங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியபோதே பிரதமர் இந்த உறுதிமொழியை வழங்கினார். அரசாங்கம் 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்க முடிவெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டு பேராசிரியருக்கு பிணை வழங்க மறுப்பு

பாலியல் வல்லுறவு வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டிருந்த யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கே.ரீ. கணேசலிங்கத்தின் பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. பதினைந்து வயது சிறுமியொருத்தியை வல்லுறவுக்குள்ளாக்கியதாக இவர் மீது தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணை கடந்த 6ஆம் திகதி யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கென எடுத்துக் கொள்ளப்பட்டது. பேராசிரியர் கணேசலிங்கம் சார்பில் ரவிராஜ் எம்.பி., முன்னாள் எம்.பி. அப்பாத்துரை விநாயகமூர்த்தி, பொன் பூலோகசிங்கம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். எதிராளியை பிணையில் விடுமாறு சட்டத்தரணி களான ரவிராஜ் விநாயகமூர்த்தி ஆகியோர் வாதாடியபோதும் மேலதிக நீதிவான் பிணை வழங்கமறுத்தார். இம்மாதம் 20ஆம் திகதி வரை பேராசிரியரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் நலன்களைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணி எம்.ரெமிடியஸ் எதிராளி தரப்பில் முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் கூறப்பட்டிருப்பதாலும் அவர்கள் சாட்சிகளைத் திசைதிருப்புவார்களென்பதாலும் சந்தேகநபருக்குப் பிணை வழங்கக் கூடாதென்று வாதிட்டார். சட்டத்தரணி ரெமிடியஸ் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மன்றின் சார்பில் ஆஜராகியிருந்தார். பொலிஸாரும் எதிரியைப் பிணையில் விடக் கூடாதென வாதிட்டனர். பாதிக்கப்பட்ட சிறுமிக்குத் தற்போது 16 வயதானதென்றும் கடந்த ஒரு வருட காலமாக அந்தச் சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக் கிறாரென்றும் சட்டத்தரணி ரெமடியஸ் நீதிமன்றில் குறிப்பிட்டார்.

## இரத்தினபுரி அனர்த்தம் தொடர்கதையா?

இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவு ஆகியவை காரணமாக ஏழு அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியுள்ளனர். பல நூற்றுக்கணக்கானோர் வீடு வாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனர். தாழ்நிலப் பகுதியான இரத்தினபுரி மாவட்டத்தில் வருடா வருடமும் வருடத்துக்குச் சில தடவைகளும் வெள்ளப் பெருக்கும் ஏனைய இயற்கை அனர்த்தங்களும் இடம்பெறுவது வாடிக்கையாகி விட்டது. இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று சப்ரகமுவ மாகாண சபைக்கு இரத்தினபுரி இளைஞர் மன்றம் அனுப்பி வைத்த மகஜரில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## தமிழ் எம்.பீ.க்களிடம் இருந்தே கூடுதல் உளவுத் தகவல்கள்

"பெருந்தொகைப் பணச் செலவிலேயே புலனாய்வுப் பிரிவின் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் புலனாய்வு வேலைகளைச் செய்வதென்பது இலகுவான பணியல்ல. ஆனால் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரிடமிருந்தும் எமக்குக் கிடைக்கும் தகவல்களைவிட, தமிழ தேசியக் கட்டமைப்பு எம்.பி.க்கள் சிலரிடமிருந்து எமக்குக் கூடிய பயன்மிக்க தகவல்கள் கிடைக்கின்றன" என்று கேர்ணல் தரத்திலுள்ள அதிகாரியொருவர் குறிப்பிட்டார். ஆகஸ்ட் மாதப் பிற்பகுதியில் கொழும்பு டுப்ளிகேஷன் வீதியிலுள்ள இராணுவ நலன்புரி நிலையத்தில் அவருக்களிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

## இலங்கை விவகாரத்தில் இந்தியா உடனடியாகத் தலையிட வேண்டும்

### -இந்திய இராணுவ அதிகாரி ஜெனரல் சதீஷ் நம்பியார்

"நான் இந்திய அரசு சார்பாகப் பேசவல்லவனில்லை என்ற போதிலும், இலங்கை விவகாரத்தில் இந்தியா மேலும் காத்திரமான பாத்திரமொன்றினை வகிக்க வேண்டுமென்று என்றுமே கூறிவந்துள்ளேன். எல்லாவற்றுக்கும் மேலாக எம்மிரு நாடுகளுக்குமிடையில் பொதுவான நலன்கள், தொடர்புகள் இருக்கின்றன. அத்துடன் அயல் நாடுகளுமாகும். இலங்கையில் நடைபெற்ற வைக்கு நாமும் ஒருவகையில் பொறுப்பாளவர்கள் என்ற வகையில், இலங்கை மக்களுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம் என்று முதன் முதலில் ஒத்துக் கொண்டவன் நான்." இவ்வாறு இந்திய இராணுவத்தின் முன்னாள் பிரதித் தளபதியான சதீஷ் நம்பியார் தெரிவித்தார். "லக்ஷ்மன் கதிர்காமர் இலங்கையின் மிகச் சிறந்த தலைவர்களில் ஒருவர் மட்டுமல்ல, சிறந்த கொள்கைகளையும் கொண்டிருந்தார். அவரின் மரணம் உண்மையிலேயே புலிகளுக்கு கிடைத்த வெற்றியாகும். கதிர்காமரின் படுகொலைக்குப் பின்னர் புலிகள் மீது அழுத்தம் செலுத்த வேண்டிய காலகட்டம் இப்போது சர்வதேச சமூகத்திற்கு ஏற்பட்டுள்ளது. சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களைப் புலிகள் இயக்கம் வெறுமனே தட்டிக் கழித்து விடுமென்று நான் நினைக்கவில்லை. என்றும் அவர் தெரிவித்தார். இலங்கையிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை ஏற்கனவே பார்வையிட்டவர் ஜெனரல் நம்பியார் என்பது குறிப்பிடத்தக்கது. புலிகளும் உயர்பாதுகாப்பு வலயங்களை வைத்துள்ளன. யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரைக்கூட அங்கு செல்வதற்குப் புலிகள் அனுமதிக்கவில்லை. தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு செல்லவும் புலிகள் அனுமதிக்கவில்லை. இது நல்லதல்ல என்றும் சதீஷ் நம்பியார் சொன்னார்.

## தமிழ் எம்.பி.க்கள் - இராணுவ அதிகாரிகள் அந்நியோன்ய கலந்துரையாடல்

தமிழர் கூட்டணி எம்.பி.க்களான ரவிராஜ், சிவாஜிலிங்கம், ஐ.தே.க. எம்.பி.யான மகேஸ்வரன் ஆகியோர் கடந்த முதலாம் திகதி மாலை பலாலி விமான நிலையத்திலுள்ள பாதுகாப்புப் பிரிவினரின் வரவேற்புபசார மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். கொழும்பு வருவதற்காக விமானத்தில் ஏறுவதற்கு முன்னர் இராணுவ அதிகாரிகளுடன் மிக அந்நியோன்யமாக அளவளாவியதைக் காணமுடிந்தது என்கிறார் அப்பகுதியில் கடமையாற்றும் பெண் பாதுகாப்பு அதிகாரியொருவர். கிளிநொச்சியில் முதலாம் திகதி நடைபெற்ற தமிழீழ எழுச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களான ரவிராஜும், சிவாஜிலிங்கமும் கொழும்பிலிருந்து யாழ்.சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. சொந்த அலுவலாக யாழ்.சென்றிருந்த மகேஸ்வரன் இவர்களைப் பலாலி விமான நிலையத்தில் சந்தித்தார்.

## அமைச்சர் டக்ளசுக்கு மகஜர்கள் கையளிப்பு!

பண்டத்தரிப்பு பாத்திமா மாதா தேவாலயத்திற்கு அருகில் வசிக்கும் 25 குடும்பங்கள் தமது அத்தியாவசியத் தேவையான மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். இதே போன்று இளவாலை பெரியவிளான் பகுதியில் இடம் பெயர்ந்து மீளக்குடியேறிய 52 குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் தமது அத்தியாவசிய அடிப்படைத் தேவைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். இவ்விரு மகஜர்களும் குறிப்பிட்ட இடங்களைச் சேர்ந்தவர்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தலைமை அலுவலகத்தில் கையளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அமைச்சர் இக்கோரிக்கைகள் குறித்து நடவடிக்கை எடுப்பதாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உறுதி அளித்துள்ளார்.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அமெரிக்காவிலும் நிதி சேகரிக்கத் தடை?

பிரிட்டனின் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் பட்டியலிலிருந்து இருவாரங்களுக்கு முன்னர் நீக்கப்பட்டு, நிதி சேகரிக்கக் கூடாதென தடைவிதிக்கப்பட்டி ருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அமெரிக்காவில் 'கற்றினா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிதி சேகரிக்கப் போவதாக அறிவித்திருப்பது வேடிக்கையானதும் விஷமத்தனமானதுமாகும். இவ்வாறு கூறுகிறார் இலங்கையின் பிரபல அரசியல் விமர்சகரான ரொஷான் எதிரிசிங்க. இலங்கை அரசாங்கம் பாதிக்கப்பட்ட அமெரிக்க மக்களுக்கு நிவாரண உதவியாக 20 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. புலிகளின் முகவர் அமைப்பென குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், 30 ஆயிரம் டொலர்களை வழங்கப்போவதாக அறிவித்திருப்பது சேட்டைக்குரிய விடயமாகும் என்றும் அவர் சொன்னார். அவுஸ்திரேலியாவிலும் நிதி சேகரிக்கத் தடைவிதிக்கப்பட்டிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் எவ்வாறு 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களை சேகரிக்க முடியும். சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களுக்கு 30 கோடி ரூபாவை வழங்கப் போவதாக பிரபாகரன் அறிவித்ததைப் போன்ற விசமத்தனமான அறிவிப்பே இதுவாகும் என்றும் அவர் சொன்னார். இதற்கிடையில் புலிகளுக்காக ஆயுதங்கள் கொள்வனவு செய்ய, நிதி சேகரிப்பதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அமெரிக்காவில் நிதி சேகரிப்பதற்கு தடைவிதிக்கப்படுமென்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## புலிகளுக்கெதிராக சர்வதேச ரீதியில் மனு

ஜனாதிபதியின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதிய உலக பிரசித்திபெற்ற எழுத்தாளர் கிராம் வில்சன், நோர்வே அரசு புலிகளுக்குச் சார்பாக நடந்து கொள்கின்றதென்று குறிப்பிட்டுள்ளார். இவர் புலிகளுக்கு எதிராகச் சர்வதேச வலையமைப்பு ஊடாக மனுவொன்றில் கையெழுத்து பெறும் வேலைகளை ஆரம்பித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் போன்ற பல நாடுகளின் அரச தலைவர்களுக்கு இவர், இம் மனுவை வலையமைப்பின் மூலம் விடுத்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு முன்வருமாறு இம் மனுவின் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## இலங்கையின் இக்கட்டுக்கு இயலாத்தனங்களே காரணமாகும்

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

தற்போதும் நடைமுறையில் இருப்பதாகக் கூறப்படும் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் அதன் ஆரம்பப் புள்ளியில் வந்து நிற்கிறது. அதன் சுற்றுவட்ட காலப்பகுதியில் நிழல் யுத்தத்திற்கு வாய்ப்புத் தந்ததால் இப்போது நிஜ யுத்தத்தோடு நிர்க்கதியாய் நிற்கிறது. கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டவர்களின் கையாலாகாத்தனத்தினாலும், மத்தியஸ்தர்களின் பக்கச்சார்பு நடவடிக்கைகளாலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் தனது இலக்கை எய்தாமலே காலாவதியாகும் கட்டத்தை அடைந்துள்ளது. நோர்வேயின் தலையீடு இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் எவ்வித முன்னேற்றத்தையும் காணாததால், சமாதானத்துக்கான மத்தியஸ்தர் அல்லது ஏற்பாட்டாளர் பதவியிலிருந்து நோர்வேயை ஓரம்கட்டி, ஐக்கிய நாடுகளின் தலையீடும், கண்காணிப்பும் தேவை என்ற நிலை இலங்கை வாழ் மக்களின் எதிர்பார்ப்பாக மாறியுள்ளது. நோர்வேயினதும் ஸ்கன்டிநேவிய நாடுகளினதும் இயலாமையை தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் போர்நிறுத்தத்தை மீறும் வகையில் இடம் பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களும் படுகொலைகளும் மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகின்றன.

கடந்த இரண்டு வாரத்தில் மட்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதினெட்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. அதில் மூன்று சம்பவங்கள் புலிகளுக்கு எதிராகவும், மிகுதியானவை படைத்தரப்புக்கு எதிராகவும் நடத்தப்பட்டுள்ளன. அதுவும் படையினர் மீது மறைந்திருந்து தாக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமையானது, புலிகள் போரை ஆரம்பித்து விட்டதாகவே கருதவேண்டியுள்ளது.

துர்ப்பாக்கிய நிலை என்னவென்றால், இவ்வாறான சம்பவங்களின் போதெல்லாம் அழையா விருந்தாளியாக ஸ்தலத்திற்குச் செல்லும் கண்காணிப்புக் குழுவினர் வெறுமனே இடத்தைப் பார்வையிடுவதும், தாக்குதல் குறித்து சம்பிரதாயத்துக்காக விசாரித்துத் தெரிந்துகொள்வதும் வழமையாகி விட்டுள்ளது. இவ்வாறான உருப்படியற்ற செயற்பாடுகளால் கண்காணிப்புப் பணியை மட்டுமல்லாது சாதாரணமான மனித உரிமை மீறல்களைக்கூட கவனத்தில் கொள்ள முடியாமல் கண்காணிப்புக் குழுவினர் இருக்கிறார்கள் என்பதை அண்மையில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. சம்பவங்களைப் பதிவு செய்து கோவைப்படுத்தி வைத்துக்கொள்வதற்காகவா கண்காணிப்புக்குழு இலங்கைக்குத் தேவை? யாரை ஏமாற்றுகிறார்கள் என்பது புரியாத புதிராகவே உள்ளது. இந்த விடயத்தில் நோர்வே எச்சசொச்சமாக இருக்கும் கௌரவத்தோடு ஐ.நா. சபையின் தலையீட்டுக்கு வழிவிடுவதே நன்மையாக அமையும்.

இலங்கை மக்களின் சாபக்கேடு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடக்கம், சர்வதேச தலையீடுவரை புதிய ஒன்றை நாடுவதென்பது பழகிப்போய் விட்டது. அதன் தொடர்ச்சியாக ஏற்கனவே பொறுப்புகளை வகித்தவர்களின் இயலாமைகளை அல்லது அனுகுமுறைத் தவறுகளைக் கூட்டிக் கழித்துப் புதிய தலைமையை அல்லது புதிய தலையீடுகளைத் தெரிவு செய்வதும், புதிய அனுகுமுறைகளை அவதானிப்பதுமே இலங்கை தேசம் எதிர்காலத்தை நோக்கி எதிர்கொள்ளும் எதிர்பார்ப்பாகும். பழைய தலையீடு, பழைய போர் நிறுத்தம், பழைய சர்வதேசத் தலையீடு, பழைய கொலைக் கலாசாரம் என்பவை மேலும் தொடராமல் புதிய தலைமை, புதிய பார்வை என்று புதிய மாற்றங்களை நோக்கிப் பயணிப்போம். சமாதானப் பிரியர்களான மக்களின் எதிர்பார்ப்புக்கள் புதிய கதையை நோக்கியதாக இருந்தாலும், தலைமைத்துவங்கள் பழைமைவாத சாக்கடைக்குள்ளேயே பயணிக்குமாக இருந்தால் மீண்டுமொரு ஏமாற்றமே மிஞ்சப் போகிறது.

விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடி, போர்நிறுத்த மீறல்கள், படுகொலைகள், வன்முறைகள் என்பவற்றைக் கடந்து மீண்டுமொரு தேர்தலுக்கு மக்கள் முகம் கொடுக்கப் போகிறார்கள். வாக்களிக்கத் தகுதிபெற்ற ஒவ்வொருவரும் எவ்வகையான பிரசார ஓலங்கள் உங்களை நோக்கி ஒலித்தாலும், கடைசி வினாடியில் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல், கட்சி சார்புகளுக்கு இடம் கொடுக்காமல், அரசியல் ஏமாற்றுத்தனத்துக்கு இடம் கொடுக்காமல் நீங்கள் நேசிக்கும் உண்மையான சமாதானம், நிம்மதியான வாழ்வு என்பவற்றுக்கான புதிய வழிகளை திறக்கக்கூடிய திறவுகோலாக உங்கள் வாக்குகளைப் பாவிப்பீர்கள் என்பதே இலங்கை மாதாவின் எதிர்பார்ப்பாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பிரிவினைப் போராட்டங்களும் பிந்திய நிலைப்பாடுகளும்

## ஈழப் போராட்டம் எத்திசை நோக்கி?

**இன**, மத, மொழி மற்றும் கலாசார அம்சங்கள் சார்ந்த அடிப்படையில் உலகின் பல நாடுகளில் ஆயுதப் போராட்டங்கள் இன்னமும் நடைபெற்று வருகின்றன. இந்தியாவில் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தி வந்த தனி நாட்டு இயக்கம், மற்றும் தெலுங்கானாப் போராட்டங்களென்பதெல்லாம் எப்போதோ முற்றுப்பெற்று விட்டன. இப்போது தெலுங்கானாப் போராட்டத்துக்கு மீளப் புத்துயிரளிக்கப் போவதாக தமிழ் பட நடிகை விஜயசாந்தி அண்மையில் அதிரடி அறிவிப்பு விடுத்திருந்தார். இந்தியாவில் நாகலாந்து, மிசோராம், மணிப்பூர், ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய பகுதிகளிலும் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் இன்னமும் இயங்குகின்றன. மக்கள் யுத்தப் படை போன்ற சிறு சிறு குழுக்கள் ஆங்காங்கே தமிழகத்தில் இயங்கி வருகின்றன. நேபாளத்தில் மாவோதிவாகள் போராடுகின்றார்கள். இதே போன்ற ஆயுதப் போராட்ட இயக்கங்கள் உலகின் பல நாடுகளிலும் வியாபித்திருக்கின்றன. முஸ்லிம் அடிப்படைவாத இயக்கங்களான அல்-குவைதா போன்றவை ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்காவரை வியாபித்துச் செயற்பட்டு வருகின்றன. ஒட்டுமொத்தமாகச் சொல்வதானால் அடக்குமுறைக்கெதிராகப் போராடுகின்ற ஆயுத இயக்கங்களும் இருக்கின்றன. அடக்குமுறைக்காகப் போராடுகின்ற ஆயுத சக்திகளும் இருக்கின்றன. இந்த ஆயுத இயக்கங்களுக்கு ஆயுத வியாபாரிகள் - மத ரீதியான, அரசியல் ரீதியான சக்திகள், ஏன் சில நாடுகள்கூட உந்து சக்திகளாகத் திகழ்கின்றன.

இலங்கையில்கூட அந்நியர் ஆட்சிக் காலத்தில் ஆங்காங்கே கிளர்ச்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. 'சூரியமல்' இயக்கம் போன்ற சமாதான செயற்பாடுகளைப் பிரிட்டிஷ் காலத்தில் இடதுசாரிகள் ஆட்சிக்கெதிராக நடத்தியிருக்கிறார்கள். சுதந்திரத்துக்குப் பின்னரான முதல் ஆயுதக் கிளர்ச்சியை ஜனதா விமுக்தி பெரமுன 1971ஆம் ஆண்டு மேற்கொண்டு தோல்வியைச் சந்தித்தது. சாதாரண ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரை அடித்தளமாகக் கொண்டு போராட்டச் சிந்தனையால் உந்தப் பெற்ற புத்திஜீவிகள் தலைமை கொடுத்த கிளர்ச்சி அது. பல பத்தாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் பலியானார் களென்று ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவித்தன. பெரும்பாலும் நாட்டின் தமிழ் பகுதிகள் தவிர்ந்த சிங்களப் பிரதேசங்களில் அக் கிளர்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நூற்றுக்கு நூறு சதவீதம் சிங்கள இளைஞர், யுவதிகளே இக் கிளர்ச்சி இயக்கத்தில் பங்குபற்றினர்.

மறுபுறத்தில் நூற்றுக்கு நூறு சதவீதம் தமிழ் இளைஞர், யுவதிகளை உள்ளடக்கிப் பெரும்பாலும் தமிழர்களின் வரலாற்று ரீதியான தாயகப் பகுதியை மையமாக வைத்து தமிழீழ ஆயுதக் குழுக்கள் நடத்திவந்த பிரிவினைப் போராட்டம் உக்கி உருக்குலைந்து இன்று ஓர் அந்தத்துக்கு வந்து நிற்கிறது. ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ரெலோ, புலிகள் ஆகிய ஐந்து முக்கிய இயக்கங்களை முன்னிறுத்தி தமிழீழம் கோரி நடத்தப்பட்டு வந்த போராட்டம், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தோடு திசைமாறிப் போய்விட்டது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முன்னும் பின்னும் ஏனைய சகல தமிழ் இயக்கங்களும் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டன. புலிகளின் தாக்குதல்களால் ஏனைய இயக்கங்கள் பெரும்பாலும் உறங்கு நிலைக்குப் போய் விட்டன. இன்னமும் களத்தில் புலிகள் இயக்கம் மட்டுமே நிற்கிறது. உள்ளக சுயாட்சிக்கான பொறி முறையொன்றினை விரும்புவதாகப் புலிகள் இயக்கம் ஒஸ்லோவில் தெரிவித்தபோதிலும் நடைமுறைச் செயற்பாடுகள் அதற்கு எதிர்மாற்றமானவையாகவே இருக்கின்றன. மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் கொல்லப்படுகிறார்கள். சிறுவர்கள் புலிகளின் படையணிகளில் சேர்க்கப்படுகின்றார்கள். தமிழ் பகுதிகளில் கப்பம், வரி வசூலிப்புக்கள் தாராளமாகவே இடம்பெறுகின்றன. மாற்றுக் கருத்துக்கள் மறுக்கப்படுகின்றன. ஜனநாயகமும் பன்முகத்தன்மையும் அறவே பேணப்படுவதில்லை. எனவே இன்றுவரை தமிழீழத்துக்காகவே - அதாவது நாட்டின் பிரிவினைக்காகவே புலிகள் போராடுகின்றார்கள் என்று கொள்ள வேண்டியுள்ளது. மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்றும் பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற மூலக் கொள்கையோடு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியென்ற ஒரேயொரு அமைப்பு மட்டும், புலிகளின் பாரிய அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வடக்கு - கிழக்கில் இன்னமும் செயற்பட்டு வருகிறது. புலிகள் தனிநாட்டுக்காக போராடுகின்றனர் அல்லது பம்மாத்துக் காட்டுகின்றனர். ஈ.பி.டி.பி. உள்ளக சுயாட்சியை மையமாக வைத்து ஜனநாயக வழியில் போராடுகின்றது. இனப் பிரச்சினையென்ற இமாலயப் பிரச்சினையின் களநிலை இதுதான்.

இந்தோனேசியாவின் ஆச்சே மாநிலப் போராளிகள், பிரிட்டிஷின் ஐரிஷ் குடியரசுப் படையினர், சூடானின் தென்பகுதிப் போராளிகள், பாலஸ்தீனப் போராளிகளெனப் பலரின் போராட்டச் செயற்பாடுகளெல்லாம் இன்று புதிய கட்டத்தை எட்டியுள்ளன. இந்த வகையில் புலிகளின் போராட்டத்தையும் நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. பாலஸ்தீனப் போராட்டம் தவிர ஏனைய போராட்டங்களுக்கெல்லாம் பல நூற்றாண்டுகால வரலாற்றுக் காரணிகள் இருக்கின்றன. அயர்லாந்துப் பிரச்சினை முன்னூறு, நானூறு ஆண்டுகால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. இலங்கையிலும்கூட நல்லூர் இராஜதானி, கண்டிய இராஜதானி, கோட்டே இராஜதானியென்று பல இராஜதானிகள் இருந்தமையும் நல்லூர் தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. இதனால்தான் “ஆண்ட தமிழினம் மீண்டுமொருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை” என்று ஒரு கவிஞன் பாட்டுப் பாடினான்.

வெளிவாரி சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு முதலாம் உலக யுத்த காலப் பகுதியை அண்டியே பிரசித்தி பெற்றது. முதலாம், இரண்டாம் உலக யுத்த காலப் பகுதிகளில் பல்வேறு தேசிய இனங்களின் அடிப்படையில் பல்வேறு தேசங்கள் தோற்றம் பெற்றன. இனப் பிரச்சினையைச் சோஷலிஸ நாடுகளே வெற்றிகரமாகக் கையாண்டு வந்தனவென்று மார்க்ஷிஸ்டுகள் கூறி வந்தனர். ஆனால் இவர்கள் ஆட்சி புரிந்த சோவியத் ரஷ்ய சோஷலிஸக் குடியரசு, அல்பேனியா, யூகோஸ்லாவியா, செக்கோஸ்லவாக்கியா போன்ற நாடுகளெல்லாம் அண்மைக் காலங்களில் துண்டு துண்டுகளாகச் சிதைந்து போய் விட்டன.

1980களில் சோவியத் ரஷ்யாவின் ஜனாதிபதியாகவிருந்த மிக்கேய்ல் கொர்பச்சேவ் அமுல்படுத்திய 'கிளாஸ்நொற்', 'பெரோஸ்சொய்க்கா' போன்ற சீர்திருத்தச் செயற்பாடுகளே சோவியத் ஒன்றியம் பல்வேறு நாடுகளாகச் சிதைந்து போனதற்குக் காரணமென்று சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

அன்வர் ஹொக்சாவின் தலைமையின் கீழ் செழிப்புற்றுத் திகழ்ந்த சோஷலிஸ அல்பேனியா, போராட்டங்களால் சிதைவுற்று விட்டன. இனப்படுகொலைக் குற்றச்சாட்டின் பெயரில் ஸ்லோடன் மிலோசெவிச் ஹேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டிருக்கிறார். பிரபாகரனையும் இனப்படுகொலைக் குற்றச்சாட்டின் பேரில் சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவதற்கான முன்முயற்சிகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற குரல்களும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நேட்டோ நாடுகள் 78 நாட்களாகத் தொடர் குண்டு வீச்சுக்கள் நடத்தியே செர்பிய - பொஸ்னிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அணிசேரா நாடுகள் இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரான மார்ஷல் டிட்டோவின் தலைமையின் கீழிருந்த சோஷலிஸ யூகோஸ்லாவியாவும் சிதைந்துபோய் விட்டது. செக்கோஸ்லவாக்கியா என்ற சோஷலிசக் குடியரசும் செக், ஸ்லோவாக் என்ற இனங்களின் அடிப்படையில் இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டன. அந்நியத் தலையீடுகளினால் சிதைக்கப்பட்ட சோஷலிஸ நாடுகள் இவை.

**சிங்கள அரசுகள் பேரினவாதப் போக்கைக் கைவிட்டுத் தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு தயாராகி நிற்கும் இந்நிலையில், சந்தர்ப்பத்தை புலிகள் இயக்கம் தவறவிட்டுவிடக் கூடாது. ஆண்ட தமிழினம் மீண்டுமொருமுறை வடக்குக் கிழக்கில் ஆளலாம். ஆனால் மாளக்கூடாது. ஜனநாயக வழியில் தமிழ் மக்களும் புலிகளும் சிந்தித்தால் தீர்வு கிடைக்கும். இல்லை யேல் சூறாவளி சுழன்றடித்து நிலைமைகளை தலைகீழாக மாற்றிவிடும். உள்ளக சுயாட்சியே இருக்கின்ற ஒரேயொரு முடிவாகும்**

இந்தோனேசியாவின் ஆச்சே மாநிலப் போராளிகள் யுத்த நிறுத்த செயற்பாட்டுக்கு வந்து சமாதானத் தீர்வை நோக்கி முன்னேறுகிறார்கள். சுனாமிக்கு இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட உயிர்களைப் பலிகொடுத்த ஆச்சே மாநிலம், இரத்தம் சிந்திப் படித்த பாடம்தான் சமாதானத் தேவை. எத்தனையோ சமாதான ஒப்பந்தங்களைப் பிரித்தானிய அரசுடன் செய்து கொண்ட ஐரிஷ் குடியரசுப் படை, நிரந்தரத் தீர்வின் விளிம்பை எட்டி நிற்கிறது. லண்டன் தொடர் குண்டு வெடிப்புகளும் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் ஐரிஷ் மக்களும் ஐரிஷ் குடியரசுப் படையின் அரசியல் பிரிவான 'சின் பெய்ன்' மீது விடுத்த நிர்ப்பந்தமே இதற்குக் காரணம். ஐரிஷ் பிரச்சினை முன்னூறு, நானூறு வருட காலப் பழைமை மிக்கது. 'சுமார் 51 சதவீதம் புரட்டஸ்தாந்து சமய மக்களையும் 38 சதவீதம் ரோமன் கத்தோலிக்க மக்களையும் கொண்டது வட அயர்லாந்து. பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் வெறும் மதம் சார்ந்த போராட்டமல்ல. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் பாலஸ்தீன மக்களின் தாயக பூமியில் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளின் ஆசீர்வாதத்துடனும் அனுசரணையுடனும் உருவாக்கப்பட்டதே இஸ்ரேல். ஹிட்லர் போன்ற இன வெறியர்களால் முகாம்களில் அடைக்கப்பட்டு, நச்சுவாயு செலுத்தி இலட்சக்கணக்கில் கொல்லப்பட்ட யூத மக்களுக்காக உருவாக்கப்பட்ட இஸ்ரேல், பின்னாட்களில் பாலஸ்தீன மக்களின் இதயங்களில் நெருஞ்சி முள்ளாகக் குத்தத் தொடங்கியது. 1967ஆம் ஆண்டுவரை யுத்தங்களை நடத்தி, பாலஸ்தீனப் பிரதேசங்களை இஸ்ரேல் அபகரித்துக் கொண்டது. ஏழு போராட்ட இயக்கங்களை ஐக்கியப்படுத்தி அல்-பதா என்ற கூட்டமைப்பின் கீழ் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் வீரமிக்க போராட்டங்களை நடத்தி வந்தார். 'காம்ப்டேவி' ஒப்பந்தத்தின் மூலம் இரு பகுதித் தலைவர்களும் மேற்கொண்ட சமாதானத் தீர்வு முயற்சி, அவர்களுக்கு நோபல் சமாதானப் பரிசைப் பெற்றுத் தந்ததுதான் மிச்சம். பிரச்சினை இன்றுவரையும் நீடித்தாலும் காஸா பள்ளத்தாக்கிலிருந்து இஸ்ரேலியக் குடியிருப்புக்களை அகற்ற எடுக்கப்பட்ட நடிவடிக்கைகள் ஒலிவ் கிளையில் புதிய இலைகள் துளிர் விடுவதைக் காட்டுகிறது. இஸ்ரேலைப் பாலஸ்தீன மண்ணிலிருந்து விரட்டியடிப்போமெனச் சூளுரைத்த பாலஸ்தீனத் தலைவர்கள் காலவோட்டத்தில் இஸ்ரேலை அங்கீகரித்தார்கள். இஸ்ரேலும் பாலஸ்தீன இராஜ்யத்தை அங்கீகரித்தது.

இவற்றிலிருந்து இலங்கையர்களாகிய நாம், குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் கற்றுக் கொள்ள வேண்டிய காத்திரமான பாடங்கள் இருக்கின்றன. ஆச்சே, ஐ.ஆர்.ஏ., தமிழீழப் போராட்டங்கள் கூர்மையாக வெடித்து ஏறத்தாழ மூன்று தசாப்தங்களைத் தாண்டி விட்டன அல்லது எட்டுகின்றன. இம் மூன்று அமைப்புகளுமே ஆளும் தரப்புக்களுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலும் சமாதான ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டுள்ளன. இலங்கையில் மட்டும் வெளிவிவகார அமைச்சரை - அதுவும் ஒரு தமிழரைக் கொல்லுமளவுக்குப் போராட்டம் சமாதான காலத்தில் வேகம் பெற்றிருக்கிறது.

உலகளாவிய ரீதியில் மதிப்புப் பெற்றிருந்த கதிர்காமரின் கொலை, புலிகள் இயக்கத்தின் மங்கு சனிக்கு மற்றொரு 'வீழ்ச்சிப் படியென்று விமர்சகர்கள் கூறுவதை நாம் தட்டிக் கழித்துவிட முடியாது. ராஜீவ் காந்தியைக் கொன்றதன் மூலம் எப்படி இந்திய மக்களினதும் குறிப்பாகத் தமிழக மக்களினதும், இந்திய - தமிழக அரசுகளினதும் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டார்களோ அதனையும் விட மோசமான வெறுப்பை உலகளாவிய ரீதியில் கதிர்காமரின் கொலை மூலம் சம்பாதித்திருக்கிறார்கள். புலிகள் இயக்கம் விடுதலைப் போராட்ட இயக்கமா? அல்லது தறுதலைப் போராட்ட இயக்கமா? என்பதற்கு கதிர்காமரின் கொலை 'ஓர் அளவுகோலாக அமைந்து விட்டது. இதன் வெளிப்பாடாகத்தான் ஐ.நா. சபையையும் ஐ.நா. அமைதிப் படையையும் இலங்கை விவகாரத்தில் தலையிடுமாறு ஜனாதிபதி கோரியுள்ளார். யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீள்பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் வலுவாக எழுந்துள்ளது. சர்வதேச அழுத்தம் புலிகளுக்கெதிராகவே திரும்பியுள்ளது. இலங்கையின் நட்பு நாடான இந்தியா புலிகள் இயக்கத்தின் மீது நெற்றிக் கண் பார்வையைச் செலுத்திக் கொண்டிருக்கிறது. அண்டை நாடுகளான சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகியவை ஆயுத உதவிகள் உட்பட அனைத்து உதவிகளையும் இலங்கைக்கு வழங்கத் தயாராகவுள்ளன. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற சக்திமிக்க நாடுகளும் புலிகளுக்கெதிராகவே நிற்கின்றன. 25 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய யூனியன், புலிகள் இயக்கத்தை தடைசெய்வது பற்றி வலுவாக ஆராய்ந்து வருகிறது. இந் நிலையில் தனி நாட்டுப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் சாத்தியம் உண்டா என்பதை தமிழ் மக்களும் குறிப்பாகப் புலிகளும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சிங்கள அரசுகள் பேரினவாதப் போக்கைக் கைவிட்டுத் தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு தயாராகி நிற்கும் இந்நிலையில், சந்தர்ப்பத்தை புலிகள் இயக்கம் தவறவிட்டுவிடக் கூடாது. ஆண்ட தமிழினம் மீண்டுமொருமுறை வடக்குக் கிழக்கில் ஆளலாம். ஆனால் மாளக்கூடாது. ஜனநாயக வழியில் தமிழ் மக்களும் புலிகளும் சிந்தித்தால் தீர்வு கிடைக்கும். இல்லை யேல் சூறாவளி சுழன்றடித்து நிலைமைகளை தலைகீழாக மாற்றிவிடும். உள்ளக சுயாட்சியே இருக்கின்ற ஒரேயொரு முடிவாகும். ■

---

## ஊரிலிருந்து....



நல்லூர்க் கந்தன்ர தேர்த்திருவிழா பக்தி மயமா நடந்து, மகோற்சவமும் முடிஞ்சுது. பத்திரிகை, வானொலி மூலமும் ஸ்பீக்கர் கட்டியும் புலிகள் தங்கட எழுச்சிக்கு கூப்பிட்டும் போகாத சனங்களை, நல்லூர்கந்தன் இருந்த இடத்தில இருந்துகொண்டு இலட்சக்கணக்கில திரட்டிக் காட்டிப் போட்டார். ஆனா பாருங்கோ திரு விழாக் காலத்தில 158 பவுண் நகை, 3 மோட்டார் சைக்கிள்கள், 60 இற்கு மேல சைக்கிள்கள் திருட்டுப் போயிருக்குது. ஊரில இருந்து கிளம்புறதுக்கு முதல், தவற விடப்பட்ட பொருட்களை புலிகள் மீளளிக்கினம் எண்டு கேள்விப்பட்டு அங்க போனன். பிரமாதமாய் விளம்பரம் செய்து போட்டு அங்க இருந்த சாமான்கள் என்ன தெரியுமோ? ஒற்றைக்கால் செருப்பு, கிழிஞ்சு குடை, தலைக் கிளிப் போன்றவைதான் அப்ப மற்றச் சாமான்கள்? மூச்!....

யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளரும் புலிகளின் முக்கியஸ்தருமாகிய ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவமும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் குடாநாட்டை மட்டுமல்ல முழு நாட்டையுமே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. கே.ரீ.கணேசலிங்கம் என்பவரை

# பேராசிரியரின் வல்லுறவு

# தேசியத்திற்கு தேவைதானா?

யாழ். பல்கலைக்கழக அரச அறிவியல் துறை விரிவுரையாளர் என்பதை விட புலிகள் இயக்கத்தின் மற்றுமோர் மதியுரைஞர் எனச் சொல்வதே பொருத்தமாக இருக்கும். அந்த அளவிற்கு புலிகளின் அரசியல் துறையினருடன் நெருக்கமாக இருந்தார் என்பதுடன் அவர்களுக்கு வேண்டப்பட்டவராகவும் காணப்பட்டார். யாழ். மாவட்ட கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் ஆலோசகர் கே.ரீ.கணேசலிங்கம் என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. இவையாவும் வெளி உலகிற்கு நன்கு தெரிந்த விடயங்கள். ஆனால் அவரின் மறுபக்கம் வெளிப்பட்டு, குட்டுக்கள் அம்பலமாகி அவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டபோது அது பலரின் வயிற்றில் புளியைக் கரைத்தது. அவருடனான தம் தொடர்பினை பிரபலமானவர்கள் பலர் மறைக்க முற்பட்டனர் என்பதை விட அவரது நடவடிக்கைகளை தேசியம் பேசுபவர்கள் எனப்படுவோர் மறைக்க முற்பட்ட விடயம்தான் இன்று பலத்த கேள்விக் குறியாகியுள்ளது.

உண்மையில் நடந்தது என்ன?

கே.ரீ.கணேசலிங்கத்தின் வீட்டில் 15 வயதுடைய சிறுமி ஒருவர் வீட்டு வேலைக்கென அமர்த்தப்பட்டிருக்கின்றார். முதற்கோணல் முற்றும் கோணல் என்பது போலவே இவ்விடயத்தின் ஆரம்பமே அரசியல் விரிவுரையாளரான இவர் சட்டத்தினை மீறி நடந்துள்ளார் என்பதைப் புலப்படுத்துகிறது. இலங்கையில் இளம்பராயத்தினரை வேலைக்கமர்த்துவது சட்டப்படி குற்றம். இதன் மூலம் அச்சிறுமியின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது. இதில் கவனிக்க வேண்டிய இன்னுமொரு விடயம், ஒரு காலத்தில் மலையக, இந்திய வம்சாவளி மக்களின் இளம் பராயத்தினரே நாடு முழுவதிலும் வீட்டு வேலைகளில் அமர்த்தப்பட்டிருந்தனர். இவ்வாறு வேலைக்கு அமர்த்தப்பட்டோரில் கொழும்பு மாவட்டத்திற்கு அடுத்தபடியாக யாழ்ப்பாணமே இரண்டாவதாகத் திகழ்ந்தது. காலவோட்டத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் சமூக, பொருளாதார, கல்வியில் மலையகம் முன்னேறியபடியினால் தற்போது அங்கிருந்து வீட்டு வேலைக்குச் செல்லும் இளம் பராயத்தினரின் தொகை அருகிவிட்டாலும் முற்றாக நிறுத்தப்படவில்லை. மறுபுறத்தில் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட போர்ச்சூழலினாலும் அரசியல்

> **கணேசலிங்கம் மேற்கொண்ட மோசமான பாலியல் வன்முறையானது ஓரிரண்டு தடவைகள் அல்ல. 40க்கும் மேற்பட்ட தடவைகள் என பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் அச்சிறுமி தெரிவித்துள்ளார். அதுவும் நல்ல குடும்பத் தலைவனாகக் காணப்படும் கணேசலிங்கம், பிள்ளைகளைக் கல்வி கற்பதற்கும் பணிக்கும் அனுப்பி வைக்கும் அன்பான தகப்பன். தன் மனைவியை அவர் பணி புரியும் திணைக்களத்திலேயே கூட்டிச்சென்று விடும் நல்ல கணவன். அதன்பின் பல்கலைக்கழகம் செல்லுவதற்கு முன் வீட்டிற்கு வரும் கணேசலிங்கம் தனது வக்கிரத்தைக் காட்டத் தொடங்குவார்**

மாற்றங்களினாலும் புலிகளின் இளம் பராய ஆட்சேர்ப்பினாலும் வீட்டு வேலைகளுக்கு பால்ய வயதினரை அமர்த்துதல் என்பது ஏறக்குறைய முடிவுக்கு வந்துவிட்ட விடயமாகவே கருதப்பட்டது.

கே.ரீ.கணேசலிங்கம் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்ட சிறுமி மலையக இந்திய வம்சாவளி இனத்தைச் சேர்ந்தவர். (அவரது பெயர் அவரது எதிர்கால நலன் கருதி குறிப்பிடப்படவில்லை) காலவோட்டத்தில் அங்கிருந்து இடம் பெயர்ந்து வன்னி புதுக்குடியிருப்பில் அச்சிறுமியின் குடும்பம் குடியேறியது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடுகளில் வன்னியைச் சேர்ந்தோர் வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுவது என்பது ஒன்றும் புதினமான விடயம் அல்ல. இன்னும் ஏராளமான யாழ்ப்பாணத்தவர்களின் வீட்டில் வன்னியைச் சேர்ந்தோர் பணி புரிவதுடன், கடைகள், தேநீர்ச்சாலைகளிலும் அவர்கள் வேலை செய்வது கண்கூடான விடயம். ஆனால் அதற்கு ஒரு வரையறையினை காணமுடியும். அவர்கள் பால்ய வயதை உடையவர்களாக இருக்கமாட்டார்கள். அவ்வாறு இருந்தாலும் சம்பளத்திற்கு அன்றி தெரிந்தவர்கள், உறவினர்களாகவே காணப்படுவார்கள். அதுவும் சுகவீனம், பிரசவம், குழந்தைப் பராமரிப்பு போன்ற நிலைமைகளிலேயே கூடமாட ஒத்தாசைக்கு அழைக்கப்பட்டவர்களாக இருப்பர்.

நிலைமை இப்படி இருக்கையில், முழுக்க முழுக்க புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து ஒரு சிறுமி புலிகளின் கண்களில் மண்ணைத்தூவிவிட்டு யாழ்ப்பாணத்தில் வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டதென்பதானது பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

தமது படையணிகளுக்கு ஆட்சேர்ப்பில் புலிகள் எவ்வகையில் செயற்படுகின்றார்கள் என்பது உலகறிந்த விடயம். வயது, பால் வேறுபாடின்றி பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரத்திற்கு மேற்பட்டோரை அவர்கள் சமாதான ஒப்பந்தத்திற்குப் பின்னர் தமது படையணிகளில் இணைத்ததை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் கூட தனது அறிக்கையில் வெளிப்படுத்தியிருந்தது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் வடமராட்சியில் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த இரு சிறுமிகளைப் புலிகள் ஆயுத பயிற்சிக்குப் பிடித்துச் சென்ற சம்பவம் அறியப்பட்ட நிலையில், இன்னமும் கடுமையான பாஸ் நடைமுறையில்



இருக்கும் புலிகளின் கட்டுப்பாட்டு வன்னிப் பிரதேசத்தில் இருந்து, அரச கட்டுப்பாட்டு யாழ். பகுதிக்கு வீட்டு வேலைக்கென ஓர் சிறுமி அழைத்து வரப்பட்டதானது பலரது புருவத்தை உயர்த்தவைத்துள்ளது. இது எவ்வாறு சாத்தியம் எனும் கேள்வியை விட புலிகள் மத்தியில் கணேசலிங்கத்திற்கு எவ்வளவு செல்வாக்கு உள்ளது என்பதே இதில் பதிலாக உள்ளது.

மறுபுறம் கணேசலிங்கம் ஓர் குடும்பத் தலைவன். 3 பிள்ளைகளின் தந்தை. அதில் இருவர் பெண்பிள்ளைகள். மூத்த பெண் பிள்ளை அரச வங்கி ஒன்றில் நியமனம் பெற்று பணியாற்றுகின்றார். ஏனைய இருவரும் பாடசாலையில் படிக்கின்றார்கள். மனைவியோ, அரச திணைக்களம் ஒன்றில் முக்கியமான பதவி ஒன்றில் இருக்கின்றார். இப்பேர்ப்பட்ட பின்னணியில்தான் கணேசலிங்கத்தின் மறுபுறம் அதாவது சுயரூபம் வெளிப்பட்டுள்ளது.

அச்சிறுமி மீது கணேசலிங்கம் மேற்கொண்ட மோசமான பாலியல் வன்முறையானது ஓரிரண்டு தடவைகள் அல்ல. 40க்கும் மேற்பட்ட தடவைகள் என பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் அச்சிறுமி தெரிவித்துள்ளார். அதுவும் நல்ல குடும்பத் தலைவனாகக் காணப்படும் கணேசலிங்கம், பிள்ளைகளைக் கல்வி கற்பதற்கும் பணிக்கும் அனுப்பி வைக்கும் அன்பான தகப்பன். தன் மனைவியை அவர் பணி புரியும் திணைக்களத்திலேயே கூட்டிச்சென்று விடும் நல்ல கணவன். அதன்பின் பல்கலைக்கழகம் செல்லுவதற்கு முன் வீட்டிற்கு வரும் கணேசலிங்கம் தனது வக்கிரத்தைக் காட்டத் தொடங்குவார். இச்சம்பவம் வெளியே தெரிய வருமாயின் கொலைப்பயமுறுத்தல் கூட அவரால் தனக்கு விடுக்கப்பட்டதாக அச்சிறுமி கூறியுள்ளார். ஆனால், எதிர்பாராத விதமாக அவள் கர்ப்பமடையவே மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தற்கொலைக்கு முயன்றுள்ளாள் அந்தச் சிறுமி.

இந்நிலையில் இவ்விடயம் உற்றார்களினால் யாழ். வேம்படிக்கு முன்னால் உள்ள சிறுவர் பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு, யாழ். பொலிஸாரின் பெண்கள் சிறுவர்

அலசுவது
**- ஜெ.கே. -**

நல பாதுகாப்புப் பிரிவினரால் சிறுமி காப்பாற்றப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள்.

'ஊருக்குத்தான் உபதேசம் உனக்கில்லையடி' என்பது போல பொங்கு தமிழின் மூலமும், மக்களின் எழுச்சி பிரகடனத்தின் மூலமும் புலிகளினூடாகத் தேசியத்தை போதித்தவர் தான், தேசிய சட்டத்தை மீறி உள்ளே இருக்கின்றார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் நாளிதழ், கணேசலிங்கத்திடமே முதலாவது கருத்தை கேட்டிருந்தது. அதற்கு அவர் கூறியிருந்தார். "இலங்கை அரசு தமிழர்களுடைய அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் என நாங்கள் கருதினால் அது எங்களை முட்டாளாக்கும் செயற்பாடு" (உதயன் 22.05.2005) எனக் கூறியவர், இன்று தானே சமூகப் பிரச்சினையாகி விட்டார் என்பதுதான் வரலாறு.

---

## அதிரடி அய்யாத்துரை



**இப்போது** அதிகாரத் தரப்பாருக்கும் - ரெண்டெழுத்தாருக்குமிடையில பேச்சுக்களை ஏற்பாடு செய்யிறவையை அதிகார அம்மணிதான் ஆரம்பத்தில அழைச்சவ எண்டது உலகத்துக்கே தெரியும். துரதிர்ஷ்டவசமாக ஏற்பாட்டுக்கு வந்தவை ஒரு தரப்பாருக்கு எடுபிடியாக்களாக எடுபட்டுப் போயிட்டினம். இனி அவையளாலை உருப்படியா ஒண்டையும் செய்ய முடியாதெண்டிட்டு அதிகார அம்மணி ஐக்கியமான நாட்டுச் சபையைத் தலையிடுங்கோவனெண்டு கேட்டிருக்காவாம், அவை தங்கட பிரதிநிதி ஒருவரை அனுப்பி நிலைமை எப்படி இருக்கெண்டு நாடி புடிச்சு பார்த்துட்டு வாங்கோ எண்டு அனுப்பியிருக்கினம். அப்புடியெண்டால் இவ்வளவு நாளும் எங்கட நாட்டு விவகாரங்களை விளங்கிக் கொள்ளாமத்தான் அங்க நிண்டு கொண்டு கதை விட்டிருக்கினமாக்கும். அதிலையும் கௌசல்யனுக்கு ஒரு கண்டனம், கதிர்காமருக்கு ஒரு கண்டனம் எண்டு விழுகிற கொலைகளை வச்சுக் கொண்டு குத்துமதிப்பா அறிக்கை விட்டிருக்கினம். கோபியான அண்ணா உங்கட குசும்புகளை கடைசியா எங்கட விசயத்திலையும் காட்டிப்போட்டீங்களே எண்டு நினைக்கேக்கதான் எங்கையோ நெருடுமாப்போல இருக்குதுங்கோ.....

**மலையகத்தில** முன்னணி நடத்திறவர் அங்க இருக்கிற சின்னஞ் சிறுசுகளை பயிற்சிக்காகப் பிடிச்சுக் குடுக்கிறார் எண்டும் உயிர் கொல்லிக் கருவிகளின்ர வருகைக்கும் வழிவிடுறார் எண்டும் தலையில அடிச்சுக் கொண்டனான். அதையெல்லாம் யாரும் கண்டுகொள்ளாம இருந்திட்டினம். இப்ப என்ன ஆகியிருக்கு, மண்வெட்டியாரின்ர முதலுக்கே மோசம் வந்திட்டுது. கஷ்டப்பட்டு சீவியம் நடத்திற உந்தச் சனத்தின்ர பெயராலை பொலிரிக்ஸ் பண்ணிக்கொண்டு, ரெண்டெழுத்தாரின்ர தேசியப் புழுக்கத்தில இருக்கிற இவர், மக்களுக்காக ஒண்டும் செய்யமாட்டார் எண்ட உண்மையை புரிஞ்சுகொண்ட கொஞ்சப் பேர் முன்னணியில இருந்து கொண்டே பின்னாலை ஒரு அணியை உருவாக்கியிருக்கினம். அதின்ர ஆரம்பக் கட்டமா மகிந்தமானவருக்கு எலக்ஷனில சப்போட்டும் பண்ணப் போகினமாம்.

மகிந்தமானவரும் உவையின்ர மனமாற்றத்தை மதிச்சு அவை கேட்ட கோரிக்கைகளுக்கு பச்சைக் கொடியைக் காட்டிப் போட்டாராம். உதாலை மண்வெட்டியார் மனமுடைஞ்சு போய் இருக்கிறாராம். வீட்டுக்குள்ள பிரச்சினையை வைச்சுக் கொண்டு ஊருக்குப் பஞ்சாயத்துப் பார்க்கப் போன மாதிரி, வரி உடுப்புப் போட்டுக் கொண்டு அலைஞ்சார். உவரின்ர உதவாக் கொள்கையை புரிஞ்சு கொண்டு புத்தியுள்ளவையள் புதுவழியைத் தேடிக் கொண்டிட்டினம். இனியும் மண்வெட்டித் தலையர் யோசிக் காட்டில் இண்டைக்கு நூறா இருக்கிறது நாளைக்கு பல மடங்காகவும் வாய்ப்பு இருக்கு. பிறகென்ன பாதி மண்டை வரைக்கும் பெரிய நாமமாகப் போட்டுக் கொள்ள வேண்டியதுதானாக்கும்.

**நடக்கப்போற** அதிகாரத்துக்கான எலக்ஷனில தமிழ் பேசிற மக்கள் யாருக்கு வாக்களிக்க வேணுமெண்டதை சொல்லுமாப்போல சொல்லிக் கொண்டே, சொல்லாத மாதிரியும் இருக்கிற மாதிரி வெளிச்சமான வானொலி ஒண்டு கருத்துக் கேக்குது. அதிலை கேக்கிறவரின்ர நோக்கமே பச்சை பச்சையாத்தான் இருக்கு. அதை நிரூபிக்குமாப்போல மலையகத்தில பச்சைக் கட்சிப் பிரதிநிதியா இருக்கிற வேல் கொண்ட ஆயுதமானவரைக் கேட்டிச்சினம், என்ன பதில் சொன்னவர் தெரியுமோ? ரெண்டெழுத்தாரின்ர தலைவர் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு கீழிறங்கி வந்திருக்கிறாராம். அப்புடி வரப்பண்ணினவரே தங்கட தலைவர் - அதானுங்கோ பச்சைக் கட்சியின்ர தலைவர்தானாம். அப்புடியெண்டால் இப்ப ரெண்டெழுத்தார் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டிட்டினமோ? அப்புடி விட்டிட்டின மெண்டால் தன்னையே சுட்டுத்தள்ளத்தான் வேணுமெண்டு ரெண்டெழுத்தாரின்ர தலைவர் ஒரு தடவை சொன்னவர். இதில யாருங்கோ உண்மை சொல்லினம். வேலான ஆயுதத்தை பேராகக் கொண்டவர் தங்கட தலைவரைப் பத்திச் சொல்றது சரியோ, பிழையோ எண்டதை யாரிட்டக் கேட்டு தெரிஞ்சு கொள்ளுறது எண்டதே தெரியுதில்லையுங்கோ. வெளிச்சமான வானொலியிலை இருந்து கேள்வி கேட்ட குருவான அண்ணா உப்புடி குறுக்குக் கேள்வி கேட்டு தேசியத்தையே தெருவுக்கு இழுக்கிறியளே. உங்கட நோக்கத்தில ஜெயிச்சுப் போட்டியள் போங்கோ......

**வந்தாலும்** வந்திச்சுது ஒரு சுனாமி. தென்னாசியப் பிராந்தியத்தையே ஒரு கை பாத்துட்டுப் போயிட்டுது. அண்டைக்குப் பாதிக்கப்பட்ட சனங்கள் இண்டைக்கும் பாதிக்கப்பட்ட சனங்களாகவே இருக்கினம். அந்தா எண்டாங்கள்; இந்தா எண்டாங்கள். கடைசியிலை ஒரு மண்ணும் நகரயில்லை. இப்பவும் சனம் உதவிகளுக்காகக் காத்துக் கிடக்குதுகள். உது உப்புடி இருக்கேக்கையே திரும்பவும் இந்தோனேசியாவில பூகம்பம் எண்டாங்கள், பிறகு சீனாவில சுரங்கப் பாதை இடிஞ்சு விழுந்திட்டுது எண்டாங்கள். பிறகு அண்டை நாட்டில ஆகாயச் சுனாமி எண்டு சொல்லிற அளவுக்கு பேய் மழை பெஞ்சு கடும் வெள்ளமெண்டாங்கள். பிறகு ஜப்பானில சுனாமி எண்டாங்கள். இப்ப என்னடா வெண்டால் அமெரிக்காவில கெத்தரினா எண்டொரு சூறாவளிச் சுனாமி இரண்டு மூண்டு மாநிலங்களுக்குள்ளை புகுந்து ஒரு காட்டு காட்டிட்டுப் போயிருக்கு. அதில அகப்பட்ட சனத்தின்ர பொடி இன்னும் மிதந்து கொண்டிருக்கெண்டு சொல்லினம். போதாக்குறைக்கு திரும்பவும் எங்கட நாட்டில கடும் மழை, வெள்ளம் எண்டினம். எனக்கெண்டால் மனிசப்பயல் கொலையெண்டும், வன்முறையெண்டும் கொடிய மிருகமாகிப் போறதை பொறுத்துக் கொள்ளாமத்தான் இயற்கை கோபம் கொள்ளுமாப் போலை தெரியுது. இயற்கை வெளிப்படுத்திற மெஸேஜ் என்னெண்டு தெரியாம மனிசன் ஆட்டம் போடுறான். எப்புடியோ இப்ப காட்டின காட்டைவிட, இயற்கை பெருங்கோபம் எடுத்து பெருசாக் காட்டாத வரைக்கும் ஓகே தானுங்கோ....

**இலங்கையோடை** பலமான ஒப்பந்தமொண்டை செய்துகொள்ளப் போறம் எண்டு அண்டை நாடு சும்மா பாவ்லா காட்டிக் கொண்டு காலம் கடத்திக் கொண்டிருக்கு. நாட்டில நிலமை ரொம்பவும் மோசமாகிக்கொண்டே போகுது. நீங்கள் ஒப்பம் வச்சியலெண்டால் ரெண்டெழுத்தார் கொஞ்சம் அடக்கி வாசிப்பினம் எண்டு தெற்குத் தரப்பார் எடுத்துச் சொல்லியும், செவிடன் காதில சங்கு ஊதின மாதிரி இருந்து கொண்டிருக்கினம். பிராந்தியத்தில தாங்கள் பலமானவை எண்டதாலை தலைக்குமேலை போக விடமாட்டம் எண்ட நினைப்புத்தான் அதுக்குக் காரணமெண்டும் சொல்லினம். ஆனால் பாருங்கோ, சைனாக்காரர் வெட்டொண்டு துண்டு ரெண்டெண்ட கணக்கா சொல்லிப்போட்டினம். ஓம் நாங்கள் இலங்கையோடை பலமான ஒப்பந்தம் செய்யப்போறம். அது தொடர்பான உதவியும் செய்யப்போறம் எண்டும் சொல்லியிருக்கினம். அது ஒழுங்கு. உந்த மாதிரி கரக்டா நடந்து கொள்ளிறதாலைதானாக்கும் உலகத்தின்ர பார்வையை இண்டைக்கு தங்கட பக்கம் திரும்பப் பண்ணியிருக்கினம். ஆசிய வல்லரசா மட்டுமில்லாமல் பொருளாதாரத்திலையும் தங்கட வல்லமையைக் காட்டி வருகினம். தோற்றம் சின்னனெண்டாலும் சிந்தனை சீரியதுதானுங்கோ.... சிந்திக்கத் தெரிஞ்சவை சீனாவுக்கு ஒரு தானா போடுங்கோ....

**முந்தி** பொங்கின தமிழுக்கெல்லாம் எங்கட குதிரைக் கஜேந்திரனாருக்கு அறிக்கை எழுதிக் குடுத்தும் அட்வைசும் பண்ணின பேராசிரியர், இப்ப பொம்பிள கேசில கம்பி எண்ணுறார். தேசியமான மாநாடுகளின்ர வேகத்திலையே குடாநாட்டில ஒரு பொங்கு தமிழையும் நடத்தப் போறாராம் குதிரையார். அதுக்கு யாரிட்டக் கொடுத்து அறிக்கை எழுதப்போறார் எண்டது ஒருபக்கமிருக்க, நடுக்கடலுக்குப் போனாலும் நன்றியுள்ளது நக்கிக் குடிக்கிறமாதிரி பார்ளிமெண்டுக்குப் போனாலும் பொங்கிற தமிழ் நடத்திறதாலதான் ஆளுக்கு அவ்வளவு ஆர்வமாம். ஏன் அதையும் மாநாடா நடத்த வேண்டியதுதானே. ஏனாம் பொங்கிற தமிழெண்டு நடத்தப் போயினம் எண்டு அவருக்கு நெருக்கமானவர் ஒருவரிட்டக் கேட்டதுக்கு, நன்றியுள்ளதுக்கு எங்கை அடிச்சாலும் காலைத் தூக்கிறமாதிரி கூட்டத்தைச் சேர்க்கிற எதெண்டாலும் அதை பொங்குற தமிழ் எண்டுதான் மாற்றிப் போடுவாராம். அதில ஸ்பெஷலிஸ்ட் எண்டதாலை அவரிட்டையே பொறுப்புக் குடுத்திட்டினமாம். எப்புடியும் மூண்டு லகரச் சனத்தைத் திரட்டிக் காட்டிறன் எண்டு கோவணக்கட்டில திரியிறாராம். குடாநாட்டில சனம் அஞ்சு லகரந்தான் தேறும் எண்டு சொல்லினம். ஒருவேளை படிக்கிற பிள்ளையளை கணக்கு வச்சுக் கொண்டு கல்குலேட் பண்ணுறாராக்கும். நடக்கட்டும் நடக்கட்டும். பொங்குறது சனத்துக்கு மேலால வழியாமல் இருந்தால் சரிதானுங்கோ.....

# வெலிக்கடை அனுபவம்



வெலிக்கடை சிறை முகப்புத் தோற்றம்

தற்போது லண்டனில் வதியும் எனது பாடசாலை நண்பன் ஜெயதேவனை - லண்டன் ஈழபதீஸ்வரர் கோவில் தர்மகர்த்தாவை - புலிகளின் தீவிர ஆதரவாளனாக இருந்தவரை - கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்பு புலிகள் வன்னிக்கு அழைத்து தடுத்துவைத்த போது, அவர் வன்னியில் கண்ட புலிகளின் தடுப்புச் சிறைகளையும், நமது மக்களை அடைத்து வைத்துள்ள கொலைக் களங்களையும் பற்றிச் சர்வதேச சமூகத்திற்கு எழுதியுள்ளதை ஒரு முறை வாசித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அன்பான சகோதர, சகோதரிகளே!

வரலாற்றை மீளவும் தெளிவாக நோக்கும்போது... ஒரு உண்மை எழுந்து நிற்கிறது.... 1983 ஜுலை இன சங்காரத்திற்கான பொறுப்பில் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் பங்குண்டு!

1983 ஜுலையில் யாழ். திருநெல்வேலித் தாக்குதல், மக்கள் நலனைப் புறம்தள்ளி நடத்தப்பட்டதால்தான் நாம் நமது தோழர்களை, நமது மக்களை இழந்தோம்! சம்பவத்திற்குப் பின்னான சம்பவங்களுக்கு அன்றைய சிங்கள இனவாத அரசு எவ்வளவு தூரம் பொறுப்பானதோ... அதற்கு எந்தவகையிலும் குறைவில்லாத நிலையில் ஜுலை சம்பவத்தின் ஆணிவேரான தாக்குதலுக்கும் பிரபாகரன் பொறுப்பெடுத்தேயாக வேண்டும்!

1983 ஜுலை திருநெல்வேலித் தாக்குதல் நடத்தப்படாதுவிட்டிருந்தால் ஜுலைக் கலவரமும் இல்லை; வெலிக்கடைப் படுகொலையும் இல்லை. இதுதான் உண்மை! இந்த சிந்தனாபூர்வமான உண்மையை, பலர் வசதியாக இப்போது மறந்துவிடுகின்றனர்.

**கடந்த சில வாரங்களாக ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வெலிக்கடை சிறையில் தான் இருந்த போது தனக்கு நிகழ்ந்த, தான் நேரில் பார்த்த விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டார்.**

படையினருக்கு எதிரான தாக்குதலை மேற்கொள்வதும்.... அதன் பதிலடியாக படையினர் திருப்பித் தாக்குவதும்.... கொல்லப்பட்ட மக்களின் பிணங்களின் மீது ஏறி நின்று வெறும் உணர்ச்சியின் வசப்பட்டவர்களாக தங்களது அரசியலை நடத்துவதும்தான் புலிகளின் வழிமுறை!

இந்த வழிமுறைதான் இன்று வரை முடிவின்றித் தொடரும் நீடித்த யுத்தம்!

ஓரடி முன்னால் ஈரடி பின்னால் என்று பின்னோக்கியே திரும்பி வரும் புலிகளின் அணுகுமுறை!

புலிகளினால் எழுதப்படுகின்ற வரலாறுகள் மட்டுமே, தமிழர் வரலாறாக காட்டப்படுகிறது... புலிகளின் கபடத்தனமான வரலாறு அல்ல... ஈழத் தமிழரின் போராட்ட வரலாறு. இந்த உண்மையைச் சொல்பவர்களை அழிப்பதுதான் புலிகளினதும் பிரபாகரனினதும் போராட்டமாக உள்ளது.

என் உயிரிலும் மேலான மக்களே!

அன்று வெலிக்கடையில் பலியான எமது தோழர்கள், மாவீரர்கள் இல்லையா...? ஈழப் போராட்டத்திற்குத் தம்முயிரை அர்ப்பணித்த புலிகள் இயக்கத்தைச் சாராதவர்கள் மாவீரர்கள் இல்லையா?... தேசபிதா தங்கதுரையும், தளபதி குட்டிமணியும் மாவீரராக்கப்படாத, பிரபாகரனின் அரசியலை நீங்கள் இன்றைய நாளில் ஒரு தரம் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

அந்தத் தியாகிகள் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக வெலிக்கடைச் சிறைக்குள் களமாடி வீழ்ந்த தினத்தை அவர்களின் உயிர்கள் பலிகொள்ளப்பட்ட அரசியல் வரலாற்றை ஒரு தடவை சீர்தூக்கிப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்...

அன்று வெலிக்கடைச் சிறைக்குள் இருந்து சிங்கள இனவாதத்தின் படுகொலையில் இருந்து தப்பிய எஞ்சியவர்களில் யாரும்... புலிகளின் கொள்கைகளை ஆதரிப்பவர்களாக இல்லை என்ற உண்மையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.........!

அன்று நாம் சிங்கள இன வெறியின் தாக்குதலில் இருந்து தப்பினாலும்... இன்றுவரை புலிகளின் கொலைக் கரத்தினால் வலை விரிக்கப் படுபவர்களாகவே உள்ளோம்! இத்தகைய உண்மை ஒன்றே போதும் உங்களுக்குப் பல்வேறு விடயங்களைப் புரியவைப்பதற்கும்... புரிந்து கொள்வதற்கும்...

நமது தேசத்துக் கவிஞர் ஒருவர் எழுதியுள்ள கவிதை வரிகளுடன் வெலிக்கடை படுகொலையை ஒட்டிய எனது உரையை முடித்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன்.

*"வேடனின் கையிலிருந்து*
*விடுவித்துக்கொண்டு*
*கசாப்புக் கடைக்காரனை*
*தஞ்சமடையும் முயற் குட்டிகளே!*
*கண்விழித்திருங்கள்..."*

என மக்களை நோக்கி நமது தேசத்துக் கவிஞன் ஒருவன் எழுதினான். அர்த்தமிக்க இவ்வரிகளை நமது மக்களும், ஈழப் போராட்டத்திற்குத் தம்முயிரை ஈர்த்த தோழர்களும் படுகொலை செய்யப்பட்ட நாளில், அதன் 22ஆவது வருட நினைவு தினத்தில், உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

ஈழத் தமிழ் பேசும் மக்களின் வரலாறு இத்தினத்தை, இம்மாதத்தை, இதன் கொடூரத்தை, கொடூரத்திற்குக் காரணமான - மக்கள் நலனுக்கு விரோதமான - அரசியலை மிகச் சரியாக அடையாளப்படுத்தி நினைவுகூருமென்ற நம்பிக்கையோடு, தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியவனாக விடைபெறுகிறேன்...

தேசத்திற்காக.... தியாகங்களை ஏற்போம்...


என்றும் நாம் மக்களுக்காக...

***(முற்றும்)***


# விளம்பரப் பகுதி

## ஐந்தாண்டு நினைவில்

மண்ணில் 13 03 1951



விண்ணில் 12 09 2000

## பி.அரியதாசன் J.P.

அரசாங்க ஒப்பந்தக்காரர் - ICTAD
உரிமையாளர் றஞ்சனாஸ், மன்னார்

*"பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்"* *(யோவா - 15:9)*

குடும்பத்தின் குல விளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
சமூகத்தின் அறிவொளியாய்
அனைவரும் போற்றும் உத்தமனாய்
பாரினில் வாழ்ந்து வழிகாட்டிய தெய்வமே
தாங்கள் இறையடி சேர்ந்து ஐந்தாண்டு என்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு நீங்காது

பிரிவால் துயருறும் -
மனைவி மலர், பிள்ளைகள், விமால், றஞ்சனா, உறவினர்கள், நண்பர்கள். தொ.பே. 023-22322434

## லண்டன், பாரிஸ்
### இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்.

**டாக்டர் ஆர். தியாகராஜன்**
DHMS. AMRSH (LON)

01.09.2005 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக் கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Dia betes) எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strillity) ஆண்மைக் குறைபாடுகள் (Impo tency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங் களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையான பாதுகாப்பான, பக்கவிளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி
02087678004 - 07833341693
E-mail : homoeocare@rediffmail.com
Web : www.homoeocare.com

இந்தியா - 0091-9843051099
இலங்கை - 0094-777602513
செப்டெம்பர் மாத இலங்கை விஜயம்
22-09-2005 முதல் 28-09-2005 வரை


## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |


சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):- murasu@sltnet.lk





# மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

பேராசிரியர் டாக்டர்
P.K. சாமி J.D.G.A.N (J.P)
162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு - 13.

T/NO 2342463/2342464
2470615/2431137
Fax :- 2344831


## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

## இன்னொருவர் பார்வையில்

# கதிர்காமரைக் கொன்றவர்கள் புலிகள்தான்!

## - மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அண்மையில் ரி.என்.எல். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின்போது கேட்கப்பட்ட சில கேள்விகள், பதில்களின் தமிழாக்கத்தை இங்கே தருகிறோம். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்ட பின்னர் இப் பேட்டியளிக்கப்பட்டது.**

***கேள்வி:*** கதிர்காமரைக் கொன்றது புலிகளேயென அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. புலிகள் அதனை மறுத்துள்ளனர். இது சமாதான முன்னெடுப்பைப் பாதிக்குமென்று நினைக்கிறீர்களா?

***பதில்:*** கொலை இடம்பெற்ற கட்டத்தில் சமாதான முயற்சிகளுக்குப் புத்துயிரளிக்க வேண்டிய நிலையிலிருந்தது. யுத்தமும் இல்லை, சமாதானமுமில்லையென்ற நிலையே உள்ளது. அல்லது இடம்பெற்ற கொலைகள் மற்றும் அத்துமீறல்களை வைத்துப் பார்க்கையில் மோதலின் மட்டம் குறைவானதாகவே இருக்கிறது. புலிகளோடு மேசையிலமர்ந்து பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் முயற்சி செய்வதென்பது அரசியல் ரீதியில் மிகக் கஷ்டமானதென்று புலிகள் மீது குற்றஞ்சாட்டப்படுகின்ற நிலையிலும் கொலை இடம்பெற்றிருக்கும் கட்டத்திலும் யுத்த நிறுத்தத்தை எவ்வாறு கடைப்பிடிக்கப் போகிறார்களென்பதே பெரிய பிரச்சினையென்று நான் நினைக்கிறேன்.

***கேள்வி:*** சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகமான ஜயந்த தனபாலா இதுவொரு பெரும் பின்னடைவென்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளார். இந்த நேரத்தில் அரசாங்கம் எவ்வாறு செயற்பட வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

***பதில்:*** யுத்த நிறுத்தத்தைப் பலப்படுத்துவதே இந்த நேரத்தில் முக்கிய அக்கறைக்குரிய விடயமாக இருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். இடம்பெற்றிருக்கக்கூடிய யுத்த நிறுத்த மீறல்களைப் பொறுத்தவரை, யுத்த நிறுத்தமென்பது வெறும் போலியானதென்று பலராலும் கருதப்படுகிறது. மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதைவிட யுத்த நிறுத்தத்தை மீள்பார்வை செய்ய வேண்டுமென்று ஜனாதிபதி கூறியுள்ளார். அது மிகவும் சரியானதென நான் கருதுகிறேன். 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டபோது, உண்மையான கள நிலை பரிசீலிக்கப்பட வேண்டுமென்ற வாதம் முன்வைக்கப்பட்டது. இந்தக் கள நிலையையே இன்னமும் முன்வைக்கப்படுகிறது. மற்றுமொரு உண்மை நிலையையும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். ஏனெனில் இருதரப்பும் யுத்த நிறுத்தமொன்றினைக் கொண்டுள்ளனர். "நாம் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றோம். அதே நிலையிலேயே யுத்த நிறுத்தம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்" என்று கூறுகின்றனர். ஆனால், இதற்குள்ளேயே சகல மனித உரிமை மீறல்களும் இடம்பெறுகின்றன. சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்தல் போன்ற விடயங்களும் தொடர்ந்து இடம் பெறுகின்றன.

***கேள்வி:*** கதிர்காமர் கொல்லப்பட்டமை யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பாரிய அடியென்று நீங்கள் கருதவில்லையா?

***பதில்:*** அப்படித்தான். சமாதான முன்னெடுப்புகளையும் அதில் சம்பந்தப்பட்டுள்ளவர்களையும் பொறுத்தவரை இதுவே மிகவும் உயர்மட்டக் கொலை. ஆனால் அதற்கு முன்னரேயே யுத்த நிறுத்தம் பெரும் அச்சுறுத்தலுக்கும் சவாலுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறது.

***கேள்வி:*** ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கதிர்காமர் கலந்து கொள்வதாக இருந்தது. அத்துடன் அவர் அங்கு இரு வாரங்கள் தங்கியிருப்பதாகவும் இருந்தது. இந்த நிலையில் அவர் கொலை செய்யப்பட்ட காலகட்டம் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

***பதில்:*** புலிகள் செய்த இக் கொலையில் சுவாரஷ்யமான விடயம் இதுவெனக் கருதுகிறேன். ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவை தொடர்பான பேச்சுக்களுக்கிடையில் தெற்கில் சக்திகளின் சம நிலையை பாரதூரமான அளவுக்குப் பாதிக்க வேண்டுமென்ற ஒரு முயற்சியாகவே இந்தக் காலகட்டத்தில் கொலையைச் செய்துள்ளனர். தெற்கிலுள்ள சமநிலைச் சக்திகளுக்கு மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காகவே இந் நேரத்தில் இக் கொலை செய்யப் பட்டிருக்கலாமென நான் நம்புகிறேன். அநேகமாக சில அரசியல்வாதிகளின் கடினப்போக்கு நிலைப்பாட்டிற்கு முண்டு கொடுக்கும் விதத்திலேயே இக் கொலை புரியப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே சமாதான முன்னெடுப்புக்கு இது பலத்த அடியாகும்.

***கேள்வி:*** இக் கொலைக்குப் பின்னால் புலிகள் இருக்கிறார்கள் என்று நம்பு கிறீர்களா?

***பதில்:*** இக் கொலைக்குப் புலிகளே பொறுப்பென நான் நம்புகிறேன். இதற்கு ஏதோ வலுவான சாட்சிகள் இருப்பதாக நினைத்துக் கொண்டு நான் இவ்வாறு கூறவில்லை. ஆனாலும் புலிகளின் கடந்தகால செயற்பாடுகள், அவர்களின் நோக்குகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே நான் இவ்வாறு கூறுகின்றேன். புலிகளின் கடந்த கால செயற்பாடுகளின் காரணத்தினால் நாட்டில் இடம் பெறும் எந்தவொரு அரசியல் படுகொலைகளும் இலகுவாகவே அவர்கள் மீது போடப்பட்டு விடுவதால் இந்த நிலையையும் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு புலிகளிற்கு இருக்கிறதென்று நான் நம்புகிறேன். ஒருவர் நிரபராதி என்று நிரூபிக்கப்படும்வரை அவர்மீதான குற்றச்சாட்டு இருந்து கொண்டேயிருக்கும்.

***கேள்வி:*** ஜனாதிபதி குமாரதுங்க தனது கூட்டணி பங்குதாரரான ஜே.வி.பி.யை இழக்குமளவுக்கு முற்று முழுதாகவே தனது பாதையில் துணிகரமாகச் சென்றிருக்கிறார். வடக்குக்கும் கிழக்கிற்கும் உதவுவதற்காக சுனாமிக்குப் பிந்திய செயற்பாட்டு முகாமைத்துவ ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கிறார். இவை அனைத்திற்கும் மத்தியில் புலிகள் கதிர்காமரைக் கொன்றிருக்கிறார்கள். இவையெல்லாம் புலிகளுக்கெதிராகவே செல்லுமென்பதை பூரணமாகத் தெரிந்து கொண்டும் அவர்கள்தான் கொலையைச் செய்திருக்கிறார்களென்று ஏன் நினைக்கிறீர்கள்?

***பதில்:*** கதிர்காமரை ஏன் புலிகள் கொல்ல வேண்டும் என்ற கணிப்பில் நான் எனது வாதங்களை முன்வைக்கிறேன். கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற காலத்திலிருந்தே புலிகளின் கொலைப்பட்டியலில் இருந்திருக்கிறார். தெற்கிலுள்ள அரசியல் அதிகார சமநிலையை பாரியளவில் பாதிப்படையச் செய்வதற்காகவே புலிகள் கதிர்காமரைக் கொன்றிருக்கிறார்கள். தமது போராளிகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சம்பந்தமாக புலிகள் பிரச்சினைகளை எதிர்நோக்குவதால் சமாதான முன்னெடுப்புகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்த அவர்கள் விரும்பினார்கள். புலிகளைப் பொறுத்தவரை தமது உறுப்பினர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதென்பது முக்கிய பிரச்சினையாகும். மூன்று வருட யுத்த நிறுத்த காலத்தில் பல பிரச்சினைகள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. யுத்தமுமில்லை, சமாதானமுமில்லை என்ற சூழ் நிலையில் மக்கள் கேள்விகளைக் கேட்கத் தொடங்கி விட்டார்கள். தங்கள் போராளிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது தொடர்பாகவும் அவர்களுக்குப் பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 2002ஆம் ஆண்டுவரை சற்று மீள்நோக்கிப் பார்ப்பது நல்லது. இக்கால கட்டத்தில் அவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள் என்பதை விட அவர்கள் மேலும் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதே உண்மை. முன்னைய காலப்பகுதியை விட இந்த மூன்று வருட காலத்திலும் அவர்கள் கூடிய சவால்களை எதிர்நோக்கினார்கள்.

***கேள்வி:*** சர்வதேச சமூகம் இப்போது வகிக்கும் பாத்திரமென்ன? அரசாங்கத்தின் மீதும் புலிகளின் மீதும் போதியளவு செல்வாக்கை அவர்கள் கொண்டிருக்கிறார்களா?

***பதில்:*** அரசாங்கத்தின் மீது அவர்களுக்குச் செல்வாக்குச் செலுத்த முடிகிறது. ஏனெனில் அரசாங்கங்கள் ஏனைய அரசாங்கங்கள் மீது செல்வாக்கு செலுத்தக் கூடியவையாக இருக்கின்றன. புலிகள் மீது எந்தளவுக்கு அவர்களால் செல்வாக்கு செலுத்தக் கூடியதாக இருக்கிறதென்பதே நம்முன்னாலுள்ள பாரிய கேள்வியாகும். சர்வதேச சமூகத்திற்கு புலிகள் மீது பாரியளவுக்கு செல்வாக்குச் செலுத்தக் கூடியதாக இருக்குமென்று 100 சதவீத நம்பிக்கை எனக்கில்லை. ஆனால் நீடித்த சமாதானத் தீர்வென்ற அடிப்படையில் பிரச்சினை எழுந்துள்ளது. கடந்த காலங்களில் புலிகள் எவ்வாறு இருந்தார்கள் என்பதைப் பொறுத்து ஏதோ ஒரு வகையில் அவர்களை வித்தியாசமாக கையாளவேண்டுமென நினைக்க சகலரும் தலைப்பட்டுள்ளனர். ஜயந்த தனபால இந்த விடயத்தை முன்வைத்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். அதாவது புலிகளை எவ்வாறு கையாளுவது என்பது குறித்து மேலாய்வு செய்ய வேண்டுமென்று அவர் கூறியிருக்கிறார். சமாதான முன்னெடுப்புகளில் பங்குதாரர்கள் என்ற வகையில் சிலவகையான செயற்பாடுகள் தேவையென்பதையும் சில வகைச் செயற்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை என்றும் புலிகளுக்கு சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டுமென்று நான் நினைக்கிறேன். இந்தச் செய்தியைத் தெளிவாகவும் வலுவாகவும் அவர்கள் புலிகளுக்கு வழங்க வேண்டும். சர்வதேச சமூகம் புலிகளுடன் பேசும்போது அது புலிகளின் முக்கிய தீர்மானம் எடுப்பவர்களுடனோ அல்லது புலிகள் இயக்கத்திற்குள் இருக்கும் தீர்மானம் எடுப்பவர்களின் முக்கிய ஆலோசகர்களுடனோ கலந்துரையாடுவது அவசியமானதென்று நான் கருதுகிறேன். எனவே புலி இயக்கப் பேச்சாளர் ஒருவர் எந்தளவு உயர் மட்டத்தில் இருந்தாலும் அவருடன் பேசிப்பயனில்லை.

***கேள்வி:*** புலிகளைப் பொறுத்தவரை கொள்கை வகுப்பாளரான ஒரேயொருவருடன் மட்டுமே பேச வேண்டிய தேவை சர்வதேச சமூகத்துக்கு இருப்பதாக கூறினீர்கள். ஆனால், பேச்சாளரொருவர் இருக்கின்ற போதும்கூட புலிகளிலுள்ள ஒரேயொரு கொள்கை வகுப்பாளர் அவர்களின் தலைவர் மட்டுமே. பேச்சாளருடன் விவகாரங்களைக் கையாள்வது தவிர்க்கப்பட வேண்டுமா?

***பதில்:*** புலிகளுடன் நீங்கள் போகிறீர்கள் என்றால், அந்த இயக்கத்தின் நிலைப்பாடு போன்றவற்றை விபரிக்கும் ஒருவருடன் பேசிப் பயனில்லை. பிரபாகரனுக்கு நெருங்கிய ஆலோசகர் குழுவொன்று இருக்கலாம். ஆனால் புலிகளின் சகல தீர்மானங்களையும் பிரபாகரன்தான் எடுக்கிறாரென்றால் அவருடனேயே பேசவேண்டும். இதற்குள் ஊடுருவிச் செல்ல வேண்டும். இல்லையென்றால், உங்களால் ஒரு தரப்பினருடன் மட்டுமே பேச முடியும். அதாவது ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர்கள், சமாதான செயலகம் ஆகியவற்றுடன் மட்டுமே பேச முடியும். மாறாக உண்மையான கொள்கைத் தீர்மானம் எடுப்பவர்களுக்கு உங்கள் முக்கிய விடயங்களை வலியுறுத்துவதற்காக உங்கள் செய்திகளை அனுப்புகிறீர்களா என்பது கேள்விக்குறியே.

***கேள்வி:*** பத்திரிகையாளர்கள் மாநாடொன்றில் அரசாங்கம் யுத்தத்துக்குப் போகுமாவென்று கேட்கப்பட்டபோது கதிர்காமர் கொடுத்த பதிலை நினைத்துப் பார்க்கிறேன். ஐ.தே.க.வோ சுதந்திரக் கட்சியோ யுத்தத்தை விரும்பாது. யுத்தமோ யுத்தமில்லையோ என்பது ஒரு மனிதரின் மனதில் மட்டுமே இருக்கிறது. அவர்தான் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்று கதிர்காமர் கூறினார். இந்த வகையில் புலி இயக்கத் தலைவர் வெளியே வந்து மேலும் மக்களைச் சந்திக்க வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

***பதில்:*** ஆம். நிச்சயமாக குறிப்பிட்ட தடவைகளில் அவர் வெளியே வருவது ஆகியவை குறித்து அவர்கள் மீண்டும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். ஜனநாயக ரீதியான சமாதானத்துக்கு வழிவகுக்கக் கூடிய சமாதான முன்னெடுப்புகளில் ஈடுபடுவதானால் சம்பந்தப்பட்டவர்கள் வெளியே வந்து அந்த முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

***கேள்வி:*** இந்த வகையில் நோர்வேக்காரர்கள் தோற்றுவிட்டார்களா? அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?

***பதில்:*** அரசாங்கத்துடனும் புலிகளுடனும் முழுமையான சமாதான முன்னெடுப்பைப் பொறுத்தவரையிலும் நோர்வே எவ்வாறு விடயங்களைக் கையாள்கிறது என்பதை மீள்பரிசீலனை செய்யவேண்டிய நேரம் வந்துவிட்டதாக நிச்சயமாக நான் நினைக்கிறேன். யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. இக்காலப் பகுதியில் எவ்வளவோ நடந்தேறியும் விட்டன. இதன் விளைவாக ஏற்பட்ட விடயங்களை கவனத்திலெடுத்து எதிர்கால முயற்சியின்போது பயன்படுத்த வேண்டியுள்ளது. ஜனாதிபதியே மீள்பரிசீலனை ஒன்றைக் கோரியுள்ளதால் எவ்விதமான அணுகுமுறையை மேற்கொள்வதென நோர்வேத் தரப்பு கவனத்திலெடுக்க வேண்டியுள்ளது.

***கேள்வி:*** புலிகளுக்கு அனுதாபம் காட்டுவதாக சர்வதேச சமூகத்தின் மீது எமது நாட்டிலுள்ள சில தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுகளின் மூலம் புலிகள் தமது அந்தஸ்தை இழந்து விடக்கூடிய நிலை உண்டென்று நினைக்கிறீர்களா?

***பதில்:*** நிச்சயமாக. தற்போது சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரை புலிகளைப்பற்றிய கருத்து தாழ்வாகவே இருக்கிறதென்று நான் நினைக்கிறேன்.

***கேள்வி:*** யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பங்களிப்புக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? ஆசிய நாடுகளிலிருந்தும் கண்காணிப்பாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கதிர்காமர் கூறியது எனது ஞாபகத்திற்கு வருகிறது.

***பதில்:*** அவர்கள் குறித்த முதலாவது விடயம் இதுதான். அவர்களுக்கு இருக்கக் கூடிய ஆணை என்ன? யார் என்ன செய்தார்கள் என்று குறிப்பிடுவது மட்டுமே இந்த ஒப்பந்தத்தில் அவர்களுக்கு இருக்கக் கூடிய பாத்திரமாகும். அவர்களுக்கு காத்திரமான பங்களிப்பொன்றை வழங்க வேண்டுமானால் அவர்கள் நிலையை மேலே உயர்த்துவதோடு ஏனையவர்களையும் கண்காணிப்புக் குழுவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இலங்கைக்கு கண்காணிப்பாளர்களை அனுப்பிவைக்க உண்மையிலேயே வேறு எத்தனை பேர் விரும்புகிறார்கள் என்பது இங்குள்ள பிரச்சினையாகும். சர்வதேச சமூகத்தின் நலன்களை சில வேளைகளில் நாம் அதிகளவில் மதிப்பீடு செய்கின்றோம் என்று நான் நினைக்கிறேன். அதாவது யுத்த நிறுத்தக் கண்காணிப்பைப் பொறுத்தவரை உண்மையான பொருள் உதவிகள் மற்றும் வேறுவகை உதவிகளைப் பொறுத்தவரை இவ்வாறே நாம் கருதுகின்றோம். யுத்த நிறுத்தக் கண்காணிப்பு என்பது காத்திரமானதாக இருக்கவேண்டிய அளவுக்கு இல்லை என்பதே உண்மையாகும். இருதரப்பையோ ஒரு தரப்பையோ பெரிதாகக் குறைகூறுவதில் அர்த்தமில்லை. எதிர்காலத்தில் சர்வதேச கிரிமினல் நீதிமன்றம் போன்ற விடயங்களில் நாங்கள் கைச்சாத்திட்டால் அது பயனளிக்கக் கூடியதாக இருக்கும். அப்போது அத்துமீறல்கள் சம்பந்தமாக பாரிய தரவுகளை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் பெருமளவு ஆட்கள் அதற்குத் தேவை. கண்காணிப்புக் குழுவுக்கு இருக்கும் ஆணையையும் செயற்பாடுகளையும் பொறுத்தவரை மாற்றமொன்று தேவை. பெருமளவு ஆட்கள் தேவையென்ற போதிலும், அவர்களால் சுயாதீனமாகச் செயற்பட முடியாதென்பதையும் நாம் ஏற்றுக கொள்ள வேண்டும். அவர்கள் உள்ளூர் அமைப்புகளுடன் இணைந்து செயற்பட வேண்டியிருக்கும். இந்த நாட்டுக்கு வருகைதரும் எந்தவொரு வெளிநாட்டுக் காரரும் உள்ளூர் அமைப்புக்களைப் போன்று நிலைமைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளமுடியாது. எடுத்து விளக்கவும் முடியாது. எனவே உள்ளூர்வாசிகளின் உதவி தேவை.

***கேள்வி:*** யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் செயற்பட வேண்டும். ஆனால் புலிகளின் பிரதேசங்களுக்கு அவர்களால் செல்ல முடியாது. சில சந்தர்ப்பங்களில் இவர்கள் தாக்கப்பட்டும் இருக்கிறார்கள். எனவே நிலைமையை காத்திரமானதாகச் செய்வதற்கு என்ன செய்ய வேண்டுமென நினைக்கிறீர்கள்?

***பதில்:*** ஆட்களை அதிகரிப்பதன் மூலம் கண்காணிப்பை காத்திரமானதாக்க வேண்டுமென்றால், ஆட்களை மேலதிகமாகச் சேர்க்கலாம். ஆனால் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்குள்ள ஆணையை மீளாய்வு செய்வதே மிக முக்கியமானதாகும். ஏனென்றால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையின்படி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி அவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது சம்பந்தமாகவே பிரச்சினை இருக்கிறது.

***கேள்வி:*** தமிழ் மக்களின் ஏகபோகப் பிரதிநிதிகளென்று புலிகளை நீங்கள் கருதுகிறீர்களா?

***பதில்:*** நிச்சயமாக இல்லை.

***கேள்வி:*** புலிகளின் இரும்புத் திரைக்குப் பின்னால் வாழும் சாதாரண மக்களின் நிலை குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

***பதில்:*** வடக்குக் கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் வாழும் மக்களைப் பொறுத்தவரை நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள அபிவிருத்தி மட்டத்தோடு உயர்த்துவதற்கு பொருளாதார ரீதியாக அதிக வேலை செய்ய வேண்டியுள்ளது. பாரிய அளவு பணிகளையாற்ற வேண்டியுள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பொறுத்தவரை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள நாம் அனுபவிக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை அவர்கள் அனுபவிக்கிறார்களா என்பதே கேள்வியாகும். எனவே இங்கு சகஜ நிலையை ஏற்படுத்துவதும் சமூக மற்றும் பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிப்பதும் இங்குள்ள பணிகளாக இருக்க வேண்டும். இவற்றோடு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும். பன்முகத்தன்மை பேணப்பட வேண்டும். கௌரவமான கருத்துச் சுதந்திரம் வேண்டும். இவை அனைத்தும் ஒரே சமயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.


***நன்றி :- ரி.என்.எல்***

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

இதில் வேடிக்கை என்னவென்றால், அந்த அம்மையாரின் தாய்மொழி தெலுங்கு.

என் மரியாதைக்குரிய அந்த நடிகை, என்னை வந்து சந்திப்பதுதான் மரியாதை என்று சொல்லும்பொழுது, ஒரு தமிழ்க் கவிஞனை திரு.எம்.ஜி.ஆர். எப்படி கௌரவப்படுத்துகிறார் என்று எண்ணி நான் இறும்பூதெய்தினேன்.



அந்த அம்மையார், இன்று அமரராகிவிட்டார். அவர்தான் திருமதி பி.கண்ணாம்பா.

அவர் தயாரித்து எம்.ஜி.ஆர். நடித்த 'தாலி பாக்கியம்'படத்திற்குப் பாட்டெழுதத்தான், என்னைத் தேடி வந்திருந்தார்.

திரு.எம்.ஜி.ஆர். எப்பொழுதுமே தான் சம்பந்தப்பட்ட படங்களுக்குப் பாட்டெழுத, என்னைப் போய்ப் பார்க்கும்படி தயாரிப்பாளர்களைத்தான் என் இருப்பிடத்திற்கு அனுப்புவார்.

கிருஷ்ணா பிக்சர்ஸ் திரு.லேனா செட்டியார்; திரு. B.R. பந்துலு; திரு.கொட்டாரக்கரா - முதலியவர்களெல்லாம் எம்.ஜி.ஆர். சொன்னார்' என்று என் வீட்டிற்கே வந்து என்னை சந்தித்ததுண்டு.

'தெய்வத்தாய்' படத்திற்கு நான் பாட்டெழுதுவதற்குக் கூட, 'க்ளப் ஹவுஸ்'ஸுக்கு என்னைப் பார்க்க வந்திருக்கிறார், இன்று அமைச்சர் பெருந்தகையாகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு திரு.ஆர்.எம்.வீ. அவர்கள்.

இப்படியெல்லாம், என் அந்தஸ்தை உயர்த்திய பெருமை எம்.ஜி.ஆரையே சாரும்.

என்பால் இவ்வளவு அன்பு கொண்ட எம்.ஜி.ஆருக்கு, என்னால் ஒரு தர்மசங்கடமான நிலை ஏற்பட்டது.

வாஹினி ஸ்டுடியோவில் 'எங்க வீட்டுப் பிள்ளை' படத்திற்கான பாடல் ஒலிப்பதிவாகிக் கொண்டிருந்தது.

திருவாளர்கள் விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையமைக்க, ***'நான் மாந்தோப்பில் நின்றிருந்தேன்'*** என்னும் பாடலை திரு. T.M.S. அவர்களும் திருமதி L.R. ஈஸ்வரியும் பாடிக் கொண்டிருக்க -

ரிக்கார்டிங் தியேட்டருக்குள் நடிப்பிசைப் புலவர் திரு.கே.ஆர். ராமசாமியோடு, அண்ணன் எம்.ஜி.ஆர். வந்து அமர்ந்து பாட்டைக் கேட்டார்கள்.

ஒலிப்பதிவான பாடலை வெகுவாக ரசித்துக் கேட்டுவிட்டு, திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் என்னிடம் ஏதோ தனியாகப் பேச வேண்டுமென்று சொல்லி, என்னை ஒலிப்பதிவுக் கூடத்திற்கு வெளியே உள்ள ஒரு மரத்தடிக்கு இட்டுச் சென்றார்.

'வாலி! உங்களால் எனக்கு ஒரு தர்மசங்கடமான நிலைமை...' என்று எம்.ஜி.ஆர். சொன்னதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

'என்னண்ணே?' என்று நான் பதற்றத்துடன் கேட்டேன்.

'நீங்க ஸ்டுடியோவிற்கு வரும்போது, நெத்தீல விபூதி குங்குமம் இட்டுக்காம வந்தாத் தேவலே....' என்று சற்று தயக்கத்தோடு சொன்னார் எம்.ஜி.ஆர்.

'ஏன் அண்ணே! இதனால என்ன வந்தது?' என்றேன் நான்.

எம்.ஜி.ஆர். சற்று விளக்கமாகச் சொன்னார்.


'வாலி... நீங்க தி.மு.க.வுல மெம்பரில்லே... அரசியல் தொடர்பில்லாதவர்ன்னு எனக்குத் தெரியும்.. இருந்தாலும், நீங்க எனக்குப் பாட்டு எழுதுறீங்க... உங்க திறமையாலதான் நீங்க முன்னுக்கு வந்திருக்கீங்க... நீங்க நல்லா எழுதறதனால நான் உங்களைப் பயன்படுத்திக்கிறேன்... ஆனா, நான் உங்களே ஊக்குவிக்கிறதே, கட்சியைச் சார்ந்த திரு. N.V. நடராஜனைப் போன்ற பெரியவங்க, பகுத்தறிவுக் கொள்கைக்குப் புறம்பா விபூதி குங்குமம் இட்டுக்கிட்டு வர்ற வாலிய ஆதரிக்கறது குறித்து என்கிட்ட லேசா முனகறாங்க...

(தொடரும்.......)




---

# உளவாளிகள் 53




**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**

பிரிட்டனின் டாங்கிகள், நீர்மூழ்கி கப்பல்கள் பற்றிய ரகசியங்களை தங்களுக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். கிலேடிங் வேலை பார்த்த அமைப்பில் இது சம்பந்தமான கருவிகள்தான் தயாரிக்கப்பட்டன. இங்கிலாந்தில் பிரான்டிஸ் என்கிற பெயரில் ரஷ்ய உளவாளி ஒருவர் இருப்பதாகவும் அவரோடு தொடர்பு வைத்துக் கொள்ளும்படியும் அவருக்குச் சொன்னார்கள்.

கிலேடிங் இங்கிலாந்திற்கு திரும்பிய உடனேயே பிரான்டிஸ் அவரிடம் தொடர்பு கொண்டார். அங்கு தயாரிக்கப்படும் ஆயுதங்களின் திட்ட நகல் சில மணி நேரங்கள் தனக்கு கிடைத்தால்கூட போதும் என்றும் அதன் பிரதியை எடுத்துக் கொண்டு திருப்பித் தந்துவிட முடியும் என்றும், அதற்காக அவருக்கு பெருந்தொகை கொடுக்கத் தயாராய் இருப்பதையும் பிரான்டிஸ் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் தயக்கம் காட்டிய கிலேடிங் முடிவில் சம்மதித்தார். பிடிபட்டால் என்ன நேரும் என்பது அவருக்குத் தெரியும். ஆகவே அச்சப்பட்டார்.

கிலேடிங்கின் தயக்கத்தைப் பார்த்த பிரான்டிஸ் உபதேசம் செய்ய ஆரம்பித்தார். கம்யூனிஸத்தில் நம்பிக்கை கொண்ட கிலேடிங் அதற்கு தன்னால் ஆன சேவையை செய்ய வேண்டாமா? உலகத்தை முதலாளித்துவ ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றுவது கிலேடிங்கின் கடமை அல்லவா? என்றெல்லாம் பிரான்டிஸ் அடுக்கிக் கொண்டே போனார்.

கிலேடிங்கின் கொள்கைப் பற்று முடிவில் அவரை சம்மதிக்க வைத்தது. ஆனாலும் அவருடைய அச்சம் தெளிந்தபாடில்லை. கிலேடிங்கிற்கு சிபில் என்றொரு பெண் சிநேகிதி இருந்தாள். அவளிடம் பொய்யும் புளுகும் சொல்லி, திட்ட நகலை அவளிடம் கொடுத்து பிரான்டிஸிடம் கொண்டு போய் கொடுக்கச் சொன்னார் கிலேடிங். அங்கேயே சிறிது நேரம் காத்திருந்தால் அந்தநகலை பிரான்டிஸ் அவளிடமே திருப்பிக் கொடுத்து விடுவார் என்றும் சொன்னார். முதலில் தயங்கிய சிபில் பிறகு ஒப்புக் கொண்டாள்.

கிலேடிங்கின் நாடகம் திடீரென்று முடிவுக்கு வந்த போது அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைச் சொல்ல முடியாது. தன்னுடைய சிநேகிதி போல நடித்த சிபில் பிரிட்டனின் உளவு இலாகாவான MI - 15 க்காக வேலை செய்கிறவள் என்கிற விஷயம் அப்போதுதான் அவருக்குத் தெரிந்தது. கிலேடிங்கின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கென்றே MI - 15 அவளை கம்யூனிசக் கட்சி உறுப்பினராக்கி கிலேடிங்குடன் நெருங்கிப் பழக வைத்தது.

நவீன யுகத்தில் எந்த அமைப்பில் எந்த நாட்டு உளவாளி வேலை செய்து கொண்டிருப்பான் என்பதைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமான காரியம். மேற்கு ஜெர்மனியின் விமானப் படை தொழிற்சாலையில் தலைமை இஞ்சினீயராக இருந்தவர் சோவியத் யூனியனின் உளவாளி என்பது 1984இல் தான் தெரிய வந்தது. 1967 லிருந்து அவர் உளவாளியாக பணியாற்றிக் கொண்டு இருந்திருக்கிறார். மேற்கத்திய நாடுகளின் தொழில் நுணுக்க ரகசியங்கள் பலவற்றை சோவியத் யூனியனுக்கு அவர் அனுப்பி வந்திருக்கிறார்.

சோவியத் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்குச் செல்லும் விஞ்ஞானத் தூதுக் குழுக்களில் ரஷ்ய ஒற்றர்கள் மட்டுமே இடம் பெறுகிறார்கள் என்ற சொல்லப்படுவதுண்டு.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---



# சிறுமிகள் திருமணம்

## மேலைத்தேய நாடுகளில் பரவுகிறது



லெபனானில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகம் அன்று பரபரப்பாக செயற்பட்டுக் கொண்டிருந்தது. பணிகள் மிக அதிகமாக இருந்த காரணத்தினால் சகல பணியாளர்களும் மிகவும் பரபரப்பாகக் காணப்பட்டனர். இவ்வாறான ஒரு நிலையில் மிகவும் களைத்துப்போய் காணப்பட்ட ஒரு சிறுமி தூதரகத்தின் வாசலில் தென்பட்டாள்.

அவளது கையில் சுமை கூடிய ஒரு சூட்கேஸ் காணப்பட்டது. அவள் அழத் தயாரான நிலையில் காணப்பட்டாள். சோகமும் வேதனையும் அவளது முகத்தில் தென்பட்டன. இன்னும் சில நொடிகளில் அவள் அழுதே விடுவாள் போலிருந்தது.

மிகுந்த வேதனையுடன் அச்சிறுமியின் அருகில் வந்த பெண் அதிகாரி ஒருவர் அவளது தேவை என்ன என வினவினார்.

அப்போது அச்சிறுமி, தான் மீண்டும் தனது வீட்டுக்குச் செல்ல வேண்டும் எனக் கூறினாள். இச் சிறுமியின் வீடு மெல்பர்ன் நகரில் இருந்தது. அங்குள்ள தனது தாயிடம் தான் செல்ல வேண்டும்



என்பதே அச்சிறுமியின் தேவையாக இருந்தது. அழுகை அவளையும் மீறி வெளிப்பட்டுவிட்டது.

அவுஸ்திரேலியாவில் மெல்பர்ன் நகரில் வசித்து வந்த இச்சிறுமி, லெபனானில் பெய்ரூட் வரை வந்துள்ளார். இச் சிறுமி எப்படி இங்கு வந்தார்? என்பது குறித்து ஆராய முற்பட்ட தூதரகப் பெண் அதிகாரி, அச்சிறுமி திருமணமானவள் என்பதனை கண்டறிந்தார்.

கடந்த பாடசாலை விடுமுறையின் போது வெளிநாட்டுச் சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளப் போவதாகக் கூறி அவளது தந்தை அவளை பெய்ரூட் நகருக்கு அழைத்து வந்திருந்தார். அதன் பின்னர் அவர்களது தூரத்து உறவினரான வயோதிபர் ஒருவருக்கு அச்சிறுமி திருமணம் முடித்துக் கொடுக்கப்பட்டுள்ளாள்.

பெய்ரூட்டில் உள்ள, தான் திருமணம் முடித்த தனது கணவனின் வீட்டில் சிறைக் கைதியைப் போல் வாழ்ந்து வந்த சந்தர்ப்பத்தின்போதே அவள் அங்குள்ள அவுஸ்திரேலிய தூதரகத்துக்கு இவ்வாறு வருகை தந்துள்ளாள் என்பது தெளிவாகியது.

அவளது கதையைக் கேட்டறிந்த அவுஸ்திரேலிய தூதரக அதிகாரிகள் வியப்படைந்தனர்.

கடந்த 6 மாத காலத்தினுள் இவ்வாறான சம்பவங்களுக்கு முகங்கொடுத்துள்ள 12 அவுஸ்திரேலிய நாட்டவரான முஸ்லிம் இன சிறுமிகள் அத் தூதரகத்திற்கு வந்து சேர்ந்துள்ளனர்.



மேலைத்தேய நாடுகளில் பரவலாகக் காணப்படுகின்ற பல்வேறு முறைகேடான பழக்கவழக்கங்களில் தங்களது பிள்ளைகள் நாட்டம் கொண்டு விடுவார்கள் என்ற அச்சத்தால் பெண் பிள்ளைகளைக் குறைந்த வயதிலேயே திருமணம் முடித்துக் கொடுத்து விடுவதற்கு அவுஸ்திரேலிய முஸ்லிம் பெற்றோர்கள் தீர்மானித்திருப்பதாக தூதரக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதன் பிரகாரம், தங்களது பெண் பிள்ளைகளை மிகவும் குறைந்த வயதிலேயே பாடசாலையை விட்டு நிறுத்திவிடும் பெற்றோர்கள், இவர்களை இரகசியமான முறையில் தங்களது தாய்நாடுகளை நோக்கி அனுப்பி விடுகின்றனர்.

இவ்வாறு அனுப்பப்படும் சிறுமிகள் அந்தந்த நாடுகளில் வைத்து எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு ஏற்ப வயோதிபர்களுக்கு மனைவியாக மாற்றப்படுகின்றனர்.

அவுஸ்திரேலிய குடியுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ள பிள்ளைகள் 16 வயது வரை பாடசாலைக் கல்வியைப் பெற வேண்டும் என்பது கட்டாயமாகும். இதே நேரம் 18 வயதுக்குக் குறைந்த பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுப்பதாயின் அதற்கான அனுமதியை மாநில நீதிமன்றங்களில் இருந்து பெற வேண்டும் என்பதும் சட்டமாகும்.

இந்நாட்டில் உள்ள சிறுபான்மையினருள் பெரும்பான்மையாக உள்ள முஸ்லிம்கள் இந்தச் சட்டத்தை மீறி வருகின்றனர்.

அரபு நாடுகளிலும் ஆசியக் கண்ட நாடுகளிலும் உள்ள முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் மேலைத்தேய நாடுகளில் இருந்து கிடைக்கப் பெறுகின்ற இவ்வாறான திருமண யோசனைகளை வரவேற்கின்றனர்.

இவர்களது எண்ணப்படி, இவ்வாறான உத்தேசத் திருமணங்கள், அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளின் குடியுரிமையைப் பெறுவதற்காக வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரங்கள் போன்றதாகும்.

மேலைத்தேய நாடுகளின் முறைகேடான கலாசாரங்களிலிருந்து தங்களது பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தங்களுடைய இனத்தைச் சேர்ந்தவர்களிடமே அவர்களை ஒப்படைப்பதற்கு இன்னும் ஒரு சில பெற்றோர்கள் அவுஸ்திரேலிய நாட்டுக்குள் இருந்து கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

செப்டெம்பர் 11ஆம் திகதிய தாக்குதலுக்குப் பின்னர் தங்களது நாடுகளில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்கள் மீது மேலைத்தேய நாட்டினர் சந்தேகம் கொண்டு பார்ப்பதும் இதற்கு ஒரு காரணமாகும்.

முஸ்லிம் பெண்கள் சமூகத்தில் தெளிவான இரு வேறுபட்ட பிரிவுகள் இருந்து வருவதாகப் பலர் கூறிவருகின்றனர். இதில் ஒரு பிரிவினர், மிக நன்றாகக் கல்வி பயின்ற, கணவருக்கு சரி சமமாக நிற்கக் கூடிய தகுதிபெற்ற பெண்களாவர்.

இரண்டாவது பிரிவினர் பெரியவர்களது அழுத்தங்கள் காரணமாக ஒரு வட்டத்துக்குள் தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டுள்ளவர்களாவர். இவர்கள் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டதொரு வாழ்க்கைக்கு உட்படுகின்றனர்.



அவுஸ்திரேலிய அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளினால் ஏற்படக்கூடிய நிலைமைகள் பற்றி ஆராய்ந்து பார்த்து ஒரு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதாவது, 18 வயதுக்குக் குறைந்த பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுப்பதற்காக நாட்டை விட்டு வெளியேற்றுவது பாரிய குற்றமாகும் என அறிவித்துள்ளது.

இக் குற்றத்தைச் செய்து அகப்படக் கூடிய நபர்களுக்கு 25 வருடங்கள் வரையிலான சிறைத் தண்டனை வழங்க அந்நாட்டு உயரதிகாரிகள் இப்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

-பாரூக்

# கட்ரீனா சூறாவளி

## அமெரிக்க சூறாவளி : உயிரிழந்தோர் 100 ஆனது!

அமெரிக்காவில் சூறாவளிக் காற்றினால் பாதிக்கப்பட்ட மிஸிஸிப்பி மாகாணத்திலும், நியூ ஓர்லீன்சில் ஏற்பட்ட சூறாவளி மற்றும் வெள்ளத்திலும் சிக்கி நூற்றுக்கணக்கானோர் பலியாகியுள்ளனர்!

நியூ ஓர்லீன்ஸ், மிஸிஸிப்பி மற்றும் அல்பாமா மாகாணங்களில் நேற்று முன் தினம் ஹார்ரிகேன் கட்ரீனா எனப்படும் பயங்கர சூறாவளி தாக்கிய அடுத்த சில





நிமிடங்களிலேயே கனத்த மழையும் கொட்டியது. அதோடு நிற்காமல், கடல் அலைகள் சீறிப் பாய்ந்து நிலப்பகுதிக்குள் வந்து வெள்ளமாக பாய்ந்தது.

சூறாவளி, வெள்ளம், கடல் அலை சீற்றம் என இயற்கைச் சீற்றத்தில் சிக்கி இந்த மாகாணங்களில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர்.

வீடுகளில் வெள்ளம் சூழ்ந்ததால், பொதுமக்கள் அனைவரும் வீட்டின் கூரை மீது ஏறிக் கொண்டனர். அவர்களை மீட்புக் குழுவினது ஹெலிகொப்டர்களில் சென்று மீட்டு வருகின்றனர். வாகனங்களும், சேதமடைந்த வீடுகளும் வெள்ளத்தில் மிதக்கின்றன.

மீட்க்கப்பட்டவர்கள் அனைவரும் ஆங்காங்கே விளையாட்டு அரங்குகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவ்வளவு பேருக்கும் தேவையான வசதி களை அளிக்க முடியாமல் மீட்புப் படையினர் திணறி வருகின்றனர்.

இந்நிலையில், இடிந்த கடைகள் மற்றும் வீடுகளில் கொள்ளையடிக்கும் கும்பலையும் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் காவல்துறையினர் ஈடுபட வேண்டியுள்ளது.

நியூ ஓர்லீன்ஸ், மிஸிஸிப்பி அல்பாமா மாகாணங்கள் உட்பட அதகைச் சுற்றியுள்ள பகுதிகளில் நொடிக்கு 232 கி.மீ. வேகத்தில் வீசிய இந்த சூறாவளிக் காற்றினால், பெரிய பெரிய கட்டங்களும், மரங்களும், மின்சார கம்பிகளும் பெயர்ந்து விழுந்தன. பாலங் களும், மைதானக் கூரைகளும் இருந்த இடம் தெரியாமல் போயுள்ளன.

மக்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்பிச் செல்ல முயற்சிக்க வேண்டாம் என்று பொதுமக்கள் காவல்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். சேதங்களை சரி செய்து சீராக்க குறைந்தது இரண்டு மாதங்கள் ஆகும் என்று பொறியியலளார்கள். தெரிவிக்கின்றனர். சூறாவளி அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு, நியூ ஓர்லீன்ஸ் பகுதியில் இருந்த மக்கள், பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுவிட்டதால் உயிரிழப்பு குறைந்துள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுவரை அமெரிக்காவில் வீசிய சூறாவளிக் காற்றிலேயே இந்த ஹார்ரிகேன் கட்ரீனாதான் மிகக் கடுமையான சூறாவளி என்று கூறப்படுகிறது. இதனால் பல பில்லியன் டாலர் அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சூறாவளி : அமெரிக்க வரலாறு காணா பேரழிவு - புஷ்!

அமெரிக்காவில் ஏற்பட்ட ஹரிகேன் கட்ரீனா எனப்படும் சூறாவளிக் காற்று, அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய இயற்கைப் பேரழிவு என்று அதிபர் ஜார்ஜ் புஷ் கூறியுள்ளார்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு அமெரிக்காவில் வீசிய சூறாவளிக் காற்றினால் மிஸிஸிப்பி, நியூ ஓர்லீனஸில், அலபாமா மாகாணங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. சூறாவளி மற்றும் மழை, வெள்ளத்தில் சிக்கி நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியாகினர். ஆயிரக்கணக்கானோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.


பாதிக்கப்பட்ட பகுதிகளை இன்று பார்வையிட்ட அமெரிக்க அதிபர் மற்றும் ஜோர்ஜ் புஷ், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, அமெரிக்கா எதிர் கொண்ட மிகப்பெரிய பேரழிவு இது என்று புஷ் குறிப்பிட்டார்.

மேலும், சூறாவளியினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் புஷ் பேசினார். சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள 10,000க்கும் மேற்பட்ட மீட்புக் குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வீடுகளில் சிக்கியிருப்பவர்களை மீட்டு வருகின்றனர். இதுவரை 3,000 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் சிக்கி யிருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

சுமார் 50,000 பேர் வீடுகளை இழந் துள்ளனர். என நம்பப்படுகிறது. அமெரிக காவில் 80 சதவீத அமெரிக்காவின் கப்பற் மற்றும் விமானப் படைகளும் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பாதிக்கப் பட்டவர்களை தங்க வைக்க பல்வேறு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

3 மாகாணங்களிலும் வெள்ள நீர் தேங்கியிருப்பதால், குடிநீர் மற்றும் மின்சாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாகாணம் முழுவதும் வெள்ள நீர் தேங்கியுள்ளதால் தொற்றுநோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. மேலும் கட்டடங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது. இதனால் பொதுமக்கள் அனைவரும், தங்களது வீடுகளுக்குச் செல்ல வேண்டாம் என்றும், அவர்கள் தற் காலிக குடியிருப்பு, முகாம்கள், வாகனங்களில் தங்க வைக்கப்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



---

தினமுரசின் அபிமான வாசகர்களே! உங்களுக்காக சனிப் பெயர்ச்சியின் பின்னரான பலாபலன்களை விரிவாக கணித்துத் தந்துள்ளார் உலக யாந்திரீக சித்தர் பேராசிரியர் டாக்டர் பி.கே.சாமி ஜயா அவர்கள். அறிந்து அனுகூலமடையுங்கள். இதோ அவரது ஆசியும், அருளும்.

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

**இந்தப் பகுதியில் சனிப் பெயர்ச்சியையும் குரு மாற்றத்தையும் கலந்து எழுதியுள்ளேன். பொதுவாக ராசி வாரியாக கொடுத்து இருந்தாலும் தீய பலன் உள்ளவர்கள் பயப்பட அவசியம் இல்லை. காரணம் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ராசி நேயருக்கு இந்த சனிப் பெயர்ச்சி நன்மையாக இருந்தால், நீங்களும் தீய பலனில் இருந்து விலக வாய்ப்பு இருக்கின்றது. நல்ல திசைகளும் துணைக் கிரகங்களின் பார்வைகளும் நன்மையாக இருந்தால் தீய பலன் வருவதற்கு வாய்ப்பு இல்லை.**

**ஓம் சத் மத் யத் மத்**

## மகரம்



மகரம் - முதல் ஏழாம் இடம்

சனி பகவான் 24.06.2005 முடிய ஏழாமிடத்தில் சஞ்சரிக்கவுள்ளார். ஏழாமிடம் சனியின் சஞ்சாரத்திற்கு உகந்த ஸ்தானமல்ல. என்றாலும் என்ன செய்யமுடியும்? அவரைத் தடுக்க நம்மால் முடியுமா? வந்தவரை வழியனுப்பி வைக்க என்ன செய்யலாம் என்று பார்ப்போம்.

இதனால் எடுத்த காரியங்களில் வீண் அலைச்சலும், மன வேதனையும் காரிய தாமதமும் உண்டாகும். வாகன யோகம் பயன் தராது. பொதுவாக இல்வாழ்க்கை, வியாபாரம், உத்தியோகம் முதலியவற்றில் சுறுசுறுப்பு குறைந்து ஒரு தர்க்க நிலை உண்டாகும்.

சொந்த பந்தங்கள் விரோதம் கொள்வார்கள். கூட்டுத் தொழிலில் இலாபம் குறையும். கூட்டாளிகள் சிலபல பிரச்சினை களை ஏற்படுத்திப் பிரிந்து செல்வார்கள். இளம் வயது ஆண், பெண்களின் திருமண முயற்சிகள் தடைப்படும். இந்தக் காலகட்டத்தில் சனீஸ்வர ஸ்தோத்திரங்கள் பாராயணம் செய்து, கந்தனை வழிபாடு செய்து வந்தால் சனி கடுமையைக் குறைத்து தயவு தாட்சண்யம் காட்டுவார். எனவே அதற்கான வழியைப் பின்பற்றுங்கள். அதில்தான் நிம்மதி கிட்டும்.

கணவன், மனைவி இருவருக்குள்ளும் சண்டை சச்சரவுகள் ஏற்படும். இருவரில் ஒருவர் நோய் வாய்ப்படவோ அல்லது அறுவை சிகிச்சைக்குட்படவோ வேண்டிய நிலையும் வரலாம். ஒரு சிலர் அபார்ஷன் போன்ற அவஸ்தைகளுக்கு ஆளாகக் கூடும்.

வேண்டாத விரோதிகள் துணிவுடன் பகைமை பாராட்டுவார்கள். உடல் பாதிக்கப்பட்டு நோய் வாய்ப்படலாம். இது வரையில் அமைதியாக இருந்த கடன்கார்கள் இப்போது கொடுத்த கடனைக் கேட்டு தொந்தரவு செய்வார்கள். கோபப்படாமல் அவர்களைச் சமாளிக்கப் பாருங்கள். நயமாகப் பேசி தவணை வாங்கிக் கொள்ளுங்கள். நேரம் சரியில்லை என்பதை மனதில் கொண்டு செயல்படுங்கள்.

பிரயாணங்களில் சிலபல தடைகள் உண்டாகும். மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் குறைந்து ஞாபக மறதி உண்டாகும். தேவையற்ற வாக்கு வாதங்களும் சண்டை சச்சரவுகளும் ஏற்பட்டு பொலிஸ், கோர்ட் என்று அலைய நேரிடும். நீங்கள் சிவனே என்று கதவைச் சாத்திக் கொண்டு வீட்டோடு இருந்தாலும் வேண்டாத விவகாரங்கள் வீடு தேடி வந்து எனக்கும் சோறுபோடு என்று கதவைத் தட்டும். மனதில் எதையும் சமாளிக்கும் ஆற்றல் குறைந்து போகும். நல்ல பெயரைத் தக்க வைத்துக் கொள்ள மிகவும் சிரமப்படவேண்டும். குடும்பம், உற்றார் உறவினர் தொடர்புகளில் விரிசல் ஏற்படும். தேவையில்லாமலே பகைமை பாராட்டுவார்கள்.

அடிக்கடி டாக்டரைச் சந்திக்க வேண்டி வரும். உங்களின் வெளிவட்டாரப் பழக்கங் களில் கை வைப்பார். சமுதாய மதிப்புக் குறையும்.

சனி நான்காமிடத்தைப் பார்ப்பதால் தாயார் ஆதரவு குறைவுபடும். வாகன யோகம் சிறப்பில்லை. புதிய வாகனங்கள் வாங்க இது ஏற்ற தருணமில்லை. மாடு, கன்றுகள் நஷ்டம் தரும். மாடு கன்றுகள் வத்தலோ, தொத்தலோ எப்படியிருந்தாலும் இருப்பதைக் கொண்டே காலத்தைத் தள்ளுங்கள். புதியன வாங்க வேண்டாம். வீடு, மனை, பூமி முதலியவற்றால் விரயச் செலவுகள் ஏற்படும்.

ஒன்பதாமிடத்தைச் சனி பார்ப்பதால் தந்தையாரின் உடல் நலம் குன்றும். மருத்துவச் சிகிச்சை செய்ய வேண்டியும் வரலாம். தந்தை வழிச் சொத்தில் சிக்கல்களும் வில்லங்கங்களும் ஏற்படும். பாகப் பிரிவினையால் பங்காளிகள் பகை வளரும். விட்டுக் கொடுத்துப் போவதே மேல். அல்லது பிரிவினைகளை ஒத்திப் போடுவதே மேல்.

அடுத்து, குரு பகவானைப் பற்றிப் பார்ப்போம். குரு பகவான் வருட ஆரம்பம் முதல் 19.09.2005 வரை உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்க உள்ளார். ஒன்பதாமிடம் குருவின் சஞ்சாரத்திற்கு மிகவும் உகந்த இடமாகும்.

இதனால் மனம் தெளிவடைந்து மாபெரும் காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கி, தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சியடைவார்கள். விவசாயிகளுக்கு அமோக விளைச்சல் உண்டாகி தனலாபம் பெறுவார்கள். வியாபாரிகளும் தொழிலதிபர்களும் அதிக இலாபத்தை அடைவார்கள். உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வு, சம்பள உயர்வினை அடைவார்கள். திருமணமாகாத இளம் வயது ஆண் பெண் களுக்குத் திருமண வாய்ப்பு கைகூடும்.

குருபகவான் ஐந்தாம் பார்வையாக உங்களது ஜென்ம ராசியைப் பார்ப்பதால் உடல் பலம் பெறும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சமுதாயத்தில் உங்களது மதிப்பு மரியாதை, கௌரவம், அந்தஸ்து ஆகியவை உயரும். மதிப்பு மிக்க கௌரவப் பதவி ஒன்று உங்களைத் தேடி வரும்.

குருபகவான் ஏழாம் பார்வையாக உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்தைப் பார்க்கிறார். இதனால் உடன் பிறந்த சகோதரர்கள் உதவிக்கு வருவார்கள். அவர்களின் மூலம் ஆதாயம் உண்டாகும். எந்தக் காரியத்தையும் துணிந்து செய்யும் ஆற்றல் உருவாகும். மனதிலிருந்த பயம், கவலைகள் விலகி சுறுசுறுப்பு, தைரியம் தன்னம்பிக்கை உருவாகும்.

குருபகவான் ஒன்பதாம் பார்வையாக உங்கள் ராசிக்கு ஐந்தாமிடத்தைப் பார்ப்பதால் பிள்ளைகள் சம்பந்தப்பட்ட விஷயங்களெல்லாம் நல்லபடியாக நடக்கும். முன்னோர்கள் தேடி வைத்த பூர்வீகச் சொத்துக்களில் ஏற்பட்டிருந்த வில்லங்க, விவகாரங்கள் நீங்கும். ரேஸ், சூதாட்டம், ஸ்பெகுலேஷன், ஷேர் மார்க்கட் முதலியவற்றில் அதிர்ஷ்டப் பரிசுகள் கிட்டும்.

இத்தகைய நற்பலன்களைக் கொடுத்து வந்த குரு பகவான் 19.09.2005 முதல் ராசி மாறி பத்தாமிடத்தில் சஞ்சரிக்கவுள்ளார். இந்தக் காலகட்டத்தில் சனியும் சரியில்லாததால் எச்சரிக்கையோடு செயல்படுவது அவசியம். என்றாலும் கிட்டத்தட்ட மூன்று மாதங்கள்தானே சமாளிக்க முடியாதா? பல்லைக் கடித்துக் கொண்டு இந்த வருடத்தை ஓட்டி விடுங்கள்.

தொழில் பலம் குறையும். சோர்வு ஏற்படும். வியாபாரிகள் சில நிர்ப்பந்த நெருக் கடிகளைச் சந்திக்க நேரும். உத்தியோகஸ் தர்கள் மேலதிகாரிகளின் சீற்றத்திற்கு ஆளாக நேரும். பெரும்பாலான இந்த ராசி நேயர்கள் பதவி மாற்றத்தையும் இடமாற்றத்தையும் அடைவார்கள். சமுதாய அந்தஸ்து குறையும்.


குருபகவான் ஐந்தாம் பார்வையாக உங்கள் ராசிக்கு இரண்டாமிடத்தைப் பார்ப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாது. வரவேண்டிய பாக்கிகள் உரிய நேரத்தில் வந்து சேராது. செய்தொழில் வியாபாரங்களில் இலாபம் குறைந்து போகும். குடும்பத்தில் கணவன் மனைவி ஒற்றுமை குறைந்து சண்டை சச்சரவுகள் தோன்றும்.

குரு பகவான் ஏழாம் பார்வையாக உங்கள் ராசிக்கு நாலாமிடத்தைப் பார்ப்பதால் தாயார் வழி ஆதரவு குறையும். அவரது உடல் ஆரோக்கியம் பாதிப்படையும். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல் தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். வாகனங்கள், மாடு கன்றுகள் நஷ்டம் தரும். விவசாய வருமானம் குறை யும். குருபகவான் ஒன்பதாம் பார்வையாக உங்கள் ராசிக்கு ஆறாமிடத்தைப் பார்ப்பதால், உடல் ஆரோக்கியத்தில் சிலபல கோளாறுகள் உருவாகும். தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு அவற்றைச் சரிக்கட்ட கடன் வாங்க நேரிடும். போட்டி, பொறாமைகள் அதிகரிக்கும். வழக்குகள் இருப்பின் அது இப்போது உங்களுக்குச் சாதகமாக தீர்ப்பாகாது. எனவே அவற்றை ஒத்திவைக்க முயற்சிப்பது நல்லது. சொந்த பந்தங்கள் விரோதம் கொண்டு பிரிந்து செல்வார்கள்.

*(அடுத்த வாரம் கும்ப ராசியைப் பற்றி பார்க்கலாம்...)*



> தேடிச் சோறு நிதந் தின்று - பல
> சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
> வாடித் துன்பமிக உழன்று - பிறர்
> வாடப் பல செயல்கள் செய்து - நரை.
>
> - சுப்பிரமணிய பாரதியார்




# பாதிக்குப் பாதி

பாப்பா முரசு சிறுகதை

பொன்வயல் என்ற கிராமத்தில் கந்தசாமி என்றொரு பால்காரன் இருந்து வந்தான். அவனிடம் இரண்டு பசு மாடுகள் இருந்தன. பால் கறந்து பால் வியாபாரம் செய்து வந்தான்.

கந்தசாமி எவ்வளவு பால் கறக்கிறானோ அதே அளவு தண்ணீர் கலந்து வியாபாரம் செய்து வரலானான்.

அவனை விட்டால் வேறு வழியில்லாததால் அவ்வூர் மக்கள் அவனிடமே பால் வாங்கி வந்தனர்.

கந்தசாமியிடம் ஆயிரம் ரூபாய் சேர்ந்துவிட்டது. அதைக் கொண்டு புதியதோர் மாடு வாங்கலாம் என்ற எண்ணத்துடன் ரூபாயை எடுத்துக்கொண்டு சந்தைக்குச் சென்றான்.



வழியில் களைப்பாக இருந்ததால் ஓர் ஆற்றங்கரையோரமாக இருந்த மரத்தினடியில் பணமுடிப்பை வைத்துவிட்டு தூங்கிவிட்டான்.

கந்தசாமி கண்விழித்துப் பார்த்தபோது பக்கத்திலிருந்த அவனுடைய பணமுடிப்பைக் காணவில்லை. சுற்று முற்றும் தேடிப் பார்த்தான். கிடைக்கவில்லை. தான் படுத்திருந்த மரத்தின் மேல் பார்த்தான். அங்கு ஒரு கிளையில் ஒரு குரங்கு அமர்ந்து கொண்டு கந்தசாமியினுடைய பையைப் பிரித்துக் கொண்டிருந்தது.

பைக்குள் தின்பண்டங்கள் எதுவும் இல்லாமல் வெறும் நாணயங்களாக இருக்கவே, குரங்கிற்கு ஏமாற்றமாகப் போய்விட்டது.

ஆயினும், அது பைக்குள் கையைப் போட்டு ஒரு நாணயத்தை வெளியில் எடுத்தது. அதை கந்தசாமியை நோக்கி வீசியது.

கந்தசாமி குரங்கு வீசிய நாணயத்தைப் பொறுக்கி எடுத்துக்கொண்டான்.

அடுத்தபடியாகக் குரங்கு மற்றொரு நாணயத்தை எடுத்தது.

அதையும் தன் பக்கமாகத்தான் குரங்கு எறியும் என்ற நம்பிக்கையுடன் ஆவலுடன் அதையே பார்த்துக் கொண்டிருந்தான் கந்தசாமி.

ஆனால் குரங்கு இந்த முறை நாணயத்தைக் கந்தசாமியை நோக்கி எறியவில்லை, ஆற்றில் விட்டெறிந்தது.

கந்தசாமி, "ஐயோ, என் பணம் ஆற்றோடு போயிற்றே!" என்று அலறினான்.

அடுத்த முறை எடுத்த நாணயத்தை கந்தசாமியை நோக்கி எறிந்தது குரங்கு.

இவ்வாறு ஒரு நாணயத்தை கந்தசாமியிடமும் ஒரு நாணயத்தை ஆற்றை நோக்கியும் எறிந்தது குரங்கு.

கந்தசாமி, "ஐயோ, என் பணத்தில் பாதி ஆற்றோடு போயிற்றே!" என்று அழுது புலம்பினான்.

அப்பொழுது கந்தசாமி ஊரைச் சேர்ந்த ஒருவர் அவ்வழியாக வந்தார். அவர் நடந்த செய்தியை அறிந்து, "கந்தசாமி, பாலில் பாதிக்குப் பாதி தண்ணீர் கலந்து விற்பனை செய்தாய். பாலில் வந்த பணம் உனக்குக் கிடைத்தது. தண்ணீரில் வந்த பணம் தண்ணீரிலேயே போய்விட்டது!" என்றார்.

# ஆத்திசூடி


## சூது விரும்பேல்

நீ மனித வாழ்வைக் கெடுத்து வஞ்சக எண்ணங்களுக்கு இடமளிக்கும் சூதாட்டங்களை விளையாட கனவிலும் கூட ஆசைப்படாதே!

-ஔவையார்

எஸ் நிரஞ்சலா, கண்டி.

# பசுவை பாதுகாப்போம்




பால்குடிக்கும் நேரமாச்சுத் தம்பி
பள்ளிக்கூடம் போகவேணும் தம்பி
பால்குடிக்கச் சுறுசுறுப்புக் கூடும்
பளபளக்க உடல்வளர்ச்சி தேறும்.

பச்சைப்புல்லை மேயுதுபார் தம்பி
பால்மடியை ஊட்டுதுபார் கன்று
பசுமையான வாழ்வுதரும் மாட்டைப்
பதைபதைக்கக் கொல்லல்கொடும் பாவம்

பால்போலே வெள்ளைமனம் என்பர்
பாலன்நீ நல்லவைகள் செய்வாய்
பால்நிறைந்த வாளியைப்பார் தம்பி
பால்பொழியும் பசுவினைநாம் காப்போம்.

# அதிசய உலகம்

## பரிசுத் தொகையை கோயில் கட்டக் கொடுத்தவர்



தமக்குக் கிடைத்த பரிசுத் தொகை ரூ.4.25 கோடியைத் தான் வாழ்ந்த ஊரில் உள்ள கோயிலை மீண்டும் கட்டுவதற்கு நன்கொடையாகக் கொடுத்தார் மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி குயென்ரர் ப்ளோபெல்.


ஜெர்மனியைச் சேர்ந்த ப்ளோபெல் 1936, மே 21ஆம் தேதி வால்டர்ஸ் டார்பில் உள்ள சிலேசியாவில் பிறந்தார். 1945இல் ஜெர்மனியில் உள்ள டிரெஸ்டன் நகருக்கு அவரது குடும்பம் இடம் பெயர்ந்தது.

அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயம், யூதக் கோயில் ஆகியவற்றைச் சீரமைத்துக் கட்டுவதற்காக தமது பரிசுத் தொகையில் பெரும் பகுதியை நன்கொடையாக அளித்தார் ப்ளோபெல்.

அவரது மனைவி லாரா, இத்தாலியைப் பூர்வீகமாகக் கொண்டவர். அமெரிக்காவில் வாழ்கிறார். இத்தாலியின் பியூபைன் பகுதியில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கும் தமது பரிசுத் தொகையில் ஒரு பகுதியை அளித்துள்ளார் ப்ளோபெல்.

டிரெஸ்டனில் உள்ள கோயிலைப் புனருத்தாரணம் செய்ய ஏற்கனவே 1.8 கோடியை நன்கொடையாக வழங்கியுள்ளார் ப்ளோபெல். இவர் பல பரிசுகளை வாங்கிக் குவித்தவராவார்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 14.09.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 612**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 610

**பரிசுக்குரியவர்:**
**ம.துபாகரன்,**
**நீதிமன்ற வீதி, மல்லாகம்.**

**பாராட்டுக்குரியவர்கள் :**

| | |
|---|---|
| கு.ரஜந்தினி, தரம் 8B, 40, தபாற்கந்தோர் வீதி, திருகோணமலை. | எம்.எஸ்.எம். இஸ்ஹாக், கிராம சபை வீதி, வாழைச்சேனை - 05. |
| சைனப் பாரிஸ், தரம் 3F, முஸ்லிம் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 4. | ஆர். கிறிஸ்டினா, 22, பரிஸ்டர்புரம், புத்தளம். |
| எல்.பி. கீர்த்தனா, 53/19, ஸ்ரீ பிரியதர்ஷன மாவத்தை கொழும்பு 10. | யோ. சரண்யா, தரம் 9 A, திரு/கலைமகள் வித்தியாலயம், அன்புவழிபுரம், திருகோணமலை. |
| பி. அப்துல்லா, அல் அஷ்ரப் மகா வித்தியாலயம், மாபோல, வத்தளை. | எஸ். தனேஷ்ராஜ், 22 கட்டை, மரக்காரம்பளை வீதி, கணேசபுரம், வவுனியா. |
| தர்ஷிகா, 54, பந்தாவ, பொல்கஹவெல. | ர. பவதாரணி, தரம் 2, கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம், நாவலப்பிட்டி. |


# உங்கள் பொது அறிவு எப்படி?

## முக்கிய ஆண்டுகள்

| | |
|---|---|
| 1. கி.மு. 421 | எகிப்தியரின் 365 நாள் கலண்டர் பின்பற்றப்பட்டது. |
| 2. கி.மு. 2900 | எகிப்திய பிரமிட்டுக்கள் அமைக்கப்பட்டன. |
| 3. கி.மு. 776 | சிஸிலில் முதலாவது ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. |
| 4. கி.மு. 483 | புத்தர் பரிநிர்வாணம் அடைந்தது. |
| 5. கி.மு. 352 - 23 | மகா அலெக்சாண்டர் படையெடுப்பு இடம் பெற்றமை. |
| 6. கி.மு. 55 | ஜூலியஸ் பிரித்தானியா மீது படையெடுத்தமை. |
| 7. கி.மு. 04. | கிறிஸ்துவின் பிறப்பு. |
| 8. கி.பி. 569 | முகம்மது நபி மெக்காவில் ஜனனம். |
| 9. கி.பி. 1213 | ஜோன் அரசன் மகா பட்டயத்தில் கைப்பற்றப்பட்டது. |
| 10. கி.பி. 1216 | இங்கிலாந்தில் முதலாவது பாராளுமன்றம் கூட்டப்பட்டது. |
| 11. கி.பி. 1217 | மார்க்கோ போலாவின் யாத்திரை ஆரம்பம். |
| 12. கி.பி. 1338 | நூற்றாண்டு முதலாவது யுத்தம் ஆரம்பம். |


# தகவல் பெட்டி

## பிச்சைக்காரக் கரடி



மேற்கு சைபீரியாவில் சிங்னோகோர்ஸ்க் நகரில் பிச்சையெடுக்கும் தொழிலில் இறங்கிய ஒரு கரடியாரைக் கைது செய்து சிறையிலடைத்தனர். இக்கரடியார் உணவகம் ஒன்றுக்கு அருகில் அமர்ந்து கொண்டு உணவருந்த வரும் டிரைவர்களிடம் உணவுப் பொருட்களைக் கேட்பதாகக் கிடைத்த முறையீட்டை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டார். இப்போது பொலிஸார் இவருக்கு தேனும் கேக்கும் ஊட்டி வளர்க்கிறார்கள். இவரை ஏதாவது மிருகக் காட்சி சாலைக்கு ஒப்படைக்கலாம் என்று பார்த்தால் யாரும் ஏற்கத் தயாராக இல்லை என்பதே பரிதாபமான செய்தி.

## இரசனை



ஜேர்மனியின் உயர்ந்த மலைச் சிகரமான 'சுங்ஸ்பிட்ஸ்' மலையைச் சுற்றியுள்ள பிரதேசம் மிகவும் ரம்மியமானது. இதன் சுந்தரத்தை மிகவும் நெருக்கத்தில் பார்ப்பதற்காக மலையுச்சியில் விசாலமான தொலை நோக்கி ஒன்றைப் பொருத்தியுள்ளனர். 9000 அடி உயரத்தில் பனி உறைந்த தொலைக்காட்டி மூலம் ஒரு சுற்றுலாப் பயணி சுற்றுச் சூழல் அழகை இரசிக்கிறார்.

## நீர்ச் சறுக்கு




லீ ஹோ பைபர் படகின் ஆதாரத்துடன் நீர் மீது சறுக்கி விளையாடுவதற்கு பயிற்சி பெற்ற மனிதர்களே மூச்சு வாங்குவார்கள். ஆனால் சில நாடுகளில் உள்ள ஐந்தறிவு படைத்த ஹொராங் ஹொட்டான்களுக்கு இவ் விளையாட்டில் ஈடுபடுவது அல்வா சாப்பிடுவது மாதிரி. அண்மையில் வட கொரியா ஹீசானில் நடைபெற்ற அபெக் வர்த்தக மாநாட்டின் இடைவேளை நேரத்தில் நிகழ்ந்த ஹொராங் ஹொட்டானின் கண்காட்சியின் போது பிடித்த படம்.

## போத்தலும் தலையும்



சீனாவின் சேங்டு நகரில் நடைபெற்ற இராணுவக் கண்காட்சி ஒன்றின் போதே இராணுவ வீரர்கள் இவ்வாறு தமது வீரத்தை வெளிக்காட்டினர். இவர்கள் இவ்வாறு ஒரு போத்தலை மாத்திரமின்றி பல போத்தல்களையும் உடைத்து நொறுக்கினார்கள்.

இங்கிலாந்தில் வருடாந்தம் மனித சக்தியில் இயங்கும் பறக்கும் இயந்திரப் போட்டி நடைபெறுவது வழக்கம். விசாலமான வௌவாலின் இறகுகள் போல் காட்சி தரும் செயற்கை இறகுகளின் துணையுடன் வானில் இருந்து டேவிட் மூவர் பறந்து வந்த காட்சியே இது.



## குத்து

முன்னாள் குத்துச் சண்டை வீரரான ரஸ் விலியம் தனது நாய்க்குட்டிக்கும் பொக்ஸிங் பயிற்சியளித்துள்ளார். இப் புகைப்படத்தில் தெரிவது 15 மாதங்களே நிரம்பிய ரஸியன் டேரியர் இனத்தைச் சேர்ந்த 'ரிங்கோசார்' என்ற நாய் தனது குருவிற்கே குத்து விடும் காட்சியாகும். ரிங்கோ சாருக்கு மேலே பாய்ந்து தனது முன்னங் கால்களால் எதிரியைத் தாக்கும் தனித் திறமையுள்ளது. இதெல்லாம் பார்க்கும்போது நமது தமிழ் சினிமாவுக்கு சிறந்த சண்டைப் பயிற்சியாளர் ஒருவர் ரெடியாக உள்ளார் போல் தெரிகிறதா?



## பறக்கும் மனிதன்





ரோஹன் - பிருந்தா

# பிரசாந்த் திருமணம்

காதல் இளவரசன் நடிகர் பிரசாந்த் - கிரஹலட்சுமி திருமணம் சென்னையில் கடந்த 01.09.2005 அன்று முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடைபெற்றது. 'வைகாசி பொறந்தாச்சு' படம் மூலம் அறிமுகமாகிய பிரஷாந்த், இளம் தலைமுறை நடிகர்களில் மிக மூத்தவர் ஆவார். 60க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள பிரசாந்த், தனக்குப் பின்னர் வந்த அஜீத், விஜய் ஆகியோர் திருமணமாகி செட்டிலான பிறகும் தொடர்ந்து பெச்சிலராக இருந்து வந்தார்.

இந்நிலையில் அவருக்கும், அவர் வசிக்கும் அதே தி.நகர் பகுதியில் வசித்து வரும் கிரஹலட்சுமிக்கும் திருமணம் நிச்சயமானது. இவர்களது திருமணம் சென்னை சாந்தோம் பகுதியில் உள்ள மேயர் ராமநாதன் செட்டியார் திருமண மண்டபத்தில் காலை 7.45 மணிக்கு நடைபெற்றது.

மாலை 6.30 மணிக்கு வரவேற்பு. திரைப்பட இசையமைப்பாளர் தேவா குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடந்தது.

திருமணத்தை முதல்வர் ஜெயலலிதா தலைமை தாங்கி நடத்தினார். இந்தி சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன், ஐஸ்வர்யா ராய் உள் ளிட்ட திரையுலகப் பிரபலங்கள் இத்திருமண விழாவில் கலந்து கொண்டனர்.



பிரசன்னா - லைலா
கண்ட நாள்

# நமீதாவின் 'நச்' பதில்கள்

வர வர நமீதா கலக்கல் 'நச்' கலக்கலாக மாறி வருகிறது. சிங்கிள் 'ஸ்வீட்டி'யாக இரசிகர்களுக்கு குஷியூட்டி வந்த நமீதா, அர்ஜுனின் புதிய படத்தில் 'டபுள் ரோலில்' வந்து இரட்டை சந்தோஷத்தைக் கொடுக்கவுள்ளார்.

பனை மரத்திற்குச் சவால் விடும் வகையில் பச்சைப் பசேலென்று செழித்து வளர்ந்து, ஓங்கு தாங்காகக் காணப்படும் நமீதா, கவர்ச்சியில் கஞ்சம் காட்டுவதே இல்லை. 'மேலே' ஒரு துணி, 'கீழே' ஒரு துணி; மற்ற எல்லா ஏரியாக்களையும் இரசிகர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுத்து பட்டையைக் கிளப்பி வருகிறார்.


கனத்த உடலை படு கச்சிதமாக ஷேப்பாக வைத்துக் கொண்டு கவர்ச்சியில் பூந்து விளையாடி வரும் நமீதா, அர்ஜுனுடன் நடிக்கும் 'மணிகண்டா' படத்தில் இரட்டை வேடத்தில் வருகிறார். இரண்டு வேடத்துக்குமே ஒரே வேலைதான். அதாவது கிளாமர் காட்டுவது.

இதில் ஒரு வேடத்தோடு இன்னொரு வேடம் போட்டி போட்டுக் கொண்டு கவர்ச்சி காட்டி நடிக்கிறதாம். இந்த இரட்டைக் கவர்ச்சியில் இரசிகர்கள் திண்டாடப்போவதாக தயாரிப்பாளர் தரப்பு உத்தரவாதம் தருகிறது.


நமீதா பற்றி இன்னொரு விஷயம். வீட்டில் குதிரைகள் சைஸில் பல ராட்சஷ சைஸ் நாய்களை சோறு போட்டு வளர்த்து வருகிறார். கூடவே குதிரைகளையும் வளர்க்கிறார். நேரம் கிடைக்கும்போது குதிரையில் ஏறி தனது பிரமாண்ட பங்களாவைச் சுற்றி வருகிறார்.


சினிமாவுக்கு வந்த குறைந்த காலத்திலேயே இம்மாம் பெரிய பங்களா கட்டியவர் நமீதாவாகத்தான் இருப்பார். அவ்ளோ பெரிய வீடு. வீட்டைச் சுற்றி பெரிய தோட்டத்தையும் உருவாக்கியிருக்கிறார்.

குதிரைகளும் தோட்டமும் நமீதா மாதிரியே நல்ல செழிப்பாக வளர்ந்து நிற்கின்றன.



நமீதா



ரவி - ஸ்ரேயா
மழை

# லட்சுமி ராயின் விடாமுயற்சி

லட்சுமி ராய் ரொம்பவே நம்பிக்கையானவராக உள்ளார். முதல் படமான கற்க கசடற, இவரைக் கவிழ்த்து விட்டாலும் பல அதை நினைத்துக் கவலைப்படாமல் படு தெம்பாக அடுத்தடுத்து படங்களில் நடித்து தன்னை நிலைப்படுத்திக் கொள்ளப் பாடுபட்டு வருகிறார்.

பெல்காம் ஏரியாவில் மதுபானக் கடைகளை செயினாக நடத்தி வரும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவரான லட்சுமி ராய், தமிழ் சினிமாவில் ஒரு இடத்தைப் பிடித்தே தீர வேண்டும் என்று தீராத எண்ணத்துடன் இருக்கிறார்.

இதற்காக சென்னையிலேயே நிரந்தரமாகத் தங்கி வாய்ப்புத் தேடி வருகிறார்.

தயாரிப்பாளர்களையும், இயக்குனர்களையும் நேரிலும், போனிலுமாகப் பிடிக்கும் லட்சுமி ராய், தனக்கு வாய்ப்புத் தருமாறு நேரடியாகவே கேட்கிறார். அப்படியே பல ரவுண்டு நேரிலும் போய் பார்த்துப் பேசுகிறார்.

இப்படியாக, தனது நேரடி வேட்டையாடல் மூலம் 2 படங்களைப் பிடித்துள்ளார்.

அதில் ஒன்று - 'குண்டக்க மண்டக்க'. இன்னொரு படம் 'ஒரு காதலன் ஒரு காதலி'. இந்த இரண்டு படங்களிலும் ராய் அதிகம் நம்புவது 'ஒரு காதலன் ஒரு காதலி' படத்தைத்தான்.



---

**புத்தளம், தில்லையடி, சீ.எஸ்.எம். ஜாபீர் கேட்ட நடிகை லைலாவின் முகவரி:**

**Laila**
**604, Sprine Leaf Apts,**
**7 Bungalows Road,**
**andheri (west),**
**Mumbai - 400061.**
**Phone - 9841041142**

---

**யாழ்ப்பாணம் நிரஞ்சன் கேட்ட சின்னத்திரை நடிகர் விஜய் ஆதிராஜ் முகவரி:**

**Vijay Adiraj**
**No11, Thulasi Apts,**
**Kuppuswamy Street, T.Nagar,**
**Chennai - 600017.**
**Phone - 28152546**



...லா - கார்த்திக்
...ள் முதல்

# தத்தித் தாவும் ஸ்னேகா

நடிகை ஸ்னேகாவுக்கும், தெலுங்கு நடிகர் ஒருவருக்கும் இடையே காதல் பூத்துள்ளதாம். படு வேகத்தில் இந்தப் புதுக் காதல் போய்க் கொண்டிருக்கிறது என்கிறார்கள்.

புன்னகை இளவரசியாக தமிழ் சினிமாவில் வலம் வரும் ஸ்னேகா, ஆரம்பத்தில் பாந்தமான கேரக்டர்களில்தான் நடித்து வந்தார். படிப்படியாக கிளாமருக்கு மாறி குண்டக்க மண்டக்கவாக நடிக்கவும், ஆடவும் ஆரம்பித்து இரசிகர்களுக்கு கிளுகிளுப்பூட்டி வருகிறார்.

நடிப்போடு, நடிகர் ஸ்ரீகாந்துடன் காதலையும் வளர்த்து வந்தார். சூர்யா - ஜோதிகா காதலைப் போல, இவர்களது காதலும் படு இரகசியமாகவே வளர்ந்து வந்தது.

அதாவது, வெளியில் யாரோ போல் பார்த்துக் கொள்வது, பேசிக் கொள்வது, ஒன்னுமே தெரியாதது போல பாவ்லா காட்டுவது. ஆனால் இரகசியமாகச் சந்தித்து கடலை போடுவது என்று படு விறுவிறுப்பாகப் போய்க்கொண்டிருந்தது இவர்களது காதல்.

இடையில் சுனாமியோ, பூகம்பமோ எதுவோ ஒன்று வந்து தாக்கியதில், இந்தக் காதல் சிதிலமடைந்து, சின்னாபின்னமாகி விட்டது. இப்போது நிஜமாகவே இருவரும் பிரிந்து விட்டார்கள் என்று கோலிவுட்டில் கூறிக் கொள்கிறார்கள்.

தமிழில் மட்டும் முதலிலிருந்தே நடித்து வந்த ஸ்னேகா தற்போது தெலுங்குப் படங்களிலும் நடித்து வருகிறார்.

ஏகப்பட்ட பாலிவுட் பாப்பாக்கள், குட்டைத் துணியுடன் கும்மாளம் போட கோலிவுட்டில் குவிந்து வருவதால் முன்பு போல ஸ்னேகாவுக்கு அதிக படங்கள் வருவதில்லை. எனவே இன்னும் ஒரு வருடத்திற்கு தமிழிலும், தெலுங்கிலுமாக நடித்து விட்டு அப்புறம் கல்யாணம் செய்து செட்டிலாகி விடும் முடிவில் இருக்கிறாராம் அம்மணி.

இப்போதைக்கு ஸ்னேகா தமிழில் ஏ.பி.சி.டி., புதுப்பேட்டை ஆகிய படங்களில் மட்டுமே நடித்து வருகிறார். செல்வராகவன் இயக்கும் புதுப்பேட்டை படத்தில் ஸ்னேகா விலை மாதுவாக நடிக்கிறார். மேக் - அப் இல்லாமல் இயல்பான அழகில் ஸ்னேகாவை படமெடுத்து வருகிறாராம் செல்வராகவன்.



ப்ரித்விராஜ் - சரண்யா
பாரிஜாதம்

# ‘ஜில் ஜில்’ த்ரிஷா!

தமிழ், தெலுங்கு என இரட்டைக் குதிரையில் படு ஸ்பீடாகச் சவாரி செய்து கொண்டிருக்கும் த்ரிஷா சம்பள விஷயத்தில் எகிறிக் கொண்டிருக்கிறார்.

ஒரு பக்கம், சர்ச்சைகள் எக்குத் தப்பாக இருப்பது போல, மறுபக்கம், சம்பளத்திலும் சலசலப்பை ஏற்படுத்தி வருகிறார் த்ரிஷா. தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும் த்ரிஷாவுக்கு பெரும் டிமாண்ட் உள்ளது.

த்ரிஷா நடிக்க முன்வந்தால் சம்பளத்தைக் கொட்டிக் கொடுக்க இரண்டு படவுலகத் தயாரிப்பாளர்களும் பெட்டிகளுடன் ரெடியாக உள்ளனர்.

தெலுங்கில் அவர் நடித்த 3 படங்கள் தொடர் ஹிட் ஆகிவிட, த்ரிஷாவுக்கு அங்கு பயங்கர மார்க்கெட்டை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டது. கடைசியாக வெளியான ‘அத்தடு’ பெரும் ஹிட் படமாகியுள்ளதால், அங்கு தனது சம்பளத்தைக் கணிசமாக ஏத்தி விட்டாராம் த்ரிஷா.

சூப்பர் ஸ்டார் நடிகர்களுக்கு அடுத்தபடியாக த்ரிஷாவுக்குத் தான் அங்கு சம்பளம் அள்ளித் தரப்படுகிறது.

தெலுங்கில் வலுவாகக் காலூன்றி விட்டதால் தற்போது தமிழிலும் தனது பலத்தை அதிகரித்துக்கொள்ள முடிவு செய்துள்ளார் த்ரி.


இப்போது சூர்யாவுடன் ‘ஆறு’, விஜய்யுடன் ‘ஆதி’ என இரு படங்களில் புக் ஆகியுள்ளார். விக்ரமுடன் ஒரு படத்தில் நடிக்க முயற்சித்து வருகிறார்.

இப்போதைய தகவலின்படி ஆந்திராவில் த்ரிஷாவின் சம்பளம் ரூ.1 கோடிக்கு கொஞ்சம் குறைவாம். அம்மாடியோவ்.

சமீபத்தில் ‘ஆதி’ படத்திற்காக 50 லாறிகள் மூலம் கொண்டு வரப்பட்ட தண்ணீரில் விஜய்யும், த்ரிஷாவும் நனைவது போன்ற காட்சி சென்னையில் படமாக்கப்பட்டது.

எஸ்.ஏ.சந்திரசேகர் தயாரிக்க, ரமணா இயக்கத்தில் உருவாகும் படம் ஆதி. விஜய்யின் மனைவி சங்கீதா, காமிராவை முடுக்கி வைக்க முதல் காட்சியே படு கிளுகிளுப்பாக படமாக்கப்பட்டது. விஜய், த்ரிஷா இருவரும் மழையில் ஆடிப் பாடுவது போன்ற காட்சியில் த்ரிஷா அணிந்திருந்த உடையும், அது படமாக்கப்பட்ட விதமும் படு ‘ஜில் ஜில்’.

இந்தப் படத்திற்காக சென்னையில் பல ஸ்டுடியோக்களில் ஏகப்பட்ட பொருட் செலவில் பல செட்டுகள் போடப்பட்டு வருகின்றன. பாடல் காட்சிகளை லண்டன், நியூசிலாந்து போன்ற நாடுகளில் படமாக்கவுள்ளார்களாம். காரணம், த்ரிஷாவுக்கு ரொம்பப் பிடித்த நாடு நியூசிலாந்தாம்.





தேஜாஸ்ரீ

# மீண்டும் திகில் படத்தில் ‘ஜோ’

சந்திரமுகியில் நடித்தாலும் நடித்தார். ஜோதிகாவுக்கு ஏகப்பட்ட பட வாய்ப்புகள். அத்தனை வாய்ப்புகளையும் அப்படியே திருப்பி அனுப்பி வரும் ஜோதிகா, ஒரு சில படங்களில் மட்டுமே நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார்.

தெலுங்கில் நடிக்க ஒப்புக்கொண்டு வாங்கியப் இரு படங்களின் பெரிய அட்வான்ஸைத் திருப்பித் தந்துவிட்டார். ஜோதிகா இதற்கு பர்சனல் மேட்டர் என்ற காரணத்தை ஜோதிகா தெரிவித்ததால், அடுத்த மாதம் விரைவில் சூர்யாவுக்கும் ஜோதிகா வுக்கும் திருமணம் என்று பட்டையைக் கிளப்பிவிட்டு விட்டனர் இரு தெலுங்கு தயாரிப்பாளர்களும்.

இதனால் வெறுத்துப் போன ஜோதிகா, தன்னைச் சந்திக்கும் நிருபர்களிடம் அதை திட்டவட்டமாக மறுத்து வருகிறார். இப்போதைக்கு திருமணம் செய்யும் திட்டமே இல்லை என்று தலையில் அடித்துச் சத்தியம் செய்கிறார்.

இப்போது கமலுடன் 'வேட்டையாடு விளையாடு' படத்தில் நடித்து வரும் ஜோதிகா, அடுத்து சிம்புவுடன் ஒரு படத்தில் நடிக்கிறார். அப்படியே அடுத்ததாக தெலுங்குப் படம் ஒன்றிலும் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார்.


தெலுங்கில் தயாராகும் அந்தப் படம் ஏற்கனவே தமிழில் வெளிவந்து வெற்றி பெற்ற ஷாக் படத்தின் ரீமேக் ஆகும். தமிழில் மீனா நடித்த வேடத்தில் ஜோதிகா நடிக்கிறார். இப்படத்திற்கு ஜோதிகாவைத் தேர்ந்தெடுக்கக் காரணம் சந்திரமுகியில் அவரது பிரமிப்பூட்டிய நடிப்பும், அவரது மிரட்டும் கண்களும்தானாம்.

கண்களை உருட்டி, நானே சந்திரமுகி என்று கடப்பாரைக் குரலில் மிரட்டிய ஜோதிகாவைப் பார்த்து பயந்துபோன தயாரிப்பாளர், இவர் தான் நமது அடுத்த திகில் படத்தின் ஹீரோயின் என்று முடிவு செய்துவிட்டு நேரில் வந்து சந்தித்து அட்வான்ஸை திணித்துவிட்டுப் போய் இருக்கிறார்.

இந்நிலையில் சந்திரமுகிக்குப் பின் ஜோதிகாவின் சம்பளத்தை தயாரிப்பாளர்களே சேர்ந்து ரூ.40 லட்சத்துக்கு உயர்த்திவிட்டார்களாம்.

'சும்மா வந்து ஆடுற பொண்ணுகளுக்கே அள்ளித் தர்றோம், இந்தப் பொண்ணு நடிப்புக்கு எவ்வளவும் தரலாம்' என்கிறார்களாம்.

ஆக, ஜோவின் சம்பளம் தானாகவே ரூ.40 இலட்சம் ஆகிவிட்டது.



ப்ரித்திவிராஜ் - சரண்யா
பாரிஜாதம்

# ‘தலை’க்கு விட்டுத் தந்த ‘இளைய தளபதி’

விஜய் - அஜித்துக்கு இடையே ஒரு வழியாக சமாதானக் கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

விஜய்க்கும், அஜித்திற்கும் அப்படி என்னதான் பிரச்சினையோ, கொஞ்ச காலத்துக்கு முன்பு வரை இரண்டு பேரும் அப்படி மோதிக் கொண்டார்கள். அதிலும் அஜித்துக்கு கொஞ்சம் மார்க்கெட் டல் ஆனவுடன், அவரைப் போட்டு வறு வறு என்று வறுத்தெடுத்து வந்தார் விஜய், தனது படங்களில் மறைமுகமாகவும், நேரடியாகவும்.

‘தீனா’ படத்தில் அஜித்தை ‘தல’ என்று கூப்பிடுவார்கள். அந்த ஒரு வார்த்தையை வைத்துக் கொண்டு திருமலை படத்தில் அஜித்தை போட்டுத் தாக்கியிருப்பார் விஜய்.

அதே போல அஜித்தும் தனது படங்களிலும் விஜய்யை மறைமுகமாகத் தாக்கும் வசனங்களைச் சேர்த்தார். இது ஒரு சைக்கிள் மாதிரி ஆகிப் போனது. இருவரும் ஒருவரை ஒருவர் வசனங்களால் தாக்குவதும், அதைக் கேட்டு இரசிகர்கள் கை தட்டுவதும் வழக்கமாகிப் போனது.

ஒரு கட்டத்தில் இந்த மோதல் இருவரின் பேட்டிகளிலும் எதிரொலிக்க ஆரம்பித்தது. இது தொடரக் கூடாது என்று நினைத்த சில நல்ல மனம் கொண்ட திரையுலகப் புள்ளிகள், இருவரிடமும் பேச்சு நடத்தி இருவரையும் சரிக்கட்டிவிட்டதாகத் தகவல்கள் வந்தன.

இந் நிலையில் இருவரது சமீபகாலப் பேட்டிகளிலும் ஒருவர் மீதான ஒருவர் தாக்குதல்கள் குறைந்தன. குறிப்பாக விஜய், அமைதியாகி விட்டார். இதனால் ‘தல’, நிம்மதியாக உள்ளார்.

இந்த நேரத்தில் இன்னொரு நல்ல சேதி. அஜித்தை வைத்து ஏவி.எம்.நிறுவனம் புதிய படம் ஒன்றைத் தயாரிக்கிறது. இந்தப் படத்திற்கு திருப்பதி என்று பெயர் வைத்துள்ளனர். இதில்தான் விசேஷம் இருக்கிறது.

முதலில் திருப்பதி என்ற பெயர் விஜய் படத்திற்காக பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதை அறிந்த ஏவி.எம். நிறுவனம் விஜய்யுடன் பேசியது. டைட்டிலை விட்டுத் தர வேண்டும் என்று ஏவி.எம். கேட்டது. ஹீரோ யார் என்று விஜய் கேட்க, அஜித் என்ற விவரத்தை ஏவி.எம் கூறியது.



ஸ்ரீகாந்த் - ஆர்த்திஅகர்வால்
பம்பரக்கண்ணாலே



# தேன் கிண்ணம்

## எவர் தந்தார்

அவனும் அடித்தான்
இவனும் அடித்தான்

உயிரைக் கையில்
பிடித்த போதும்,
ஊர்த்தாண்டி
வந்த போதும்,

ஆறவில்லை, எம்
நெஞ்சு ஆறவில்லை!

தேசம் அழுகிறதே,
எந்தன் ஊரும்
அழுகிறதே.....

இனவாதம் தின்னும்
தேசம் எங்கும்
பிணவாடையோ?

மதங்கள் மனிதாபம்
எரிக்கவா சொன்னது?

மனிதம் இங்கே
மனிதாபம் எரித்துத்
தின்கின்றதே!

வேண்டுமென்று கேட்டபோது
வரங்கள் ஏதும் தந்ததில்லை.

வேண்டாமென்றபோது
எரியும் தேசம் தந்த
வரங்கள் தான்
இவை?

—முல்லைநிலா.

---

முடிந்தவரை - உன்னை
மறக்க
முயற்சிக்கிறேன் -
உனக்கு
புரையேறுவதில் - எனக்கு
ப்ரியமில்லை.

முட்களால் - என்
இதயத்தில்
கவிதை கிறுக்கி
அதில் கசியும் இரத்தம்
கொண்டு - உன்
ஓவியங்களுக்கு
வர்ணம் தீட்டிக்
கொள்வாய்.

என் வீட்டுக் காகம்
உன் பக்கமாய்
வந்தால் - அதைக்
கல்லெறிந்து
கொன்றுவிடாதே!
உன்னைக் கண்ட சேதி
சொல்லும் வரை.....

நிலாவை வென்று
சாதனை
படைப்பதை விட
நிஸா....
உன்னிடம் தோற்று
வேதனைப்படுவது
மேலானதடி!.....

—சிஹ்னாஸ் தௌபீக்,
ஹுஸைனியாபுரம்.

## என் அன்பே.....

தூறல் மழையோ
தேடல் மனமோ
யாரிடம் என்னுயிரே!
இது கனவோ
நினைவோ
காதலின் வலியோ -
விழிகளின்
நீரோ
விதியின் சதியோ
உன் விம்பத்தில் உள்ள
விசித்திரமோ?

உன் ஞாபகங்கள்
என்னை அழ
வைக்கின்றன
உன் அழகுகள் என்னை
அலைய வைக்கிறது

தேடலில்
தொடங்குகிறேன்
தேடுவதால்
தொலைகிறேன்
பல காலம் வாழக்
கற்றுத் தந்தாய்
சில வார்த்தையால்
சிறகொடித்தாய்
மறு ஜென்மத்திலாவது
சேர்ந்திடுவேன்
என் மரணத்திற்கு ஒரு
மலராவது
கொடுத்து விடு என்
அன்பே!


—வி.முகிலன், நெடுந்தீவு -
கிழக்கு.

## அன்பை எண்ணி



வண்ணத் தாரகைகள்
மின்னும் சத்தமில்லா
ஒரு இரவில்....
கடலலைகளின்
ஓசைக் காற்றோடு
கலந்து வரும்....
உன் - எண்ண
அலைகள் என்றும்
என்னுள் ஒலித்துக்
கொண்டிருக்கின்றன...!

இருளும்....ஒளியும்...
கதை பேசும் நேரம்
நானும்...நீயும்
பேசிய கதைகள்
தொலை தூரத்தில்
ஒலிக்கின்றன....!



இரவின் கதிர்கள்
கடந்து செல்ல
எழுகின்ற வருண
ஜாலங்கள்...
உன் குறும்புகளாய்
என்னுள் ஜாலமிடுகின்றன....!

நரம்புகள் யாவும்
வீணைக் கம்பங்களாகி
இன்னிசை கீதமிசைக்கின்றன
உனது அன்பை எண்ணி...!

—எம்.ரி.எம்.யூனுஸ், காத்தான்குடி – 01.

## மறுமலர்ச்சி



செவ்வரத்தம்
பூச் சிவந்தாற்
போன்றவளே!.....

உன்
பார்வைப்
பசளையாலும்
ஓரக் கண்
ஒளியினாலும்
நட்பென்னும்
நீரினாலும்
தலைமுறிந்து
கிடந்த
தென்னை போன்ற
என் காதல்
மீண்டும் இமயத்தை
நோக்கி நோக்கி
நிமிர்கின்றது.

—அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர் – 01.

## மின்னல்

மின்னலைப் பார்க்காதே
கண்ணைப் பறித்துவிடும்
என்பார்கள்!
ஆனால் நீ என் இதயத்தையல்லவா
பறித்து விட்டாய்....!


—தி.அசோக், துன்னாலை.

## மன்னித்துக் கொள்!

நின் நினைவுகள்
என் இதயத் தடாகத்தில்
நீராடும் போது
விழிகளின் நீர் ததும்பி
வழிந்தோடுது
இமைக்
கட்டிடங்களையும்
உடைத்துக்கொண்டு

உன்னைக் குறை கூறி
என்ன பயன்?
உங்கள் குலமே
அப்படித்தான்.
பட்டினி கிடக்கும்
பட்சத்தில்
ஆடை கொண்டு
தருவீர்கள்.
ஆடை வேண்டும்
பட்சத்தில்
சோறு கொண்டு
தருவீர்கள்.

நம்பித்தான்
அடகு வைத்தேன் -
இதயத்தை
உன் மனமெனும்
வங்கியில்.
ஏமாற்றப்படுவேன்
என்று தெரிந்திருந்தால்
கொஞ்சம் கொஞ்சமாய்
மீட்டிருப்பேன்.
பரவாயில்லை
போகட்டும்
கடைசியாக ஒரு
வார்த்தை
மன்னித்துக் கொள்
உனை
காதலித்த
பாவத்திற்காய்



—இராமச்சந்திரன்
தவேந்திரன், ஹாலி -
எல.

## நிலவைத் தேடி



மனச் சிறையில்
உன்னை
ஊற்றினேன் - நீ
மது - ரசம் தானே
எரித்து விட்டாய்
என்
காதலையே.

படுத் தெறிக்கும்
பனித் துளிகளை
தொட்டுப் பார்க்கிறேன்
நீதான்
குளிர்கிறாய்

நீ
வந்த போது
சூரியன் மறைந்து
கொண்டான்
நம் காதலுக்கு
அவன் கூட
சாட்சியாய் இருக்க
கூடாதென்பதில்
அவ்வளவு அக்கறை.

இந்த ஜடம்
அலைகிறது
மறைவான ஒரு
இடத்தைத் தேடி
ஏனெனில் என்
இதயம் இன்னொருவனிடம்
இருப்பதை
என்னால் பார்க்க
முடியாததால்.

அன்பே!
நீ
விஷமாய் இருந்தாலும்
நான் அருந்துவேன்
என் காதல்
அப்படி.

வருவாயா?
இந்தப் பௌர்ணமி
நிலவைத் தேடி.

—ச.ஜெஷி, பத்தனை.

## என்னோடு வா!

நீ மணப்பெண் என
தெரிந்தும்
உன் நினைவுகளுக்குப்
பின்னால் நான்
நான் செய்வது தவறு
என்றாலும் அதை
உயர்வே
என்கிறது என் இதயம்...!
எனது தாயின் பின் அதிகம்
அன்பு காட்டியவள் நீதான்
தாய்க்குப்பின் தாரம்
என்பார்கள்
ஏன் அந்தத் தாரம்
நீயாகக் கூடாது.....
உன்னோடு பேசிக்
கொண்டிருந்தால்

எனக்கு நேரம்
போவது கூடத்
தெரியாது...
சொல் அன்பே!
உன் மனதில் நிஜமாக
- நான்
இல்லையா...?
மறுஜென்மத்தில்
எனக்கு
நம்பிக்கை இல்லை....
இந்த
ஜென்மத்திலேயே
என்னுடன் வா....

—பி.சசி, நானாட்டான்.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*"கதையோ, கவிதையோ, எல்லாமே செய்யப்படுவதுதான். யுகங்களாக நீளவிரியும் கணங்களோ, திரும்பிப் பார்ப்பதற்குள் கடந்து மறையும். பத்தும் இருபதும் ஆன வருடங்களோ, மனதில் சூல் கொள்ள வைத்த அனுபவமும் அதன் தாக்கமும் வார்த்தைகளைத் தேடித் தேடி எழுத்தில் வடிக்கும் போது செயற்கைத்தனம் எப்படியோ கலந்து ஏதோ ஓர் அளவில் அந்நியப்படுத்தான் போகிறது. அதையும் மீறி படைப்பு வெற்றி பெறுகிறது என்றால், ஒரே ஒரு காரணத்தைத்தான் சொல்லத் தோன்றுகிறது. அந்தக் கவிதைக்குள் வாசகர் தன்னுடைய கவிதையை எழுதிக் கொள்கிறார்" என்று குறிப்பிடுகிற இரா.முருகன், இலக்கிய உலகில் சிறுகதைக்காரராகவே அறியப்படுபவர். ஆனாலும், கவிதை, குறுநாவல், அறிவியல் கட்டுரைகளோடு சமீபத்தில் நாவல் ஒன்றும் எழுதியிருக்கிறார்.*

*அமெரிக்காவில் கணனி தொடர்பு நிறுவனமொன்றில் ஆலோசகராகப் பணியாற்றுகின்ற இரா.முருகனின் நான்கு கவிதைகள்.*

### 401

தலையலங் கானத்துச் செருவில் பொருத
நடந்த படையில் ஒருத்தன் வழியில்
வயிற்றுப் போக்கால் இறந்து பட்டான்
விழுப்புண் இன்றித் துஞ்சிய சங்கதி
வெண்புறாக் காலில் பறந்து போனது.

குப்பைக் கோழிகள் மேயும் முன்றிலில்
அரவம் கேட்டு வெளியே வந்தவள்
ஈன்று அளித்த கடமை முடித்தவள்.

யவனக் கப்பலில் முத்தும் மிளகும்
ஏற்றி ஏற்றிக் களைத்துத் திரும்பித்
தகப்பன் உள்ளே உறங்கிக் கிடந்தான்.

ஆறுதல் சொல்லிக் கூட்டம் கலைந்தது.
அழுது முடித்துப் பெற்றவள் ஓய்ந்தாள்.
பார்ப்பார் போயினர் அரிசி பெற்று.
பல்கிப் பெருகின குப்பைக் கோழிகள்.
அரபிக் கப்பலில் குதிரைகள் வந்ததால்
அடுத்த போருக்கு ஆள்சேர்த் தார்கள்.

### இருபது முடியும் நேரம்

வாரும் வாரும் வளைப்போம் பிடிப்போம்
கான்கிரீட்டும் குப்பையும் உயரும்
மாநகரங்களை,
புழுதி பறக்கும் சிற்றூர்களை, மற்றும்
ஐயனார் தோளோடு ஆண்டெனா விரியும்
கிராமங்களை.

வீட்டுக்கு சிலபேர் வீதிக்கு நூறுபேர்
வளைக்க வாகாய் எல்லா வயசிலும்...
பிரபஞ்ச அழகிகள் பிரதேச அழகிகள்
கட்டிப் போடக் கிளம்பி வருகிறார்.

வயல்களைக் கைக்கொள்வோம்.
இப்போதைய தேவை
உலகம் முழுக்க மென்று தீர்க்க
உருளைக் கிழங்கு வறுவல்.
கண்டம் தாண்டி கடல் தாண்டி
பறங்கி தேசமும் கறுப்பு பூமியும்
சிவப்பு வெளிறிய தரையும் எல்லாம்
கடந்து பரவுது பரவுது புரட்சி.

உப்பு எடுப்போம் தோழரே உப்பெடுப்போம்
பிளாஸ்டிக் பையில் அயோடின் சிரிப்பு.
"ராச கோபாலா....வேதாரண்யம் கடைக்குப்
போய்ச்சேரலேன்னு .'.போன்கால். கவனி."

ஆட்கள் தேவை. உலகச் சந்தையில்
தாது புஷ்டி லேகியம் விற்க.
எம்பிஏக்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

கொட்டாம்பட்டியில் நேற்றைய நிலவரம் -
நமது குளிர்பானம் மூவாயிரத்து ஏழு.
அவர்கள் சரக்கு ரெண்டாயிரத்துப் பதினெட்டு.
ஆரம்பப் பள்ளி விளையாட்டுப் போட்டியில்
நம் ஆதரவு அணி வெற்றி பெற்றது
மாற்றார் மண்ணைக் கவ்வினர்.

நிகழ்ச்சியின் இந்தப் பகுதியை வழங்கியது
யந்திரத் துடைப்பம் செய்யும் பன்னாட்டு
நிறுவனம்.
கப்பலோட்டிய தமிழன்
திரைப்படம் தொடரும்.

### நாள்தோறும்

பெருக்கத் துவங்கி மின்விசிறி நிறுத்த,
பகல் தூக்கம் கலைந்த கிழவி
கண்விழிக்க,
காபி தந்து, காய்நறுக்கி, காலையில்
கட்டடுக்கத்
தோசைக் கரைத்து, முகம் கழுவி,
வாசலில்
விளையாடும் குழந்தைகள் படிக்க
வைத்து,
சமையல் செய்து, பரிமாறி, தரை
துடைத்து,
பாத்திரம் ஒழித்துப் போட்டு,
பசங்களைப் படுக்கையில் விட்டு,
மேயப் பாக்கி இல்லாத பேப்பரோடு
காத்திருக்கும் கணவன் கண்காட்ட,
'வரேன்' என்று தலையசைத்து,
இருட்டில்
மாடியேறி, உலர்ந்த துணியும் விரிப்பில்
வடகமும் மொத்தமாகச் சுருட்டி வந்து,
வாசல் கதவடைத்து, கூடத்து
விளக்கணைத்து,
வாயில் வெற்றிலையோடு ஜன்னலண்டை
போனவள்
வானம் பார்த்தாள், 'பெய்' என்றாள்.

### சூழல்

என்மேல் எச்சமிட்டுப் போன
பறவைக்கு
நீலச் சிறகுகள்.

தொழிற்சாலைப் புகை சேராத
சுத்த வானிலும்
பறவைகள் இருந்தன.

கொடிக் கம்பத்தில்
அலகு தேய்க்கும் ஒன்று.
நாயர் கடையின் தகர அடைப்பைத்
தட்டிப் பார்க்கும் வேறொன்று.


பட்டுப்போன தொட்டிச் செடிகளில்,
சைக்கிள் ஸ்டாண்ட் விநாயகர் தோளில்,
கண்ணாடி உடைந்த ஆபீஸ் ஜன்னலில்,
எங்கும் பறவைகள்.

சங்கக் கட்டிடக் கூரையில் சிலவோ
தலைவர் போல நடைகள் பழகும்.


உச்சி வெய்யிலில் ஊர்வலம் வந்து
வெட்ட வெளியில் வியர்த்து நின்று
இன்னும் கொஞ்சம் உரைகள் கேட்டு
அடைத்த கதவைப் பார்த்துப் போகிறார்.

வெய்யில் தாழப் பறவைக் கூட்டமும்
விண்ணில் ஏறி மறைந்து போகும்.
இரைச்சலும் புகையும் இல்லா
இடங்களில்
பறவைகள் இனியும் திரும்பி வரும்.

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : த. ஜெயக்கிருஷ்ணா.
வயது : 25
முகவரி : விபுலானந்த வீதி, கல்லடி, உப்போடை, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், சோகப் பாடல், பத்திரிகை.



பெயர் : கே. சேது.
வயது : 20
முகவரி : 40/4, சோனகத் தெரு, களுத்துறை (சவுத்)
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : ஏ. சுதானந்தன்.
வயது : 19
முகவரி : டி8, பெரிய பரந்தன், பரந்தன்.
பொழுதுபோக்கு : பத்திரிகை, கவிதை.




பெயர் : எம்.எச்.என். டீன்.
வயது : 30
முகவரி : P.O.Box 7135, Doha, Qatar.
பொழுதுபோக்கு : கவிதை, வானொலி, பத்திரிகை, கராட்டி




## தற்கொலை முயற்சியில் அதிகம் ஈடுபடுவது யார்?



**பொ**துவாக ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்கள் அதிக அளவில் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதாக கருதப்பட்டு வருகிறது. பெண்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவது இதற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பொலிஸாரும், ரோஷினி என்ற தனியார் தொண்டு அமைப்பும் இணைந்து நடத்திய ஆய்வில் இதற்கு நேர் எதிரான முடிவு கிடைத்துள்ளது. அதாவது, அதிகாரப்பூர்வமாகப் பதிவாகும் 100 தற்கொலை




கேஸ்களில், 60 சதவீதம் ஆண்களாக இருப்பதாக அந்த ஆய்வு தெரிவித்துள்ளது. குடும்பத்துக்குள் நிலவும் சின்னச் சின்ன மனத்தாங்கல்களுக்கு கூட ஆண்கள் தற்கொலை முடிவுக்கு செல்வதாக ஆய்வு நடத்தியவர்கள் கூறியுள்ளனர்.

ஏதாவது ஒரு காரணத்துக்காகப் பெற்றோர் திட்டினாலும் சரி, அல்லது குழந்தையுடன் சின்னத் தகராறு ஏற்பட்டாலும் சரி, ஆண்கள் விரக்தி அடைகிறார்களாம். அது போல் விவாகரத்து, மனைவியுடன் சண்டை ஆகியவையும் தற்கொலை முடிவு எடுக்க காரணமாக அமைகின்றன. பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் சிக்கலான சூழ்நிலையைச் சமாளிக்க முடியாமல் திணறுகிறார்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வி , நிறுவன, நிர்வாகம் என பல தரப்பிலிருந்தும் அவர்கள் மீது நெருக்கடி அதிகரிப்பதால் விரக்தி அடைந்து வேண்டாத முடிவை எடுக்கிறார்கள். இதனால், மன நல சிகிச்சைக்கு வரும் மாணவர்கள் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

ஆணும் சரி, பெண்ணும் சரி, உச்சக்கட்ட விரக்தியில் தற்கொலை முடிவுக்கு தள்ளப்படுகிறார்கள் என்ற போதிலும், தற்கொலைக்கு முயற்சி செய்யும் பெண், ஒரு தடவைக்கு 2 முறை யோசிக்கிறாள். ஆனால் ஆண்கள் அப்படியில்லை. உடனே காரியத்தில் இறங்கி கதையை முடித்துக் கொண்டு விடுகிறார்கள். 70 சத வீத பெண்கள் தற்கொலைக்கு முயற்சி செய்கிறார்கள் என்றால், அதில் 20 சதவீத பேர் மட்டுமே உண்மையிலேயே தற்கொலை செய்கிறார்கள். மீதி 50 சதவீதம் பேர் கடைசி நேரத்தில் முடிவை மாற்றிக் கொண்டு விடுகிறார்கள். ஆனால், தற்கொலைக்கு முயற்சி செய்யும் 100 ஆண்களில் 70 பேர் வாழ்க்கையை முடித்துக் கொள்வதாக மேற்படி ஆய்வு தெரிவிக்கிறது.

கணவன் - மனைவிக்கு இடையே ஏற்படும் சாதாரண சண்டைகள், பாலியல் சந்தேகங்கள் ஆகியவற்றில் ஆண்கள் விரக்தி அடைவதாக தொண்டு நிறுவன இயக்குனர் சாந்தி தெரிவித்துள்ளார்.



## இனிய இல்லறத்துக்கு வித்திடும் கடின உழைப்பு

**க**டின உழைப்புக்கு ஈடு இணை இல்லை என்பார்கள். அப்படி கடினமாக உழைப்பவர்கள், சதா அலுவலகப் பணியே கதி என்று இருப்பவர்கள் பற்றி அமெரிக்க அதிக இன்பம் அடைகிறார்கள் என்று அந்த நிபுணர்கள் கூறுகின்றனர். பாலியல் ரீதியாக மன மகிழ்ச்சியுடன் உள்ள 100 தம்பதிகளை அவர்கள் ஆராய்ந்தனர். ஓராண்டாக அவர்களின் அந்தரங்க இரகசியத்தை அறிந்த போது தான் இந்த உண்மையை கண்டறிந்தனர். அதே சமயத்தில் ஏனோ தானோவென்று பணி புரிபவர்கள் தங்கள் இல்வாழ்க்கையில் அக்கறை கொண்டவர்களாக இருக்க மாட்டார்கள் என்கிறார் பேராசிரியர் ஜோனாதன் ஸ்வார்ட்ஸ்.



அதே சமயத்தில் மகிழ்ச்சிகரமாக உள்ளவர்கள் தான் அதிக நாள் வாழ்கிறார்கள் என்று அமெரிக்க மனஇயல் சங்கத்தின் வாராந்திர அறிக்கையில் மனஇயல் நிபுணர்கள் என்ன கூறுகிறார்கள் தெரியுமா? அவர்கள் தான் இல்லற வாழ்வில் இனிதே விளங்குகிறார்கள் என்கிறார்கள். அதாவது அப்படி கடின உழைப்பாளியாக விளங்குகிறவர்கள் வீடு வந்த உடன் ஓய்வாக இருக்கிறது என்று படுத்து தூங்கி விடுவார்கள் என்று நினைக்கலாம். அது தவறு. அவர்கள் தான், மன மகிழ்ச்சிக்காகவும் இல்லத்தரசிகளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் ஆர்வமாக உறவில் ஈடுபடுவார்கள். அதனால் தான் உணர்வு பூர்வமாக அவர்கள் ஒரு புதுமையான தகவலை வெளியிட்டு இருக்கிறார்கள். பணியிலும் அவர்கள் திருப்திகரமாக இருக்கிறார்கள். அவர்களைச் சுற்றி நண்பர்கள் கூட்டமும் மொய்க்கும் என்கிறார் மன இயல் நிபுணர் எட்வர்ட் இலினோய்ஸ்.



## நம்பர் 1 நோய் எதிர்ப்பு உணவு

**ஆ**ன்டிஆக்ஸிடென்டுகள் எனப்படும் நோய் எதிர்ப்பு பொருட்கள் ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியமானது. இருதய நோய்களில் தொடங்கி புற்றுநோய் வரை பல்வேறு ஆபத்தான நோய்களைத் தடுப்பதில் இவற்றிற்கு பெரும் பங்கு உண்டு.



நல்ல செல்களை தாக்கி அழித்து, புற்றுநோய் செல்களாக மாற்றும் சுதந்திரமான துகள்களை (Free Redicals) ஆன்டிஆக்ஸிடென்டுகள் எதிர்த்துப் போராடும்.




இத்தகைய முக்கிய நோய் எதிர்ப்புப் பொருளைத் தேடி அலைய வேண்டியதில்லை. இயற்கையாகவே கிடைக்கிறது. நாம் அன்றாடம் சாப்பிடக் கூடிய உணவுகள் குறிப்பாக பழங்கள் மற்றும் காய்கறிகள், பானங்கள் ஆகியவற்றில் இது காணப்படுகிறது. இருப்பினும் மற்றப் பொருட்களுடன் ஒப்பிடும் போது காபியில் அதிகமாக உள்ளதாக மருத்துவ வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். ஆன்டிஆக்ஸிடென்டுகளின் நம்பர் 1 மூலம் காபி தான் என்று அவர்கள் கூறியுள்ளனர். இது விஷயத்தில் காபிக்கு இணையாக, ஏன் நெருக்கமாக வரக் கூடிய அளவுக்கு எந்த உணவுப் பொருளும் இல்லை.

அமெரிக்கர்களைப் பொறுத்தமட்டில் மற்ற எந்த உணவுகளையும், பான்ங்களையும் காட்டிலும் காபி மூலமாக அதிக ஆன்டிஆக்ஸிடென்டுகளைப் பெற முடிவதாக அமெரிக்க வல்லுநர்கள் கூறியுள்ளனர்.


## உடற்பயிற்சி

**பெ**ண்கள் உடல் எடையைக் குறைக்க உடற்பயிற்சி செய்வது நல்ல யோசனை தான். ஆனால் தனியாக உடற்பயிற்சி மட்டும் செய்தால் அவ்வளவாக பலன் கிடைப்பதில்லை. பதிலாக புரோட்டீன் சத்து நிறைந்த உணவுகளையும் சாப்பிட்டு வந்தால் எடை நன்றாகக் குறையும் என்று இல்லீனாய்ஸ் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். புரோட்டீன் உணவுடன், உடற்பயிற்சி சேரும் போது, தசைகளில் எந்த இழப்பும் இருக்காது. அதேசமயம் கொழுப்பு கணிசமாக குறையும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விரிவான ஆராய்ச்சி ஒன்று நடந்துள்ளது. தினந்தோறும் தவறாமல் உடற்பயிற்சி செய்யும் பெண்களை 2 பிரிவாகப் பிரித்துக் கொண்டு பாதிப்பேர் புரோட்டீன் சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடும்படியும், மீதிப்பேர், கார்போஹைட்ரேட் சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிடும் படியும் கூறப்பட்டனர். (இந்த இரண்டு சத்துக்களிலுமே சம அளவு கலோரி இருக்கிறது) இந்நிலையில் ரெகுலராக உடற்பயிற்சி செய்த போது, கலோரி கட்டுப்பாடு காரணமாக 2 பிரிவு பெண்களுக்குமே உடல் எடை குறைந்தது. ஆனால் கார்போஹைட்ரேட் சத்து உணவு சாப்பிட்ட பெண்களுடன் ஒப்பிடும் போது புரோட்டீன் சத்துப் பெண்களுக்கு உடல் எடை இன்னும் அதிகமாகக் குறைந்திருந்தது தெரிய வந்தது. இன்னொரு விசேஷம், புரோட்டீன் சத்து உணவு, சிக்கலான அடிவயிற்று பருமனையும் வெகுவாகக் குறைத்து இருந்தது.



இதன் மூலம் உடற்பயிற்சியுடன் உயர் புரோட்டீன் சத்து நிறைந்த உணவுகளை சாப்பிட்டு வந்தால், குண்டான உடம்பு குறைந்து சிலிம் மாகி விடலாம் என்று மேற்படி நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (பெண்களைப் பொறுத்தவரை அடிவயிற்றில் கூடுதலான கொழுப்பு இருந்தால், கர்ப்பம் தரிப்பதற்கான வாய்ப்பு குறையும் என்று ஏற்கனவே ஆராய்ச்சியாளர்கள் கூறி இருப்பது குறிப்பிடத்தக்கது.)



உயர் புரோட்டீன் சத்து நிறைந்த உணவுகள் என்னென்ன?

- முட்டை வெள்ளைக்கரு
- கோழிக்கறி
- மீன்
- மாட்டுக்கறி ஆட்டிறைச்சி மற்றும் வான் கோழி இறைச்சி.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

### கடலைப் பொங்கல்

***தேவையான பொருட்கள்:***

| | |
|---|---|
| கடலைப் பருப்பு | - 1/4 லிட்டர் |
| நெய் | - 1/2 லிட்டர் |
| அரிசி | - 1 கிலோ |
| தேங்காய் | - 1 மூடி |
| சர்க்கரை | - 1/4 கிலோ |
| மு.பருப்பு | - 50 கிராம் |
| பச்சைக் கற்பூரம் | - சிறிதளவு. |

***செய்முறை:***

சுத்தம் செய்த கடலைப் பருப்பை நெய் விட்டு வறுத்து தண்ணீரில் வேக வைக்கவும், கடலைப் பருப்பு வெந்ததும், அரிசியைக் களைந்து போட வேண்டும். அரிசி முக்கால் அளவு வெந்ததும் தேங்காயைத் துருவி, சர்க்கரையுடன் கலந்து, கொட்டிக் கிளறவும். நன்றாக வெந்ததும் முந்திரிப் பருப்பையும், ஏலக்காய் தூளையும், நெய்யையும் சேர்த்து நன்றாகக் கிளறி இறக்கி விடவும். நன்றாக ஆறிய பின் உபயோகித்தால் வாய்க்கு ருசியாக இருக்கும்.

**ஜே**ன் சொல்வதைப் பற்றி யோசித்த வண்ணம் சிறிது நேரம் பேசாமல் இருந்தாள் பேஜ். வதந்தி, கிசுகிசு, பழியைத் தூக்கி யார் தலைமீதாவது போட வேண்டுமென்ற பரபரப்பு எதுவானால் என்ன, நடந்தது நடந்து விட்டது. இனிமேல் எதுவும் எதையும் மாற்றப் போவதில்லை.

ஆதாரமில்லாமல் யாரையும் குற்றம் சொல்லக் கூடாது என்று எண்ணியவளாக, "லாரா மீது தப்பு இருந்திருக்காது" என்றாள்.

"தப்போ, தப்பில்லையோ, கொஞ்ச நாளில் பேப்பரில் வந்து விடும். எல்லாப் பேப்பர்க்காரர்களும் லாரா விஷயத்தைத் துருவிக் கொண்டிருக்கிறார்கள்" என்றாள் ஜேன்.

"வதந்திகளை வைத்துக் கற்பனை

ஆஸ்பத்திரியை அடைந்தாள். நர்ஸ்கள் அவளைக் கண்டதும் புன்னகை செய்தார்கள். ஆனால் அந்தப் புன்னகையில் எச்சரிக்கை இருந்தது. முந்தின இரவு ஆபரேஷனின் போது ஆலிஸன் மரணத்தின் வாசல் வரை போய் விட்டுத் திரும்பினாள் என்பது எல்லா நர்ஸ்களுக்கும் தெரியும். ஒவ்வொரு தினமும், ஒவ்வொரு நிமிடமும் கடவுள் தரும் பரிசு; விலை மதிக்க முடியாத பரிசு.

"எப்படி இருக்கிறாள்?" என்று தயக்கத்துடன் கேட்டாள் பேஜ்.

"அப்படியேதான் இருக்கிறாள்" என்றாள் பிரான்ஸிஸ் என்ற நர்ஸ். அவளுக்குப் பேஜின் வயதுதான் இருக்கும். அறிவும், பரிவான இதயமும் கொண்டவள்.

**சென்ற வாரம்**

திகில் மீண்டவளாக மானிட்டர்களைப் பார்த்த பேஜ் சந்தோஷம் அடைந்தாள். தன் மகள் இனி பிழைத்து விடுவாள் என்று எண்ணியபடி தன் வீட்டுக்குச் சென்றாள். போனில் அவள் சிநேகிதி ஜேன் அழைத்து செனெட்டரின் மனைவியைப் பற்றி ஒரு தகவலைக் கூறுகிறாள்......

# ஒரு தாய் மகள்

47

செய்துகொள்ளக் கூடாது. ரொம்பக் காலத்துக்கு முன்பு லாராவுக்குக் குடிப் பழக்கம் இருந்தது என்பதற்காக இன்றைக்கு அவள் மீது குற்றம் சாட்டுவது நியாயமில்லை" என்று பேஜ் மீண்டும் சொல்லவே, ஜேனுக்கு ஏமாற்றமாகி விட்டது. இறந்து போன பையன் பிலிப்பின் மீது பழி விழாமல், லாரா மீது விழவேண்டும் என்பது அவளுடைய பரபரப்புக்குக் காரணம். "சரி, மேலும் ஏதாவது தகவல் கிடைத்தால் சொல்கிறேன்" என்றாள்.


இனிமையாகப் பேசுகிறவள். "டாக்டர் ஹேமர்மேன் ஒருமணி நேரத்துக்கு முன் வந்து பார்த்து விட்டுப் போனார். முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று திருப்தி தெரிவித்தார்" என்றாள்.

ஆலிஸனின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டு, கையைப் பிடித்துக் கொண்டாள் பேஜ். தலையில் பெரிய பெரிய கட்டுப் போட்டிருந்ததால் எதுவும் தெரிய

"இந்த வாரத்தில் இப்போதுதான் முதல் தடவையாக நீ சந்தோஷமாக இருப்பதைப் பார்க்கிறேன்" என்றான்.

"இருக்கலாம்" என்று புன்சிரிப்புடன் பதிலளித்தவள் க்ளோவைப் பற்றி விசாரித்தாள்.

"தேவலை. அவளைச் சாதாரண அறைக்கு அழைத்துப் போயிருக்கிறார்கள். இன்னும் ஒரு வாரத்தில் வீட்டுக்குப்



"தாங்க்ஸ் ஜேன்" என்று கூறிவிட்டு அன்றாட வேலைகளை அமைதியாகக் கவனிக்கலானாள் பேஜ். பெரும் ஆபத்திலிருந்து நேற்றிரவு ஆலிஸன் பிழைத்து விட்டாள் என்ற எண்ணம் அவள் மனத்துக்கு நிறைவு தந்திருந்தது. சில கடிதங்களுக்குப் பதில் எழுதினாள். சில பில்களுக்குப் பணம் அனுப்பினாள். வீட்டு வரவு செலவுகளைக் குறித்துக் கொண்டாள். இதுபோன்ற தினசரி வேலைகளில் ஈடுபட்டு ஒரு வாரமாகிறது. எனவே அந்தச் சில்லறை வேலைகளில் மனம் நிறைவு பெற்றது.

மறுநாள் காலை ஆண்டியைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு போய் விட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றாள். கடந்த இரண்டு நாளில், ஏதோ சாதித்த மாதிரி திருப்தி ஏற்பட்டிருந்தது அவளுக்கு. முக்கியமாக, குழந்தை ஆண்டியுடன் சிறிது நேரம் இருக்க முடிந்ததில் அவளுக்குச் சந்தோஷம். தாயின் அரவணைப்புக்காக ஏங்கியிருந்தான் அவன். எப்படியும் இன்னும் கொஞ்ச காலத்துக்கு வாழ்க்கையில் போராட வேண்டியிருக்கும். ஆகையால் பதற்றப்படாமல் உள்ளத்திலும் உடலிலும் வலு ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது முக்கியம் என்று எண்ணினாள்.

காலை ஒன்பது மணிக்கெல்லாம்

வில்லை. "மூளையில் வீக்கம் குறைந்திருக்கிறதா?" என்று நர்ஸைக் கேட்டாள்.

"கொஞ்சம் குறைந்திருக்கும்" என்றாள் அவள்.

*எழுதியது:* **டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

வழக்கம் போல ஆலிஸனுடன் மெல்லிய குரலில் பேசத் தொடங்கினாள் பேஜ். நேற்றைக்கு இன்று வெளிப்படையாக எந்த மாற்றமும் தென்படவில்லை ஆலிஸனிடம். இருந்தாலும் ஏனோ தெரியவில்லை பேஜின் மனத்தில் ஒரு நிம்மதி பரவியிருந்தது. நடப்பவற்றையெல்லாம் அமைதியாக ஏற்றுக்கொள்ளும் தைரியம் உண்டாகியிருந்தது. கணவன் பிராடிடம் ஏற்பட்டிருந்த கோபம் கூடச் சற்றுக் குறைந்திருந்தது. நேற்றைய இரவு ஆலிஸனின் உயிருக்காக நடந்த போராட்டம் அவள் உள்ளத்தில் ஆழப் பதிந்து விட்டது. அந்த அனுபவம் அவளை மாற்றியிருந்தது. அது அவளுக்கே தெரிந்தது.

காலை பத்து மணிக்குத் தாரென்ஸன் வந்தபோது, அவனும் அவளிடம் ஏற்பட்டிருந்த மாற்றத்தைக் கவனித்தான்.

போகலாம் என்றார்கள்" என்றான் தாரென்ஸன். அவன் குரலில் நிம்மதியும் உற்சாகமும் இருப்பதைப் பார்க்க அவளுக்கும் சந்தோஷமாக இருந்தது.

இருவருமாக க்ளோவின் அறைக்குப் போனார்கள்.

எவ்வளவு சிநேகிதிகளின் கூட்டம்! அறை நிறைய எத்தனை பூங்கொத்துக்கள்!

க்ளோ இன்னும் வலியில் முனகிக் கொண்டிருந்தாலும் சிநேகிதிகளைப் பார்த்ததில் முகம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது.

க்ளோவின் சிநேகிதிகளுக்கு வழி விட்டுத் தாரென்ஸனும் பேஜும் அறைக்கு வெளியே ஒதுங்கி நின்றார்கள். "கார் விபத்தில் உயிர் பிழைத்தானே, அந்தப் பையன் ஜேமி, அவனும் க்ளோவைப் பார்க்க வேண்டுமென்று என்னிடம் கேட்டான். இன்னும் இரண்டொரு நாள் போகட்டும் என்று சொல்லியிருக்கிறேன்" என்ற தாரென்ஸன் "ஆண்டி எப்படி இருக்கிறான்?" என்று கேட்டான்.


"பிராட் அதிகமாய் வீட்டுக்கு வருவதில்லை. ஆண்டிக்குக் கொஞ்சம் கொஞ்சம் நிலைமை புரிந்திருக்கிறது."

"பாவம்" என்றான் தாரென்ஸன்.

(தாய் தொடர்வாள்.....)

# ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும்

**6**



இருவேறு உலகமாய்ப் போய் விட்டது இருபத்தோராம் நூற்றாண்டு. ஒரு வானத்தின் கீழே சமாதானப் புறாக்களின் சிறகோசைகள் இன்னொரு வானத்தின் கீழே அணு ஆயுத ஏவுகணைகளின் இரைச்சல்கள்.

பூமிக்கடியில் புதையல்களைப் புதைத்துவிட்டுப் போனார்கள் முன்னோர்கள். கண்ணி வெடிகளைக் குவித்து வைக்கிறோம் நாம். உழுத கலப்பையின் கொழு இடறிச் செம்பொன் கிடைத்தது; சீதை கிடைத்தாள் என்ற கதைகள் பழங்கதைகள்.

உழப்போனவன் கொழு இடறி, கண்ணி வெடி சிதறி, குடலறுந்து செத்தான் என்ற கதையே புதுக்கதையாகிவிடும் போலிருக்கிறது.

இருபத்தோராம் நூற்றாண்டில் பூமிக்கு இரண்டு அபாயங்கள் இருக்கின்றன. ஒன்று: வானுக்கு மேலே ஓசோன் கூரை: இரண்டு பூமிக்குக் கீழே கண்ணி வெடிகள்.

போர் முடிந்தபிறகும், பூமிக்குள் நடக்கும் முடியாத போர் - கண்ணி வெடி.

ஒவ்வோர் இருபத்திரண்டாவது நிமிடத்திலும் இந்தப் பூமியில் ஒரு மனிதன் கண்ணி வெடிக்குப் பலியாகிக் கொண்டிருக்கிறான்.

பூமியில் புதைக்கப்பட்ட ஒரு கண்ணி வெடிக்கு ஐம்பது வருடம் ஆயுள் உண்டாம்.

பகைப் படைகளை நெருங்க விடாமல் பின்னடையச் செய்யப் புதைக்கப்பட்ட இந்தக் கண்ணிவெடிகளில் இதுவரைக்கும் போராளிகள் செத்தது இருபது விழுக்காடுதானாம். அப்பாவி பொது மக்கள் செத்தது எண்பது விழுக்காடாம்.

கண்ணி வெடிகளைப் புதைக்க ஆகும் செலவை விட, அகற்ற ஆகும் செலவு அதிகம்.

குடித்த விஷம் பத்து ரூபாய்; குடித்தவனைக் காப்பாற்ற ஆயிரம் ரூபாய் என்பதைப் போல மூன்று டாலர் வீதத்தில் செய்யப்படுகிற கண்ணிவெடிகளை இன்றைக்கு உலகமெங்கும் அகற்ற வேண்டுமென்றால் முப்பத்துமூன்று கோடி அமெரிக்க டாலர் தேவைப்படுமாம்.

இந்த பூமி விதைகளைப் புதைத்தால் விளைச்சல் தரும்; வெடிகளைப் புதைத்தால்?

இருக்கும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு முன்னால் இனிமேல் கண்ணி வெடிகள் புதைப்பதில்லை; தயாரிப்பதில்லை என்ற ஒரு சர்வதேச ஒப்பந்தம் உருவானால் தவிர, பூமியின் வயிற்றுக்குள் புற்றுநோய் வருவதைத் தவிர்க்க முடியாது.

ஜெனீவாவில் நிறுவப்பட்ட நாற்காலியின் உடைந்து தொங்கும் ஒற்றைக்கால், ஒரு மர நாற்காலியின் ஊனமல்ல; மனித குலத்தின் ஊனம்.

ஜெனீவாவிலிருந்து மீண்டும் லூசர்ன் வந்தோம். அதே நதியின் மறுகரையில் இப்போது வேறொரு விடுதி.

அந்த நதிக்கரையில் கழிந்த அதிகாலைதான் சுவிஸ்ஸில் நானிருந்த உன்னதப் பொழுது. தொட்டுவிடும் தூரத்தில் மலை. 'தேநீருக்கு வரலாமா' என்று விடுதியை உரசிக் கொண்டே விரையும் நதி; மலையின் நீலத்தை எடுத்து ஆடை கட்டிக் கொண்டோடும் அழகு நதி.

தனியனாய்... தன்னந்தனியனானாய் சில மணி நேரங்கள் செலவழித்தேன் அங்கே. சப்தங்களுக்கு மத்தியில் அடிக்கடி தொலைந்து போவதால் என்னை மௌனங்களில் கண்டெடுக்க ஆசைப்படுவேன். தனிமை எய்தும் போதெல்லாம் வைரமுத்து என்னும் சமூக மனிதனைத் தூங்க வைத்துவிட்டு, உள்ளே உறங்கும் மிக மெல்லிய மனிதனை எழுப்புவேன்.

தன்னை மறந்து தன் நாமம் கெட்டு அவனோடு தலைப்பட்டு அந்தரங்க மொழியில் உரையாடுவேன். அந்தப் பொழுதுகளைத் தான் வாழும் நிமிடங்கள் என்று கொண்டாடுவேன்! அப்படி ஒரு மோட்சப் பொழுது வாய்த்தது அங்கே.

என்ன ஏகாந்தம்! என்ன ஒரு நிம்மதி! மலையின் மௌனத்தில் என்ன ஒரு கம்பீரம்!

பார்க்கும் மறுகணமே மலைகள் எல்லாம் நமது மனதுக்குள் வந்துவிடுகின்றன என்று ஜே.கிருஷ்ணமூர்த்தி சொன்னது எப்படி ஒரு கனிந்த அனுபவம்!

இதுவே தவம்.

இதைவிட ஏது தியானம்?

உழைப்பாளிக்கு எதற்குத் தனியாக உடற்பயிற்சி?

படைப்பாளிக்கு எதற்குத் தனியாகத் தியானம்?

கரைதல் - கரைதலே தவம் - கரைதலின் தொடக்க நிலை மௌனம்; உச்சநிலை மரணம்!

லூசர்ன் நகரில் புதியதோர் அனுபவம் கிட்டியது. அதில் வெட்கப்பட ஒன்றுமில்லை - காரணம் - விரசமில்லை.

என்னைப் பாதசேவைக்கு அழைத்துச் சென்றார் நண்பர் சதீஷ்.

பாதங்களையும் நகங்களையும் பராமரிக்க சேவைக் கூடங்கள் உள்ளன. அங்கே. அது ஒரு கலைக்கூடம் போல் இருந்தது.

*(தொடரும்...)*

*நன்றி :- திருமதி வைரமுத்து*

# மிருகக் கருணை



**மி**ருக அஹிம்சைவாத (peta) அமைப்பின் உறுப்பினர்கள் இருவர் இணைந்து அண்மையில் பார்ப்பவர்களுக்கு அனுதாபம் ஏற்படும் வகையில் ஓர் எதிர்ப்பு நடவடிக்கையை நடாத்தினார்கள்.

அமெரிக்காவில் மியாமி நகரில் நடாத்தப்பட்டு வருகின்ற வருடாந்த கேளிக்கை நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு என விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களிடையே மிருகத் தோலால் தயார் செய்யப்பட்ட சப்பாத்துக்கள் முதன்மை இடத்தைப் பெறுகின்றன.

இதற்கான தங்களது எதிர்ப்பதைத் தெரிவித்துள்ள மேற்படி இருவரும் தங்களது முகத்தைக் காட்டி உடம்பை மறைக்கும், கொள்கையின் அடிப்படையில் நடந்துகொண்டுள்ளனர்.


இங்குள்ள ஒரு சந்தில் வளைந்து நின்று கொண்டு 'மிருகத் தோலற்ற உலகில் சுந்தரத் தன்மை' பற்றி ஓர் கரத்தை உயர்த்திக் கூறுகின்றனர். இந்த சுந்தரத் தன்மையை நன்றாகப் புரிந்து கொண்ட புகைப்படக்காரர் ஒருவர் தனது கைவரிசையையும் காட்டுகின்றார்.

# 5ஆவது உலக சேக்கிழார் மாநாடு

# 5th INTERNATIONAL CONFERENCE ON SEKKIZHAR

## சைவம் எழுச்சி பெற ஓர் மாநாடு
## சிவ பூமியாம் இலங்கைத் தீவில்
## சேக்கிழாருக்கு உலகப் பொது மாநாடு





மேன்மை கொள் சைவநீதியை உலகமெல்லாம் அறியச் செய்த சேக்கிழாருக்கு இலங்கையில் முதல் விழா, அதுவும் ஐந்தாவது உலகப் பொது விழாவாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9,10,11 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற இருக்கிறது. சைவத்திற்கு புத்துணர்ச்சி ஊட்டும் வகையில் இந்து கலாசார அமைச்சர் கௌரவ கே.என் டக்ளஸ் தேவானந்தாவினால் இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வருகை தரும் குருமகா சந்நிதானங்களின் ஆசிகளுடன் தொடக்கவிழா நிகழ்வுகள் 9ஆம் திகதி காலை 7.30 மணிக்கு சிவதீட்சை வழங்கலுடன் ஆரம்பமாகும். அன்று மாலை 4.00 மணிக்கு பழைய கதிரேசன் கோவிலில் இருந்து பஞ்சாட்சரமந்திர உச்சாடனத்துடன் பக்தி பூர்வமாக ஊர்வலம் ஆரம்பமாகி புதிய கதிரேசன் மண்டபத்தை வந்தடையும். சைவத்திற்கு உழைத்த பெரியவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து அமைச்சின் நூற்களும் தொடக்க விழாவில் வெளியிடப்படும்.

10ஆம் 11ஆம் திகதிகளில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பண்ணிசையுடன் காலை 8.00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். கருத்தரங்குகள் தற்காலத்தின் தேவைக்கேற்ற கருத்துக்களுடன் சைவ மதம் தொடர்பான சமய அறிவூட்டலை ஏற்படுத்தும் விதத்தில் அமைய உள்ளன. ஆதீனகர்த்தாக்களுடன், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் பக்திமான்கள் ஆகியோரின் சைவசமயக் கருத்துக்கள் பல்வேறுபட்ட கோணங்களில் வெளிக்கொண்டுவரப்படஇருக்கிறது. இரவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். இம்மாநாடானது ஆரவாரமில்லாமல் பக்தி பூர்வமான மத விழுமியத்துடன் இடம் பெற இருக்கிறது.

அனைவரும் வருக! வந்து பயன் பெறுக!

இன்பமே சூழ்ந்து! எல்லோரும் வாழ
இறையருள் வேண்டி ஒன்று கூடுவோம்.

வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட, உணவு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 011 2584377 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

**மகேஸ்வரி வேலாயுதம்**
*விழா ஏற்பாட்டாளர்*

### தொடக்க விழா 09.09.2005 (பழைய கதிரேசன் மண்டம்)

*ஊர்வலம் :*
பிற்பகல் 3.00 மணிக்கு பழைய கதிரேசன் கோயிலில் ஒன்றுகூடல். பழைய கதிரேசன் கோயிலிலிருந்து ஊர்வலம் 4.00 மணிக்கு புதிய கதிரேசன் மண்டபத்தை அடைதல்.

*மாலை 5.00 :* திருவிளக்கேற்றல்.
*மாலை 5.00 :* பண்ணிசை
*மாலை 5.15 :* வரவேற்புரை : செல்வி மகேஸ்வரி வேலாயுதம், மதியுரைஞர் இந்துசமய அலுவல்கள் அமைச்சு, விழா ஏற்பாட்டாளர்.
*மாலை 5.30 :* ஆசியுரை : தவத்திரு, சாந்தலிங்க இராமசாமி அடிகளார், பேரூர் ஆதீனம், இந்தியா.
*மாலை 5.40 :* சிறப்பு விருந்தினர் உரை : கௌரவஸ்ரீ - பாலகமலத் அவர்கள், கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, பிரதி அமைச்சர்.
*மாலை 5.50 :* சிறப்புரை திரு.க.மகானந்தன், அமைச்சின் செயலாளர்.
*மாலை 6.00 :* சிறப்பு விருந்தினர் உரை :
மேன்மை தங்கிய திருமதி.நிருபமா ராவ், இந்திய தூதுவர்.
*மாலை 6.10 :* பிரதம விருந்தினர் உரை : மாண்புமிகு மஹிந்த ராஜ பக்ஷ, பிரதமர், இலங்கை சோஷலிசக் குடியரசு.
*மாலை 6.20 :* தலைமையுரை : கௌரவ.கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சர்.
*மாலை 6.35 :* நூல் வெளியீடுகள் :
1. ஐந்தாவது உலக சேக்கிழார் மாநாட்டு மலர்.
2. இந்து சமய மறுமலர்ச்சியை நோக்கிய அமைச்சின் செயற்பாடுகள்.
3. இந்து கலைக்களஞ்சிய ஏழாம் தொகுதி.
4. இந்து கலைக்களஞ்சியம் முதலாம் தொகுதி (மறுப்பதிப்பு)
5. Hinduism for Hindus and Non Hindus by Prof.C.Sooriyakumaran.

*மாலை 6.45 :* சைவ சான்றோர் கௌரவிப்பு.
*மாலை 7.00 :* கலை நிகழ்ச்சிகள் :
நாட்டிய கலா மந்திர் வழங்கும் 'சிவ தரிசனம்'
நாட்டிய நெறியாள்கை: கலாசூரி வாசுகி ஜெயகதீஸ்வரன்.
*இரவு 8.00 :* நாடகம் :
வட ஆர்க்காடு ஸ்ரீ மகாலட்சுமி வித்தியாலய மாணவர்கள், இந்தியா.
*இரவு 9.00 :* நன்றியுரை : திருமதி சாந்தி நாவுக்கரசன், பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

### 10.9.2005 (இராமகிருஷ்ண மண்டபம்)

*காலை 8.00 :* பண்ணிசை.
*காலை 9.00 :* ஆசியுரை : தவத்திரு, சாந்தலிங்க இராமசாமி அடிகளார், பேரூர் ஆதீனம், கோயம்பத்தூர், இந்தியா.
*காலை 9.10 :* தலைமையுரை : பேராசிரியர் சி.பத்மநாதன்.
*காலை 9.30 :* பேராசிரியர் ச.புரிசை நடராசன், **'பெரியபுராணம் காட்டும் சிவ பூசை நெறி'** தலைவர், தமிழ் துறை, தூய நெஞ்சக் கல்லூரி - திருப்பத்தூர், இந்தியா.
*காலை 9.50 :* கலாநிதி, குமாரசுவாமி சோமசுந்தரம், **'சைவ நீதியும் சமூக நீதியும்'**
*காலை 10.10 :* வித்துவான். திருமதி.வசந்தா வைத்தியநாதன், **'காலைக்காலம்மையாரும் அவரது பிரபந்தங்களும்'**
*காலை 10.30 :* மகா வித்துவான். வே.சிவசுப்பிரமணியம், **'சிவம் பெருக்கும் சிந்தையர்'** சென்னை, இந்தியா.

*தேநீர் இடைவேளை :*
*காலை 11.00 :* ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிய ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்.
*காலை 11.00 :* தலைமையுரை : திரு கம்பவாருதி ஜெயராஜ்.
*காலை 11.30 :* திரு.செ.வே.சதாநந்தன், **'பெரியபுராணச் சிறப்பு'** தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை.
*காலை 11.50 :* கலாநிதி. இரகுபரன் **'பெரியபுராணம் கட்டமைப்பு'** தென்கிழக்கு பல்கலைக்கழகம்.
*பகல் 12.10 :* திரு.தமிழருவி.த.சிவகுமாரன், **'தொகையடியார்கள்'**
*பகல் 12.30 :* முனைவர், திரு.அரங்க இராமலிங்கம் - **'திருவைந்தெழுத்தின் உண்மை'** தலைவர், தமிழ்த்துறை, சென்னை பல்கலைக்ககைம்.

*மதிய இடைவேளை*
*பி.பகல் 2.40 :* தலைமையுரை : திருமதி.சாந்தி நாவுக்கரசன் பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
*பி.பகல் 3.00 :* திருமதி.ஹேமா சண்முக சர்மா, **'தனி மனிதர் ஆளுமை வளர்ச்சிக்கு நாயன்மார்களின் பங்களிப்பு'** ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாண கல்வி அமைச்சு.
*பி.பகல் 3.20 :* பேராசிரியர் திரு.த.கோ.சம்பந்தன், **'மேன்மைகொள் சைவ நீதி'** செய்யாறு, இந்தியா.
*பி.பகல் 3.40 :* திரு.ஆ.வீ.தட்சணாமூர்த்தி - **'பெரிய புராணம் சமுதாய நீதி'** தலைவர், சேக்கிழார் மன்றம், வேலூர், இந்தியா.
*பி.பகல் 4.00 :* திரு.சிவ மகாலிங்கம் - **'பெரியபுராணத்தில் மகளிர்'** உதவி பணிப்பாளர், இந்து சமய அலுவல்கள் திணைக்களம்.
*பி.பகல் 4.20 :* கலந்துரையாடல்.
*மாலை 6.30 :* நிருத்தன நடனப்பள்ளி வழங்கும் 'ஆனந்தக் கூத்து' நெறியாள்கை: திருமதி. சிவாநந்தி ஹரிதர்ஷன்.
*இரவு 7.30 :* நாடகம் : ஆர்க்காடு ஸ்ரீ மகாலட்சுமி வித்தியாலய மாணவர்கள்.
*இரவு 8.30 :* நன்றியுரை : எஸ்.தெய்வநாயகம் உதவி பணிப்பாளர், இந்து சமய அலுவல்கள் திணைக்களம்.

### 11.9.2005 (இராமகிருஷ்ண மண்டபம்)

*காலை 8.00 :* பண்ணிசை.
*காலை 9.00 :* ஆசியுரை : சீலத்திரு. சீர்வளர் திருவம்பல தேசிக ஞானபிரகாச பரமாச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம் மெய்கண்டார் பீடம், தொண்டைமண்டல ஆதீன 232ஆவது, குரு மகா சன்னிதானம்.
*காலை 9.10 :* தலைமையுரை : செல்வி.மகேஸ்வரி வேலாயுதம், மதியுரைஞர், இந்து சமய அலுவல்கள் அமைச்சு.
*காலை 9.30 :* பண்டிதர் சு.செல்லத்துரை, **'சேக்கிழார் நோக்கில் கோமாதா குலப்பெருமை'**
*காலை 9.50 :* திரு.முருகு இராமலிங்கம், **'பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் நெறி'**
*காலை 10.10 :* பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர், **'பெரியபுராணத்தில் பக்தி'** முன்னாள் பீடாதிபதி, கலைத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்.

*தேநீர் இடைவேளை:*
*காலை 10.30 :* ஆசியுரை : தவத்திரு.ஊரன் அடிகள், ஜீவகாருண்ய குடில், வடலூர், இந்தியா.
*காலை 11.00 :* தலைமையுரை : பேராசிரியர் அரங்க இராமலிங்கம், தமிழ்த்துறைத் தலைவர், சென்னை பல்கலைக் கழகம், இந்தியா.
*காலை 11.20 :* சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் திரு.செ.கந்தசத்தியதாசன் - **'வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே'**
*காலை 11.40 :* சைவப்புலவர், திரு.எஸ்.அனுசாந்தன் - திருவாவடுதுறை, ஆதீனப் பேச்சாளர், **'பெரியபுராணம் காட்டும் பூசை முறைகள்'**
*பகல் : 12.00 :* கலாநிதி திருமதி.நோ.கிருஷ்ணவேணி, **'சைவ சித்தாந்தத்தில் சீவன் முத்திக்கொள்கை'** நுண்கலைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
*பகல் 12.20 :* திரு.எம்.எஸ்.ஸ்ரீ தயாளன் **'சேக்கிழார் தொண்டர் சீர்பரவலும் நம்பியாண்டார் பெருமானும்'** உதவிபணிப்பாளர், (சமயக்கல்வி) இந்து சமய அலுவல்கள் திணைக்களம்.

*மதிய இடைவேளை :*
பி.பகல் 2.40 : தலைமையுரை: பேராசிரியர் திரு.ச.அகத்தியலிங்கம், முன்னாள் துணை வேந்தர், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா.
*பி.பகல் 3.00 :* கலாநிதி க.கணேசலிங்கம் - **'ஈழத்துச் சைவப் பாரம்பரியம்'**
*பி.பகல் 3.20 :* திருமதி.லலிதா நடராஜன்.B.A., Dip..சேக்கிழார் மாண்பு.
*பி.பகல் 3.40 :* திருத்தொண்டர் மாமணி திரு.வயி - நாராயணசாமி, **'சேக்கிழார் காட்டும் சைவ சித்தாந்தம்'** வழக்கறிஞர், புதுச்சேரி, இந்தியா.
*பி.பகல் 4.00 :* சைவப்புலவர் திரு.மு.திருஞானசம்பந்தர், **'சேக்கிழார் உணர்த்தும் உண்மைகள்'**
*பி.பகல் 4.20 :* கலந்துரையாடல்.
*மாலை 500 :* நன்றியுரை : திரு.ம.சண்முகநாதன் - தகவல் அலுவலகர், இந்து சமய கலாசார, அலுவல்கள் திணைக்களம்.

## இந்து சமய அலுவல்கள் அமைச்சு
## Ministry of Hindu Religious Affairs

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## உட்கட்சி முரண்பாடே விக்டரின் மரணத்துக்குக் காரணம்

அனுராதபுரத் தாக்குதல் நடைபெற்ற 1985ஆம் ஆண்டு காலப் பகுதியில் வடபகுதியில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் சகல தமிழீழ இயக்கங்களும் ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்றிருந்தன. அனுராதபுரத் தாக்குதலுக்கு தலைமை கொடுத்த விக்டருக்கு, புலி இயக்கத்தவர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் பெருத்த செல்வாக்கிருந்தது. வன்னியில் தற்போது ஜெயந்தன் படையணி போன்ற கிழக்கு மாகாணப் போராளிகளை உள்ளடக்கிய சக்திகள் செல்வாக்குப் பெற்றிருப்பதைப் போன்று 1990ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு முன்னர் புலிகளின் மன்னார் பகுதிப் போராளிகளே யாழ்ப்பாணத்தில் பெருமளவு காணப் பட்டனர். விக்டரின் போர்த்திறனும் செல்வாக்கும், யாழ்ப் பாணத்தில் பெருமளவில் மன்னார் போராளிகள் நிலை கொண்டிருந்தமையும் யாழ் மாவட்டப் புலித் தளபதியாகவிருந்த கிட்டுவுக்குப் பெரும் தலையிடியாக அமைந்திருந்தது. விக்டரின் செல்வாக்குத் துரிதமாக வளர்ச்சி பெற்றிருப்பதை விரும்பாததாலேயே கட்சி அவரை 'றோ' உளவாளியெனக் குற்றஞ்சாட்டித் தனது கையாட்களைக் கொண்டு கொலை செய்ததென்று அப்போது புலி இயக்கத்துக்குள் கசமுசாக்கள் எழுந்தன.

### 128 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

பிரபாகரனுக்குத் தெரியாமல் அனுராதபுரத் தாக்குதல் நடந்திருக்க முடியாதென்று வேறு சிலர் வாதிடுகின்றனர். இதில் உண்மையும் இருக்கலாம். விக்டர், சிறந்த போர்த்திறன் கொண்டவரென்று பிரபாகரன் கருதியதாலும் மன்னாரிலிருந்தே இலகுவாகவும் பாதுகாப்பாகவும் அனுராதபுரத்துக்குச் சென்று தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிவர முடியுமென்பதாலுமே பிரபாகரன் தாக்குதல் பொறுப்பை விக்டரிடம் கையளித்தாரென்றும் கூறப்படுகிறது. பிரபாகரனுக்குத் தெரியாமல் எங்கும் பாரிய தாக்குதல் திட்டங்களை மேற்கொள்ள முடியாதென்பதும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கது. எனவே கிட்டு குற்றஞ்சாட்டியதுபோல் விக்டர் 'றோ'வின் கையாளா? இல்லையா? என்பது சந்தேகத்துக்குரியதே. இந்த வகையில் பார்த்தால் எவரைத் தட்டி விட்டு எவர் முக்கியத்துவம் பெற வேண்டுமென்ற போராட்டத்தில் விக்டர் பலிக்கடாவாக்கப்பட்டிருக்கலாமென்ற கூற்றையும் மறுக்க முடியாது.

அனுராதபுரத் தாக்குதலை 'றோ' தான் திட்டமிட்டதா? இல்லையா? என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆனாலும் அக் காலகட்டத்தில் சக்தி வாய்ந்ததாகவும் செல்வாக்குமிக்கதாகவும் திகழ்ந்த புளொட் இயக்கத்திடமே அனுராதபுரத் தாக்குதல் திட்டத்தை 'றோ' கையளித்திருப்பதாக ஏனைய இயக்கங்களைச் சேர்ந்த சிலர் கூறினார்கள். இடதுசாரிச் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த புளொட் இயக்கம் அப்பாவிச் சிங்கள மக்களைத் தாக்க விரும்பாததால் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்ததாகவும் அதன் பின்னரே புலிகள் இக் கைங்கரியத்தைக் கையேற்றதாகவும் கூறப் படுகிறது. 'றோ' மீது பிரபாகரன் கொண்டிருந்த அதிருப்திக்கும் ஆத்திரத்துக்கும் காரணங்கள் வேறு. இந்தியப் படையினரின் பயிற்சிக்காகத் தமிழீழ இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர்களை இந்தியாவுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு ஆரம்பத்தில் ரெலோ இயக்கத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனைக் கையேற்ற ரெலோ இயக்கத் தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் புலிகளை

**(அரசியல் தொடர்)**

ஓரங்கட்டினார். இதனால் 'றோ'வும் புலிகளை கணக் கெடுக்கவில்லை. இந்தக் கொடுப்பு என்றுமே பிரபாகரனிடமிருந்தது. எனவே பிரபாகரனுக்குத் தெரியாமலே விக்டரின் கொலைக்கு கிட்டுவே உத்தரவிட்டாரென்று அப்போது புலி வட்டாரங்களில் கதையடிபட்டது.

மன்னார் நகரத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர்கள் அப்பாலுள்ள பனங்கட்டிக்கொட்டில் என்ற இடமே விக்டர் பிறந்து, வளர்ந்த இடமாகும். கடற்றொழிலாளர்கள் பெருமளவு வாழும் பகுதியே இதுவாகும். 1986ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் திகதி இராணுவம் அடம்பன் பிரதேசத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியபோதே விக்டரின் தலைமையில் புலிகள் பதில் தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதலில் கொல்லப்பட்ட பதினொரு படை வீரர்களின் சடலங்களும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் யாழ்ப்பாணம், நல்லூரில் மறுநாள் பிற்பகல் இரண்டரை மணிவரை காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. உயிருடன் பிடிக்கப்பட்ட இரு இராணுவ வீரர்களும் சடலங்களுக்கு அருகில் கதிரைகளில் அமர்த்தப்பட்டிருந்தனர். பார்வையிட வந்த புலிகள் சிலர் உயிருடனிருந்த இராணுவ வீரர்கள் மீது துப்பியமையும் குறிப்பிடத்தக்கது. இச் செயலை யாழ்ப்பாணப் புத்திஜீவிகள் கடுமையாகக் கண்டித்தனர். யுத்தக் கைதிகள் தொடர்பான ஜெனீவா ஒப்பந்தத்தின்படி கைதிகள் மரியாதையாக நடத்தப்படவேண்டும். அவர்களைத் துன்புறுத்தக்கூடாது. அவர்களுக்கும் மனித உரிமைகள் உண்டென்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். இந்த நிலையில் சடலங்களைக் காட்சிக்கு வைத்ததோடு உயிருடன் பிடிபட்ட சிப்பாய்களைக் காட்சிக்கு வைத்தமை கொடுஞ்செயலாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மறுநாள் 14ஆம் திகதி விக்டரின் பூதவுடல் யாழ்ப்பாணம், சுண்டிக்குளிக்கு அண்மையிலுள்ள கொஞ்சேஞ்சிமாதா தேவாலயத்துக்கு எடுத்துவரப்பட்டது. அங்கு இறுதி ஆராதனைகளை யாழ். ஆயர்




தோமஸ் சௌந்தரநாயகம் நடத்தினார். பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். மீண்டும் சடலம் மன்னாருக்குக் கொண்டுவரப்பட்டு, மக்கள் அஞ்சலிக்கென வைக்கப்பட்ட பின்னர் ஆண்டான்குளம் மயானத்தில் விக்டரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப் பட்டது. விக்டருக்கு மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் நினைவு ஸ்தூபிகளும் புலிகளால் நிறுவப்பட்டன.

விக்டர் மீது படையினர் எந்தளவுக்கு ஆத்திரம் கொண்டிருந்தனர் என்பதற்கு ஒரு சம்பவத்தை உதாரணமாகக் கூறலாம். விக்டர் இறந்து சில மாதங்களின் பின்னர் அடம்பன் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய இராணுவத்தினர் விக்டரின் சடலம் அடக்கம் செய்யப்பட்டிருந்த புதைகுழியைத் தோண்டிச் சிதைத்தனர். விக்டரின் சடலத்திலிருந்த தலையை வெட்டியெடுத்து தொண்டு சென்றனர். சடலம் மோசமாகச் சிதைந்திருந்தது.

அனுராதபுரத் தாக்குதல் இலங்கையில் மட்டுமல்ல, உலகெங்கும் பெரும் கோப அலையைக் கிளப்பி விட்டது. இந்திய பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும் இத் தாக்குதல் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்தார் தாக்குதலுக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் அதாவது ஏப்ரல் பத்தாம் திகதி உருவாக்கப்பட்ட ஈழ தேசிய விடுதலை முன்னனியும் கண்டனம் தெரிவித்தது. இந்த முன்னணியில் அங்கம் வகித்த பத்மநாபா, பாலகுமார், ஸ்ரீ சபாரத்தினம் ஆகியோர் தனித்தனியாகவும் கண்டனம் தெரிவித்தனர். பிரபாகரன் மட்டும் புலிகள் இயக்கம் இத் தாக்குதலை நடத்தவில்லையென்று மறுப்புத் தெரிவித்திருந்தார்.

(தொடர்ந்து வடியும்....)

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**




சேக்குட்டி நாயர் ஏற்கனவே அங்கு ஒருதடவை மலைவாசி ஒருவரது துணையுடன் போயிருக்கிறார். அங்கு அவர் பார்த்த காட்சி மிகவும் பயங்கரமானது.

நாகத்தான் பாறையை ஒட்டிய பள்ளத்தாக்கில் மண்டையோடுகளும், மனித எலும்புகளும் ஏராளமாகச் சிதறிக் கிடந்தன. சுற்றிலும் துர்வாடை; ஒரு அமானுஷ்யமான பயங்கரம்! எப்படிப்பட்டவர்களும் பயந்து நடுங்கக் கூடிய அந்தக் காட்சி அவ்வப்போது சேக்குட்டி நாயரின் மனதில் எட்டிப் பார்ப்பதுண்டு.

ஜயந்தனால் செய்யமுடியாத காரியங்களே இல்லையென்றுதான் அந்த மலைவாசி சொல்லியிருந்தார்.

அந்த மலைவாசி குடியிருக்கும் இடம்கூட சேக்குட்டி நாயருக்குத் தெரியும்.

"என்ன சேக்குட்டி... எதைப்பற்றி யோசிக்கிறீங்க?" சந்துநாயர் இடைமறித்துக் கேட்டார்.

"இல்லை.... கிருஷ்ணகுறுப்பை விட கெட்டிக்காரரா யாராவது மந்திரவாதிங்க இருக்காங்களான்னு யோசிச்சுப் பார்த்தேன். ஒருத்தர் இருக்கார். பேரு ஜயந்தன். ஒரேயொரு தடவை அவரைப் பார்த்தாப் போதும். நம்ம எதிரிங்க தொலைஞ்சு போயிடுவாங்க. நேராப் போய் அவரைப் பார்த்துட்டு வந்துடறேன்" என்றார் சேக்குட்டி.

"கேசவா! சேக்குட்டிக்கு வழிச் செலவுக்கு ஏதாவது பணம் கொடுத்து அனுப்பு" என்று மகனைப் பார்த்துச் சொன்னார் சந்துநாயர்.

கேசவன் கொண்டு வந்து தந்த பணத்தை வாங்கிக் கொண்டு சேக்குட்டி அங்கிருந்து புறப்பட்டார்.

ஏறத்தாழ அதே நேரம் குமாரும், பிரபாகரனும் கிருஷ்ண குறுப்பிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"என்னோட லட்சியம் சந்துநாயர்கிட்டேயிருந்து அந்தச் சொத்துக்களை


**எழுதுவது சிவன்**

கைப்பற்றணுங்கிறது இல்லை; தவறு செஞ்சவங்க தண்டனை அனுபவிக்கணும். இந்த விஷயத்துக்காக நாம கோர்ட்டுக்குப் போகமுடியாது. குற்றச்சாட்டை நிரூபிக்கிறதுக்கு எந்தவிதமான ஆதாரமும் நம்மகிட்ட இல்லை. அதனால...." என்றார் குமார்.

"நீங்க சொல்ல வர்றது புரியுது. மந்திரவாதத்தால முயற்சி பண்ணலாம். சரி, ஒருவேளை சொத்துக்களை மீட்கமுடிஞ்சா யார்கிட்ட குடுக்கிறது?" என்றார் குறுப்பு.

"நான்தான் சொல்லிட்டேனே! அந்தச் சொத்து எனக்கு ஒரு பொருட்டே கிடையாது. தவறு செஞ்சவங்களுக்குத் தண்டனை குடுக்கணும். அதுக்கு ஏற்பாடு செய்வோம். அதன் மூலம் வர்ற சொத்துக்களை பிரபாகரனுக்கே கூட கொடுத்திடலாம்" குமார் தெளிவாகச் சொன்னார்.

"அதெல்லாம் எனக்கு வேண்டவே வேண்டாம். நீங்க இப்படியெல்லாம் எதையாவது



செய்ய ஆரம்பிச்சா, மாமாவோட கோபம் என்மேலேயும், அம்மா மேலேயும் திரும்பும். லீவு முடிஞ்சு நான் போயிட்டா, அம்மா தனியா வேற இருக்கணும்; அவங்க ரொம்பவும் பாதிக்கப்படுவாங்க." பிரபாகரன் கவலைப்பட்டான்.

"முதல்ல இதுக்கு பதில் சொல்லுங்க! நான் என்ன பண்ணணும்னு நினைக்கிறீங்க?" குறுப்பு கேட்டார்.

செறுவள்ளி மனைக்குள் அமர்ந்தபடிதான் அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். நேரம், இரவு பத்து மணிக்கு மேலாகியிருந்தது.

அன்று அமாவாசை. எங்கும் இருள் பரவியிருந்தது. வராந்தாவில் ஏற்றி வைத்திருந்த வெண்கல விளக்கின் வெளிச்சம் ஏறத்தாழ தெருவாசல்படி வரை பரவியிருந்தது.

வருடக் கணக்கில் ஆள்வாசம் இல்லாமலிருந்ததால் அந்த இல்லத்தின் முற்றப் பகுதியில் நிறையப் புல் மண்டி வளர்ந்திருந்தது.

அந்தக் கும்மிருட்டு ராத்திரியில் சட்டென்று தொலைவிலிருந்து ஏதோ ஒன்று பாய்ந்து வரும் சத்தத்தை அவர்கள் கேட்டனர். தெரு வாசலுக்கு வெளியேயிருந்துதான் அந்த சத்தம் வந்தது.

நெருங்கி வந்த சத்தம் துளசிமாடத்தை நெருங்கியதும் அப்படியே நின்றுவிட்டது.

ஏதோ ஒன்று துளசி மாடத்தை ஒட்டிய தரைப்பகுதியில் விழுந்த சத்தம் கேட்டது.

கிருஷ்ண குறுப்பு அந்த இடத்தை நோக்கி விரைந்தார்.

மாடத்தை ஒட்டியிருந்த தரைப்பகுதியில், சன்னமான வெளிச்சத்தில் இது தெரிந்தது.

வளைந்து தலையை உயர்த்தியவாறு நீல நிறத்தில் இருந்தது அது.

"அந்த விளக்கை இப்படி எடுத்துட்டு வாங்க" கிருஷ்ண குறுப்பு படபடப்போடு கத்தினார்.

பிரபாகரன் வெண்கல விளக்கைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தார். பின்னால் குமாரும் வந்தார்.

விளக்கு வெளிச்சத்தில் அவர்கள் பார்த்தபோது பாம்பு ஒன்று கருகிச் சாம்பலாகிக் கிடந்தது. அதைப் பார்த்ததும் மூவருடைய நெற்றிகளும் யோசனையில் சுருங்கின. குறுப்பின் முகத்தில் வியர்வை அரும்ப ஆரம்பித்தது.

"இதை யாரோ ஏவிவிட்டிருக்காங்க. சந்துநாயர் ஏதோ எதிர் நடவடிக்கை எடுத்திருக்கிற மாதிரி எனக்குப் படுது" என்றார் கிருஷ்ண குறுப்பு.

"அப்படின்னா.....?" -குமார் புரியாமல் கேட்டார்.

"நாம இதுக்குப் பதிலடி கொடுத்தாகணும்!" கிருஷ்ண குறுப்பு யோசனையில் ஆழ்ந்தார்.

"நீங்க சொல்றது எனக்கு விளங்கலை" குமார் தெரிந்து கொள்ளும் ஆவலுடன் கேட்டார்.

(வாசனை வீசும்....)

# கத்தரி வேண்டாம்..... ஊசி கொடு!

"மதத்தின் பெயரால் நடக்கும் கலவரங்கள், சண்டைகள், போராட்டங்களை.... எல்லாம் பார்க்கும்போது 'மதம் என்ற ஒன்று தேவைதானா?' "

- இப்படி பல பேர் என்னிடம் கவலையோடு சந்தேகம் எழுப்புவது உண்டு!

"விஞ்ஞானம் வளர்வதால்தான் நியூக்கிளியர் பாம், ஹேலஜின் பாம், பயாலாஜிகல் பாம் என்று நாசகார ஆயுதங்கள் வருகின்றன!"

"டாக்டர்கள் பெருத்துப் போனதால்தான் நோய்களும் அதிகமாகிவிட்டன."

- இந்த வாதங்களிலெல்லாம் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் மதம் பற்றி எழுப்பப்படும் வாதமும் உண்மையே!

வீடு இருட்டாக இருக்கிறது. எரிச்சலுடன் கதவைத் திறந்து கொண்டு வேகமாக உள்ளே போனால், நாற்காலியும் மேஜையும் காலை இடறிவிடுகின்றன! உடனே நிதானம் இழந்து கோபப்பட்டு மேஜை, நாற்காலிகளையெல்லாம் எடுத்து வெளியே எறிவதால் பிரயோசனம் இல்லை! நாம் இடறி விழுந்ததற்குக் காரணம் வெளிச்சமின்மை! ஆகையால் வெளியே போக வேண்டியது மேஜையோ நாற்காலியோ இல்லை! விளக்கை ஏற்றினால் இருட்டு போய், பிரச்சினைகளும் தன்னால் காணாமல் போய்விடும்!

கலவரத்தையும் குழப்பத்தையும் உண்டுபண்ணப் பிறந்தது அல்ல மதம்! அமைதியை கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டது அது! மதம், மனிதர்களைப் பிரிப்பதற்காக உண்டாக்கப்படவில்லை! மனிதர்களை ஒன்றுபடுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டதுதான் அது!

இஸ்லாமிய மதத்தின் ஒரு பிரிவான சூ.:பி மதத்தின் இலக்கியத்தில் இந்தக் கதை இருக்கிறது -

அவர் ஒரு பெரிய துறவி! அவரை அரசர் சந்தித்தார்! அந்தத் துறவி அடிப்படையில் துணிகள் தைத்துக் கொடுக்கும் தொழில் செய்பவர்! அதனால் வைரங்கள் பதித்து அழகுபடுத்தப்பட்ட தங்க கத்தரிக்கோல் ஒன்றை துறவிக்கு அரசர் பரிசாகக் கொடுக்க.... துறவி அதை வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார்.

துறவிக்கு எந்த உதவியும் செய்ய முடியவில்லையே என்ற கவலையில் அரசர் அவரிடம் கேட்டார், "உங்களுக்கு நான் என்ன கொடுத்தால் அது தங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்?"

துறவி சொன்னார் - "ஒரே ஒரு ஊசி இருந்தால் கொடுத்துவிட்டுப் போ!"

உடனடியாக ஒரு ஊசியை வரவழைத்துக் கொடுத்துவிட்டு அரசர் பணிவாக நிற்க..... துறவியே விளக்கம் கொடுத்தார்: "நான் கத்தரிக்கோலை வேண்டாம் என்று சொன்னதற்குக் காரணம்..... அது வெட்டும் - பிரிக்கும். ஆனால், ஊசியோ தைக்கும். அதாவது இணைக்கும்! இன்று மனித குலத்துக்குத் தேவை கத்தரிக்கோல் அல்ல!"

இன்றைய காலகட்டத்துக்கும் அந்த சூ.:பி துறவி சொன்னது அப்படியே பொருந்தும். மத குருக்கள் யாரும் மனிதர்களைப் பிரிக்கும் விதத்தில் பேச மாட்டார்கள். அப்படிப் பேசுபவர்கள் உண்மையான மத குருக்களாக இருக்கவும் முடியாது!


இந்த இடத்தில் மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் நடந்த ஓர் உண்மைச் சம்பவம் பற்றி அவசியம் சொல்ல வேண்டும். வங்காளத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் வெட்டி, வீதிகளில் ரத்த ஆறு ஓடவிட்டுக் கொண்டிருந்த சமயம்.... நடுத்தர வயது கொண்ட ஒருவர் மகாத்மா காந்தியின் காலிலே விழுந்து, "நான் பாவி! நான் கொலை செய்துவிட்டேன்! நிச்சயம் நான் நரகத்துக்குத்தான் போவேன்!" என்று கதறி அழ ஆரம்பித்தார். விஷயம் இதுதான் -

இந்த நடுத்தர வயதுக்காரரின் மகனை மதக் கலவரத்தில் யாரோ வெட்டிக் கொன்றுவிட்டார்கள்! அதனால் பழிக்குப் பழி என்ற ஆத்திரத்தில் அறிவிழந்து, நிதானம் தடுமாறி, அரிவாளோடு வெளியே ஓடிய இவர், எதிர்ப்பட்ட முஸ்லிம் இளைஞன் ஒருவனை வெட்டித் தள்ளினார். முஸ்லிம் இளைஞன் கீழே விழுந்து துடிதுடித்து உயிர்விட்ட பிறகுதான், தான் செய்தது எத்தனை பெரிய பாவகாரியம் என்று அவருக்கு உறைத்தது. உடனே ஓடி வந்து தன் காலடியில் விழுந்து கதறி அழுதவரை எழுப்பி காந்திஜி சொன்னார்-

"இப்பவும் எதுவும் கெட்டுவிடவில்லை! நீ சொர்க்கத்துக்குப் போக இன்னமும் கூட உனக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது!"

"என்ன! என்னால் சொர்க்கத்துக்குப் போக முடியுமா?" என்று கண்களில் குழப்பம் பொங்கக் கேட்டவரைப் பார்த்து காந்திஜி பேசினார் -

"இந்த மதக் கலவரத்தில் தாய், தந்தையரை இழந்து அநாதையாகிவிட்ட ஒரு முஸ்லிம் குழந்தையைத் தத்து எடுத்து வளர்த்துப் படிக்க வைத்துப் பெரிய ஆளாக மாற்று.... இதுதான் உனக்குப் பரிகாரம். பாவ விமோசனம்.... சொர்க்கத்துக்கான வழி எல்லாம்!"



இதிலிருந்து நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். மாற்று மதத்தினரில் எத்தனை பேரை வெட்டிச் சாய்த்தாலும் அவர்களின் மதத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்ப்பதால் நாம் செய்த வன்முறைகளுக்குப் பரிகாரம் கண்டுவிடலாம், பாவ விமோசனம் பெற்றுவிடலாம் என்று காந்திஜி குறிப்பிட்டதாக நாம் அர்த்தம் எடுத்துக் கொள்ளக்கூடாது. வன்முறைக்கு என்றும் பரிகாரமே இல்லை.

ஆனால், தான் செய்த தவறுக்கு உண்மையாக வருந்தி, ஒருவன் மனம் திருந்துவானேயானால் அவன் எல்லா மதத்தினரையும் உள்ளன்போடு நேசிப்பான். நேசிக்க வேண்டும்.

எந்த மதமாக இருந்தாலும் அவை 'அயலானுக்கும் அன்பு காட்டு' என்று தான் போதிக்கிறது. இந்த ஒற்றை வாக்கியம்தான் கீதை, குரான், பைபிள்.... என்று எல்லா மதங்களின் வேதத்திலும் வெவ்வேறு வார்த்தைகளில் இருக்கிறது?

'எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, சக மனிதர்களை நான் நேசிப்பேன்! அவர்களிடத்தில் அன்பு காட்டுவேன்!' - இப்படி ஒரு சபதத்தை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டால் போதும்.... மதத்தின் பெயரால் மட்டும் இல்லை... ஜாதி, இனம் என்று எந்தக் காரணம் கொண்டும் பிரச்சினைகள் தலைதூக்காது!

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 137

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 5 | 6 |
| 7 | ■ | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | ■ |
| 19 | 20 | ■ | 22 | ■ | 24 |
| ■ | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | ■ | 35 | 36 |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 135க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

நா. லுபோஜிதா, 200, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு - 01, கல்முனை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. கமால்தீன் அல் - ஆஸாத், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் - 03.
2. மீரா முகைதீன் - ஹாலீத், 21, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் - 03ஏ.
3. செல்வன் க.நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில.
4. அனீஸா அல் ஆஸாத், புன்னைக் குடா வீதி, ஏறாவூர் - 03.
5. நிரஞ்சலா, ஸ்ரீசித்தார்த்த வீதி, கிருலப்பனை.
6. திவ்யா, புதிய தெரு உப்புக் குளம், மன்னார்.
7. மதியழகன், பேராதனைப் பல்கலைக்கழகம், கண்டி.
8. வீரசாமி, சங்கபோ மாவத்தை, பசறை.
9. சார்ள்ஸ், பிரதான வீதி, கிளிநொச்சி.
10. ஆர்.ரஜீவன், 138ஆம் கட்டை, நெடுங்கேணி.

### இடமிருந்து வலம்

1. இலங்கையில் உப்பு விளையும் ஓர் பிரதேசம்.
5. ஓர் பருவ காலம்: ஓர் வாகனமும் கூட (வலமிருந்து இடம்).
11. இலங்கையில் ஓர் புனித பிரதேசம்.
13. பிரச்சினைக்குப்பின் காணப்படும் தீர்வினை இப்படி அழைப்பர் (குழம்பியுள்ளது).
19. பெண்களுக்கு உபத்திரவம் கொடுக்கும் உயிரினம் (வலமிருந்து இடம்).
26. ஓர் தானியம் (குழம்பியுள்ளது).
31. ஓர் இலக்கம்.
35. பணம் கொடுத்து பொருள் வாங்கும் போது மறக்காமல் பெற்றுக்கொள்ள வேண்டியது.

### மேலிருந்து கீழ்

1. மான் வேடத்தில் சென்றவன்.
3. அகங்காரம் ஒத்த சொல் (கீழிருந்து மேல்).
5. பல நிலைகள் அடங்கியதே போர் (கீழிருந்து மேல்).
6. இரண்டு கால், நான்கு கால் புலிகள் வசிக்கும் இடம்.
14. தனவந்தன் - ஒத்த கருத்துச் சொல் .(குழம்பியுள்ளது).
16. ஓர் வியாதி (கீழிருந்துமேல்)
24. திசையின் ஒத்த சொல் (கீழிருந்து மேல்).
27. ஆணின் பெயர் ஒன்று.
29. கடல் வாழ் உயிரினம் (கீழிருந்து மேல்).

## குறுக்கெழுத்துப் போட்டி 135 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ங் | 3 கி | 4 ய | 5 ன் | ■ |
| 7 ம | 8 த | 9 லை | ■ | 11 ற | 12 தி |
| 13 டை | 14 கி | ■ | 16 டி | 17 வ | 18 ன் |
| 19 கு | 20 ம | 21 ம் | 22 ம் | ■ | 24 ம |
| 25 ம் | ■ | ■ | 28 கு | 29 ம | 30 ம் |
| 31 ம் | 32 த் | 33 த | 34 த | 35 தி | ■ |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 13.09.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-137
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# இதுதான் காதலா...?

அவனுக்கு மேனகா மேல் கோபம் கோபமாக வந்தது. அவள் சொன்ன வார்த்தையால் தான்பட்ட துன்பத்தை அவளும் அனுபவிக்க வேண்டும். தான் அவளுக்குக் கொடுக்கும் பதிலடியால் உருவாகும் ரணத்தை அவள் வாழ்நாள் முழுவதும் உணர வேண்டும் என மனதுக்குள் எண்ணிக் கொண்டான். மேனகா சொன்ன வார்த்தைகள் கொடுத்த அதிர்ச்சியில் இருந்து ராஜனால் மீள முடியவில்லை. பல மணி நேரமாக இதைப்பற்றியே எண்ணியவாறு கட்டிலில் அமர்ந்திருந்தான்.

"டேய் ராஜி" என அழைத்தவாறு அறைக்குள் நுழைந்த தன் தாயின் குரல்கேட்டுத் திடுக்கிட்டு, "என்னம்மா?" என்றான் தடுமாற்றத்துடன்.

"நான் நேற்று சொன்னதைப்பற்றி யோசிச்சுப்பார்த்தியா? என்ன முடிவு எடுத்துருக்கிற?" என்றாள்.

"என்ன விஷயம்மா?" - ராஜன்

"என்னடா, அதுக்குள்ள மறந்துட்டியா? அதுதான்டா, உன்னோட அக்காவோட கல்யாணத்தப் பற்றிச் சொன்னேனே....."

"ஓ....அதுவா....? நான்தான் ஏற்கனவே சொன்னேனே, யோசிச்சுச் சொல்றன் என்று. திரும்பத் திரும்ப ஏம்மா தொல்லை பண்ணுற?" என்றான் சலிப்பும் குழப்பமும் நிறைந்த முகத்துடன்.

"சரி, என்னவோ செய்...."என அதிருப்தியுடன் அறையை விட்டு வெளியேறினாள் அவனின் தாய்.

மேனகாவையும், தன்தாய் சொன்ன விடயத்தையும் ஒரு கணம் எண்ணிப் பார்த்தான். மேனகாவைப் பழி தீர்ப்பதற்கு இதுதான் சந்தர்ப்பம் என எண்ணியவன், அறையில் இருந்து வெளியே வந்து, "அம்மா நீ சொன்னத நல்லா யோசிச்சுப் பார்த்தன். எனக்குச் சம்மதம்" என்று சொல்லிவிட்டு பதிலை எதிர்பாராமல் வெளியேறினான்.

ராஜன் சிறு வயதிலேயே தந்தையை இழந்தவன். அவர்களின் தாய்தான் ராஜனையும் அவனின் அக்கா ரதியையும் கஷ்டப்பட்டு படிக்க வைத்தாள். அவர்களை வளர்த்தெடுக்க அவள் பட்டபாடு கொஞ்சமல்ல. இப்போது ரதிக்கு 34 வயதாகிறது. பல பேர் ரதியைப் பெண் பார்க்க வந்திருந்தாலும் அவர்கள் கேட்ட சீதனத்தைக் கொடுக்க முடியாததால் ரதியின் திருமணம் பற்றிய கனவு கலைந்து கொண்டே இருந்தது. சென்ற வாரம் ஒரு தரகர் வந்திருந்தார்.

லண்டன் மாப்பிள்ளை, வயது 36. சீதனமா பணமோ, பொருளோ எதுவும் தேவையில்லை. ஆனால் ஒன்று. மாப்பிள்ளையின் தங்கையை ராஜன் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

இதற்கான ராஜனின் பதிலைத்தான்



-முத்துலிங்கம் உமாகாந்த், மயிலம்பாவெளி

ராஜனின் தாய் ஒருவாரமாக எதிர்பார்த்தாள். இப்போது ராஜனின் சம்மதம் கிடைத்ததை எண்ணிப் பெரிதும் சந்தோஷப்பட்டாள். தான் இத்தனை காலம் பட்ட துன்பத்துக்கு முடிவு வரப்போகிறது என எண்ணி நிம்மதியடைந்தாள். இந்தியாவில்தான் திருமணம். மறுநாளே தரகரிடம் விஷயத்தைச் சொல்லி ரதியும், ராஜனும் இந்தியா செல்வதற்கான ஆயத்தங்கள் நடந்தன.

ராஜனும், மேனகாவும் நான்கு வருடங்களுக்கு மேலாகக் காதலர்கள். தன் அக்காவுக்குத் திருமணம் நடந்த பின்பே தம் இருவருக்கும் திருமணம் என்று ராஜன் முடிவு செய்திருந்தான். இதைப்பற்றி அடிக்கடி மேனகாவிடம் பேசுவான். ராஜன் தனியார் நிறுவனம் ஒன்றிலே வேலை பார்த்தாலும் அவனது சம்பளம் வீட்டுச் செலவுகளுக்கே போதுமானதாக இருந்தது. தன் அக்காவுக்காக அவனால் எதுவும் சேர்த்து வைக்க முடியவில்லை. தன் கையாலாகாத் தனத்தை எண்ணி மனம் புழுங்குவான். மேனகாவுக்கும் இது நன்றாகவே தெரிந்திருந்தது.

நான்கு நாட்களுக்கு முன் ராஜனின் அம்மா அவனிடம் வந்து, ரதிக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை பற்றிச் சொன்னாள். ராஜனுக்குத் 'திக்' என்றது. ராஜன், மேனகாவைக் காதலிக்கும் விடயம் அவனின் தாய்க்குத் தெரியாது. இதுபற்றி மேனகாவிடம் பேசுவதற்காக அவர்கள் இருவரும் வழமையாகச் சந்திக்கின்ற பாலத்தடிக்கு வரும்படி சொல்லியிருந்தான். மேனகாவின் வரவுக்காகக் காத்திருந்த ராஜனின் மனதில் தாய் கூறிய விடயங்கள் எதிரொலித்துக் கொண்டிருந்தன. சற்று நேரத்தில் மேனகாவும் வந்து சேர்ந்தாள். ராஜன் பேசுவதற்கு வாய் எடுக்கும் முன்பே, மேனகா ஆரம்பித்தாள்.

"ராஜன் நீ சொல்ல வந்த விஷயத்துக்கு முதல், நான் ஒன்று சொல்ல வேணும். இது உனக்கு ஏமாற்றமாகத்தான் இருக்கும். எனக்கு வீட்டில மாப்பிள்ளை பார்த்திருக்காங்க. அப்பாவிடம் நம் காதலப் பத்தி எவ்வளவோ சொல்லிப் பார்த்தன். எதுவுமே எடுபடல்ல. என்னை உடனே கல்யாணம் செய்து கொள் என்று நான் சொல்லலாம், ஆனா, அந்த நிலைமையில நீ இல்ல எண்டது எனக்கு நல்லாவே தெரியும். எதுவும் முடியாத நிலையில அப்பாவுக்கும் ஓம் எண்டு சொல்லிற்றன். இந்த நிலைமையில நான் எடுத்த முடிவு சரியெண்டு நம்புறன். என்னை மன்னிச்சிடு" என்று மூச்சுவிடாமல் படபடவென்று பேசி முடித்துவிட்டு, பதிலை எதிர்பார்க்காமல் நடந்து விட்டாள். வாயடைத்துப்போன ராஜன் ஒரு தடவையாவது திரும்பிப் பார்ப்பாள் என்ற நம்பிக்கையில் அவள் சென்று மறையும் வரை கண்வெட்டாமல் பாதையைப் பார்த்தபடியே இருந்தான். அவனுக்கு ஏமாற்றமே கிடைத்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தனித்து விடப்பட்டது போன்ற உணர்வு. ராஜனை விட மேனகாவே அவர்களின் எதிர்காலம் பற்றி அதிக கனவுகளைக் கொண்டு இருந்தாள். இப்படிப்பட்ட மேனகாவா இப்படி நாலு வார்த்தையில் உறவை அறுத்தெறிந்து விட்டுப் போகிறாள்? ராஜனால் நம்ப முடியவில்லை. அதை ஜீரணித்துக் கொள்ள முடியாமல், அதிர்ச்சியுடன் வீட்டுக்கு வந்த ராஜன், மேனகா தன்னை ஏமாற்றிவிட்டாள் என்ற கோபத்தில் தன் அக்காவுக்குப் பார்த்திருந்த லண்டன் மாப்பிள்ளையின் நிபந்தனைக்கு சம்மதித்தான்.

ராஜன் திருமணம் செய்து இப்போது பத்து வருடங்களாகின்றன. குழந்தைகளும் இருக்கிறார்கள். அக்கா ரதியும் மகிழ்ச்சியாகவே இருக்கிறாள். ராஜன் தற்போது இங்கிலாந்தின் குடிமகன்.

திருமணம் முடித்த ஆரம்ப காலத்தில் மேனகாவின் நினைவுகள் அவனை வாட்டினாலும், பின்னர் அந்நிய தேசத்து வாழ்க்கை முறை மேனகாவை படிப்படியாக மறக்கச் செய்தது. கால ஓட்டத்தில் ராஜன் மேனகாவை மறந்தே போனான்.

ஒரு தடவை தம் சொந்த மண்ணுக்குச் சென்று, தம் உறவுகளைப் பார்த்துவிட்டு வரவேண்டும் என ரதி நினைத்தாள். கூடவே ராஜன், மனைவி, பிள்ளைகள் எல்லோரும் இலங்கை வர ஆயத்தமானார்கள்.

சொந்த மண்ணை அடைந்தபோது, அவர்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ராஜன் வந்ததைக் கேள்வியுற்று அவனின் பால்ய நண்பன் ஒருவன் அவனைச் சந்திப்பதற்கு வந்திருந்தான். ஊர் விடயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது மேனகா பற்றிய கதையும் வந்தது.

"என்னடா ராஜி, மேனகா எப்பிடி இருக்கா என்று கூடக் கேக்கமாட்டாயா?" என்றான் நண்பன். சற்று நேரம் அமைதியாக இருந்த ராஜன், "என் காதலைத் தூக்கியெறிந்து விட்டுப் போனவளைப் பற்றி நான் ஏன் பேச வேணும்?" என்றான்.

"டேய், மேனகா பற்றி உனக்கு என்ன தெரியும்? நாலு வருஷமா காதலிச்சதா சொல்கிறாய்? அவளைப் புரிந்து கொண்டது இவ்வளவுதானா?" என்றான் நண்பன்.

"அப்பிடி எண்டா.....?"ராஜன்.

"அவ வீட்டில மாப்பிள்ளை பார்த்திருக்கிறதா உன்னிடம் சொன்னதெல்லாம் பொய். எதுக்குத் தெரியுமா? உன்னோட அக்காவோட கல்யாணம் நடக்கணும் எண்டதால. இத நீ அறியாமல் ஆரம்பத்தில் ஒவ்வொரு தடவையும் கடிதம் எழுதும் போது அவளைக் கேவலமாகவே எழுதுவாய். எனக்கு இங்க நடந்த எல்லா விஷயமும் தெரியும். ஆனா அத உன்னிடம் சொல்லக் கூடாதெண்டு மேனகா என்னிடம் சொல்லியிருந்தா மேனகா இன்னும் கல்யாணமே செய்து கொள்ளல்ல. இது உனக்குத் தெரியுமா?" என்றான்.

அதற்கு மேல் நண்பன் சொன்ன வார்த்தைகள் எதுவும் ராஜனின் காதில் விழவில்லை. "மேனகாவின் உண்மையான காதலைப் புரிந்து கொள்ளாமல், அவளின் கனவுகளைக் கலைத்து விட்டேனே!" என்ற குற்ற உணர்வு ராஜனிடம் வந்து ஒட்டிக்கொண்டது. அதிர்ச்சியில் உறைந்துபோனான். இப்போது ராஜனின் மனதில் மேனகா இமயமலையாக எழுந்து நின்றாள். அதன் அடியில் இருக்கும் எறும்பு போல், தான் சிறுமைப் பட்டுப் போனதை எண்ணி ராஜனின் மனம் போராடிக் கொண்டிருந்தது.

---

# செல்வி

அன்று ஞாயிற்றுக்கிழமை. சமையல்கட்டு வேலைகளை முடித்துவிட்டு எசமானி நல்லம்மா சொன்னபடி வீட்டு ஹோல், எசமான் பசுபதியின் காரியாலய அறை எல்லாவற்றையும் புதிதாக வேலைக்கு வந்த சிறுமி செல்வி கூட்டத் தொடங்கினாள். கூட்டிக்கொண்டே போகும்போது எசமான் பசுபதியின் ஷேர்ட்டுகள்,காற்சட்டைகள் மாட்டும் ஹாங்கர் சமீபமாக வந்து கூட்டத் தொடங்கினாள். குனிந்து கூட்டும்போது தற்செயலாக சிவப்பாக ஒரு கடதாசி தென்பட்டது. எடுத்துப் பார்த்தாள் செல்வி.

'ஓ, இது நூறு ரூபா நோட்டல்லவா?' நிமிர்ந்து பார்த்தாள். அங்கு ஒரு ஷேர்ட் தொங்கியபடி காட்சி தந்தது. அப்படியானால் இது அந்த ஷேர்ட் பொக்கற்றுள் இருந்துதான் கீழே விழுந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு அதை எடுத்து அந்தப் பொக்கற்றுக்குள் போட்டுவிட்டு, மீண்டும் கூட்டத் தொடங்கினாள். ஒருவாரம் கழித்து மீண்டும் ஒரு இருநூறு ரூபா நோட்டு அதேயிடத்தில்

**-ச.இரா.பாலகிருஷ்ண ஐயர், கிராண்ட்பாஸ்.**

விழுந்து கிடப்பது அவள் கண்களில் பட்டது. எசமான் ரொம்பவும் கவனக்குறைவான ஆள் என்று எண்ணி அந்த இருநூறு ரூபா நோட்டை எடுத்துத் தனது இடுப்பினுள் செருகிவைத்துவிட்டுத் தன் வேலையிலீடுபட்டாள். பசுபதி இதற்கென்றே காத்திருந்து அடிக்கடி பணத்தை தவறி விழுந்த மாதிரி நிலத்தில் போட்டுவிட்டுச் செல்வி கூட்டும் போது அவதானிப்பான். இன்றும் அப்படித்தான் செய்தான். இன்று அவனுடைய சந்தேகம் தீர்ந்தது. களவெடுப்பதற்காகவே பெற்றோர் இவளை வேலைக்குச் சேர்த்திருக்கிறார்கள் என்று நினைத்தவன், வேலைக்கு வைக்கும்படி பரிந்துரை செய்த தன் மனைவியை உள்ளுக்குள் சபித்துக் கொண்டான்.

ஆனால் இம்முறை தான் எடுத்த பணத்தை ஐயாவின் கவனக்குறைவைச் சுட்டிக் காட்ட வேண்டுமென்ற நினைப்பில் அவள் நல்லம்மாவிடம் விபரத்தைக் கூறி அந்த இருநூறு ரூபாவையும் கொடுத்தாள். இதுபற்றிப் பசுபதிக்குத் தெரியாது. நல்லம்மாவும் அந்தப் பணத்தைச் செல்வியிடம் இருந்து வாங்கி வைத்துக்கொண்டாள்.

இருநாள் கழித்து அவள் இருக்கும் இடத்தில் உள்ள கோயிலில் தேர்த் திருவிழா. அன்று பகல் கோவிலுக்குப் புறப்படத் தயாரானாள் நல்லம்மா. கோயிலுக்கு ஏற்றதாக நல்ல ஜரிகைப் புடைவை கட்டித் தலை நிறையக் கனகாம்பரச் சரமும் வைத்து எல்லாம் முடிந்து தனது நாலு பவுண் சங்கிலியையும் கழுத்தில் போட்டுக்கொண்டு கோவிலுக்குப் போனாள். கோவிலில் திருவிழா முடிந்து நல்லம்மா எங்கோவெல்லாம் சுற்றி, உறவினர் வீடுகளுக்கும் போய் மாலை நேரம் வீட்டுக்கு வந்ததும், மிகவும் களைத்துப் போய் தன் பெட்ரூமுக்குள் நுழைந்து, உடுப்புகளைக் கழற்றி வீசிவிட்டு தலையில் இதுவரை பாரமாயிருந்த கனகாம்பர மாலையைக் கழற்றி அதையும் ஒருபக்கமாகப் போட்டுவிட்டுப் படுத்துவிட்டாள்.



மறுநாள் மாலை அங்குள்ள கல்லூரி மண்டபத்தில் மகளிர் தினவிழா. அந்தச் சங்கத்தில் நல்லம்மாவும் ஒரு உறுப்பினர். ஆதலால் அந்தக் கூட்டத்துக்குப் போகப் புறப் பட்டாள். புறப்படுவதற்குமுன் தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டு கழுத்தில் போடும் சங்கிலியைத் தேடினாள். காணவில்லை. திடுக்கிட்டுப் போனாள். பல இடங்களிலும் தேடிப் பார்த்தாகிவிட்டது. கிடைத்தபாடில்லை. செல்வியைக் கூப்பிட்டு அதட்டிக் கேட்டாள். அவள் தனக்குத் தெரியாது என்றாள். நல்லம்மா அவளை விடவில்லை. கணவன் பசுபதியிடம் சொல்லிப் பார்த்தாள். அவனும் செல்வியை அடித்தும் விரட்டியும் கூட அதே பதில்தான் செல்வியிடமிருந்து வந்தது.

"உன்னை இப்படிக் கேட்டால் சரிப்பட்டு வராது. பொலிஸில் கேட்கிறபடி கேட்டால்தான் சங்கிலி வரும்" என்று பயப்படுத்தியும் செல்வி தன் நிலையில் இருந்து மாறவில்லை. பசுபதியும் விடாமல் அவளைப் பொலிஸில் ஒப்படைத்து, பொலிஸ் நிலையத்தில் கெஞ்சி விசாரித்தும், அதட்டியும், அடித்தும் விசாரித்தும் தான் சங்கிலியைத் திருடவில்லை என்றே கதறினாள். செல்வியின் பெற்றோரும் கேள்விப்பட்டு அங்கு வந்து செல்வியிடம் 'சங்கிலியை எடுத்தால் கொடுத்துவிடு' என்று சொன்னார்கள். ஆனாலும் எதற்கும் செல்வி தன் பேச்சிலிருந்து மாறவில்லை. கடைசியாக அவள் சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் சேர்க்கப்பட்டாள். அங்கும் இரவு தூக்கத்தில் 'நான் எடுக்கவில்லை' என்று புலம்பினாள். தான் செய்யாத ஒரு குற்றத்தைச் செய்ததாக எல்லாரும் பழி போட்டுத் தன்னை அலங்கோலப் படுத்தியதையெண்ணிக் குமுறி விம்மினாள்.

வழக்கம்போல வீதியிலுள்ள நகரசபைக் குப்பைத்தொட்டியில் உள்ள பொருட்களைச் சேகரிக்கும் வாலிபனொருவன் அங்குள்ள தனக்குத் தேவையான காட்போட் பெட்டிகள், இரும்பு, அலுமினியச் சாமான்கள், வெற்றுப் போத்தல்கள் முதலானவைகளை தேடி எடுத்துத் தன் பையில் போட்டுக்கொண்டிருந்தான். மேலும் குப்பையைக் கிளறிக் கொண்டிருக்கையில் ஒரு கனகாம்பரப் பூமாலை அவன் கையில் தட்டியது. அதை ஒருபக்கமாகத் தள்ளியபோது அது மின்னியது. தூக்கிப் பார்த்தான். அது தங்கச் சங்கிலி.. ஆச்சரியத்துடன் அதை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

இரவு அவன் வீடு வந்து சேர்ந்ததும், தன் மனைவியைக் கூப்பிட்டு, "பார்த்தாயா சில வீட்டுப் பெண்களின் கவனக் குறைவை? இந்தச் சங்கிலியை ஒரு குப்பைத் தொட்டிக்குள் இருந்து கண்டெடுத்தேன்" என்று தான் கொண்டுவந்த அந்தத் தங்கச் சங்கிலியைத் தன் விரலில் மாட்டிக் காண்பித்துக் கொண்டிருந்தான். அது அவன் மனைவியின் முகத்துக்குச் சமீபமாக நேரே தொங்கியபடி ஆடிக்கொண்டிருந்தது.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## கடமையை செய்! உலகம் உன்னை உயர்த்தும்

யாரொருவர் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய முடியாமல் போகும் போது, அக்கடமைகள் எல்லாம் ஒரு பெரிய நொறுக்குகின்ற அளவிலான துன்பங்களாகத் தெரியும். இத்துன்பங்களானது சமூகத்தில் இல்லாது தனிமனிதனிடத்தில் எல்லா நிலைகளிலும் ஓர் ஒழுங்கற்ற நிலையினைக் கொண்டுவரும். இவைகளைச் செயல்படுத்த முடியாதபோது, இவைகளை செய்துவிடுவேன் என்று உறுதிமொழி அளித்தவர்களெல்லாம், மற்றவர்களையெல்லாம் ஏறிட்டுப் பார்க்க முடியாத அளவிற்கு எள்ளி நகையாடப்படும். நிலைக்கு இலக்காகி தள்ளப்படுகின்றனர்.

செய்து முடிக்க முடியாத கடமைகளுக்கு மத்தியில் குழப்பத்துடன் ஒருவர் இருக்கும்போது அவருக்கு நீங்கள் இவ்வாறு எதவலாமே! அவரிடம் சென்று அணுகி அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளில் எவையெல்லாம் செய்து முடித்த கடமைகள், செய்து முடிக்காதவைகள் அதாவது நன்னெறிப் பண்புகள், சமூகம் மற்றும் பணம் சம்பந்தமான நடவடிக்கைகள் என்று ஆய்ந்தறிந்து, எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக முடிக்க, பொருத்தமான வழிமுறைகளைக் கண்டறிந்து உதவ வேண்டும்.

- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.

## மரபு வழியில் வந்த மாண்பு மனித நேயத்தை அழிக்கும் வீம்பு!

தருவது
முழடில்யன்

தொலைக்காட்சியில் சண்டைக் காட்சி நடந்துகொண்டிருந்தது. அபயன், "மாமா நிப்பாட்டு" என்று அழுதான்.

சுந்தரம் சிரித்துக் கொண்டே, "இதுக்குப் பயப்படுகிறாயா, சீச்சீ வெட்கம்" என்று சொல்லியபடி அவனைத் தூக்கிக் கொண்டான்.

"மாமா, அடிக்க வேண்டாம் சொல்லு..... பாவம் அழுகிறான்....." என்று சுந்தரத்தின் நாடியைப் பற்றி அசைத்தான் குழந்தை.

"ஏய்.... நீ ஆண்பிள்ளை. கோழையைப் போல வளராதே. சண்டையைப் பார்த்தெல்லாம் அழக்கூடாது ராஜா!" என்று குழந்தையின் தலைமுடியைக் கைகளால் கலைத்தபடி சொன்னான்.



அபயன் அவனிடமிருந்து விடுவித்துக்கொண்டு, தந்தை வருவதைப் பார்த்து, "அப்பா!" என்றபடி தினகரனிடம் ஓடினான்.

அபயனைத் தூக்கிக் கொண்டு சுந்தரத்திடம் தினகரன் சொன்னான்: "அவனை இரக்கப்பட விடு.... அழுவது கோழைத்தனம் அல்ல, அது மனுசத்தனம்!"

"அப்போ நீ இவனைக் கோழையாகவா வளர்க்கப் போகிறாய்?"

தினகரன் சிரித்துக் கொண்டே, "இருக்கட்டுமே..... கோழையால்தான் மற்றவர்களுக்கு ஆபத்தொன்றுமில்லை."

"வீரம்தான் புருஷலட்சணம்."

"பெண்களை மனித இனத்தில் சேர்க்கவில்லையா நீ?"

"மனித இனம்தான். ஆனால் அவர்கள் ஆண்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்."

"நாட்டையே காப்பதற்கென்று துப்பாக்கி ஏந்தியிருக்கும் பெண்களை, பெண்களே இல்லை என்கிறாயா?"

"விதி விலக்குகள் விதியாவதில்லை."

"யார் வகுத்த விதி?"

"உன் விதண்டாவாதக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது. காதலும் வீரமும்தானே தமிழர்களின் பண்பாடு... இன்னும் சொன்னால் மனித இனத்தின் பண்பாடே அதுதான்!"

"உடல்களை அழிப்பதை வீரம் என்றும், மீண்டும் புதிய உடல்களை உருவாக்கித் தருவதை காதல் என்றும் சொல்கிறார்கள். மனிதன் இவ்வளவு வளர்ந்த பிறகு, இன்றைக்கு உடல்களை அழிப்பது நாகரீகமானதுதானா? மற்றவர்களை அழித்துத் தன் இருப்பை உறுதிப் படுத்திக் கொள்வது, காட்டுமிராண்டிகளாய் நாம் வாழ்ந்த காலத்துப் பழக்கமல்லவா! அதையே இன்றைக்கும் வீரம் என்று சொல்லிக் கொண்டாடலாமா?"

"தினகரா, வீரம் என்பதை நீ ஏன் கொல்லுவதாகவே பார்க்கிறாய்..... வீரம் என்பது ஓர் உணர்வு. தன்னைக் காத்துக் கொள்வது, தான் சார்ந்தவர்களைக் காப்பாற்றுவது.... அதற்கு வேண்டிய மன உறுதியுடனும் பயமற்றும் இருப்பது....."

"எல்லாம் கடைசியில் எதற்காக? நம் இருப்புக்கு இடைஞ்சல் என்று நாம் கருதுபவர்களை அழித்தொழிப்பதற்குத்தானே!"

சுந்தரம் எரிச்சல் ஏற்பட்டவனாக அவனை நோக்கினான்.

"ஆண்களும் நடுநடுங்கிப் பெண்களைப் போல அழுது கொண்டிருப்பது அழகாகவா இருக்கும்? நள்ளிரவில் ஏதாவது சத்தம் கேட்டாலும், மனைவியை எழுப்பி, என்னவென்று பார்ப்பதற்கு அவள் பின்னால் பதுங்கி வருவதைக் கற்பனை செய்து பார். அசிங்கமாக இல்லையா?"

"அதெல்லாம் மரபாகக் கட்டப்பட்டு வந்த ஆண் மனதின் சங்கடம்தான். இப்போது துப்பாக்கி ஏந்திய பெண்களின் பின்னால் பாதுகாப்புக்கு ஒளிந்து கொள்வதை இயல்பாக எடுத்துக் கொண்டுவிட்டதல்லவா! உன் வாதப்படி பார்த்தால், சமையல் செய்வது, வீட்டைத் துப்புரவாக்குவது, துணி துவைப்பது, குழந்தைகளைக் கவனிப்பது என்பதெல்லாம் கூட தன் வீரத்திற்கு இழுக்கானது என்று மரபில் ஊறி வந்த ஆண்மனம் நினைக்கிறது. இவையெல்லாம் வெறும் புனைவுகளே தவிர வேறொன்றுமில்லை. சமூக நல்வாழ்க்கைக்கு இவை தேவை என்று காட்ட முற்படுபவர்கள் இதை ஆணாதிக்க சமூகமாகவே தொடர்ந்து வைத்திருக்க முயல்பவர்கள்தான்!"

சுந்தரம் மேலும் எரிச்சலடைந்தவனாக, "என்ன சொல்ல வருகிறாய்..... வீரம் வேண்டாம் என்கிறாயா?" என்றான்.

"ம்... கொல்லும் வீரம், மற்றவர்களைக் கேவலமாக்கும் வீரம், நமக்கு இடைஞ்சலாக இருப்பவர்களை அழித்துவிடலாம் என்னும் சுயநல வீரம் வேண்டாம் என்கிறேன்."

"நம்மை அழிக்க வருபவர்களை என்ன செய்வது? தலையில் தூக்கி வைத்துக் கூத்தாடலாமா?" எரிச்சல் சிரிப்போடு கேட்டான் சுந்தரம்.

"எல்லா அழிப்பு நியாயமும் அதிலிருந்து தான் பிறக்கின்றன. ஒவ்வொரு தரப்பும், தன்னைத் தற்காத்துக் கொள்ளவே மற்றவர்களை அழிக்க வேண்டியிருப்பதாக நினைக்கிறது. இந்த அழிப்பு நியாயத்தை மறுப்பதும், விவேகத்தை உபயோகித்து அதை வெல்லுவதும்தான் வீரம்!"

"ஆனால், தன் பிள்ளையின் வாழ்க்கையையே அழிப்பவர்களைத் தன் பிள்ளை உறுதியாக எதிர்த்து நின்று அழித்துவிட வேண்டும் என்றுதான் எந்தத் தாயும் விரும்புவாள்....."

"இல்லை. அதுவும் மரபாக ஊட்டப்பட்டு வந்த அழிப்புச் சிந்தனைதான். யாரையும் அழித்துவிடாமல் வெற்றிகரமாக யாவரும் இசைந்து வாழ்வதற்குரிய வழியைக் கண்டுபிடிப்பவர்களைத்தான் எந்தத் தாயும் விரும்புவாள். புத்திரர்களை இழக்கும் சோகத்தை ஒரு தியாகமாகத் தாய் விரும்புகிறாள் என்று பொய் புனைவுகளை, கட்சித் தலைவனுக்காகத் தீக்குளித்துச் சாகத் தயாராகும் தொண்டனை பலவேறு வீரப் புனைவுகளால் ஆவேசமூட்டித் தயாராக்குவது போலத்தான். மிக மிகக் கேவலமான மனித இழிவு அது!"

"சங்ககாலத் தாய்மாரைப் பற்றி என்ன சொல்கிறாய்?"

"அந்தக் கால மன்னர்கள் தங்கள் போர்த் தேவைக்கு இளைஞர்களைத் தயாராக்குவதற்கான பாடல்களையே (இப்போது போலவே) அக்காலப் புலவர்களைக் கொண்டு பாடவைத்திருக்கிறார்கள். ஆனால், அந்த ஆவேசச் சூழலுக்கு இடையிலும், மன்னனின் கபடத்தையும், புதல்வர்களை அநியாயமாய் இழப்பதிலுள்ள சோகத்தையும், அவலத்திற்குக் கோபத்தையும் ஆங்காங்கே தெரியப்படுத்தியிருக்கிறார்கள். "நன்றாக உழும் எருதைத் தேர்ந்தெடுப்பது போல, என் மகனையும் அரசன் போருக்குத் தேர்ந்தெடுத்து தன்னோடு சமமாக தங்கக் கோப்பையில் அவனுக்கு மது விருந்தளித்து, பூக்களைச் சூடிப் போருக்கு அனுப்பக் கேட்கிறான். என்ன செய்வேன்!" என்று புலம்பும் ஒரு தாயின் அவலக் குரலை, மன்னன் விரும்பும்படியாக வீரமாக மாற்றிப் பாடியிருக்கிறார்கள் அக்காலப் புலவர்கள். கேள்."

*ஈரச்செவ்வி உதவின ஆயினும்,*
*பல் எருத்துள்ளும் நல் எருது*
*நோக்கி, வீறு வீறு ஆயும்*
*உழவன் போல, பீடு பெறு தொல்*
*குடிப் பாடு பல தாங்கிய*
*மூதிலாளருள்ளும், காதலின்*
*தனக்கு முகந்து ஏந்திய பசும்*
*பொன் மண்டை, 'இவற்கு ஈக'*
*என்னும்; அதுவும் அன்றிசினே;*
*கேட்டியோ வாழி - பாண!*
*பாசறை, 'பூக் கோள் இன்று'*
*என்று அறையும் மடி வாய்த்*
*தண்ணுமை இழிசனன் குரலே?*

(புறம்: 289.)

## சிந்தியா பதில்கள்

✉ தேச பக்தி தவறா?

-வை.பிரியா, யாழ்ப்பாணம்.

அந்த பக்திப் பேரிரைச்சலுக்குள் கொலைகளின் குரூரம் மறைக்கப்படுகிறதே, அது தவறு.

✉ **சிறிய கேள்விகளுக்குக் கூட பந்தி பந்தியாக அறுத்துத் தள்ளுகிறீர்களே....உங்களைப் பாராட்டி அறுவைச் சின்னமாக ஏதாவது ஒரு பரிசு தர விரும்புகிறோம். என்ன அனுப்பி வைக்கலாம்?**

-சிஹ்னாஸ் தௌபீக், ஹுஸைனியாபுரம்.

உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கிறீர்களே, அதுவே போதும்.

✉ **உங்கள் விவேக் இறங்குமுகமாகி விட்டாரே?**
**-(நடிகர் சரத்பாபுவின் மகனா விவேக்?)**

-மேரி பர்னாந்து, கொழும்பு - 13.

உயரே போன எதுவும் இறங்கித்தானாக வேண்டும் - விலைவாசியைத் தவிர.

ஒரு சம்பவம் வழக்கமான காலைநேர நடைப் பயிற்சியின்போது வழியில் எம்.எஸ்.வி.யைச் சந்திக்கிறார் விவேக்.

வெளிநாட்டுக் கச்சேரிக்குப் போய்விட்டுத் திரும்பி வரும்போது, அந்த விமானத்தில் யாரோ கஞ்சா கடத்தி வருவதாய்த் தகவல் வர, தனது ஹார்மோனியப் பெட்டியையும் சுங்கப் பகுதியினர் பிரித்துக் குடைந்ததைச் சொல்லி வருத்தப்பட்டிருக்கிறார் எம்.எஸ்.வி.

"உங்க ஹார்மோனியப் பெட்டியே போதைப் பொருள் தானே சார்...அதை வைச்சுக்கிட்டு எப்படி மக்களை மயங்கடிக்கிறீங்கன்னு செக் பண்ணியிருப்பாங்க" என்றாராம் விவேக்.

இந்த டைமிங் புத்திசாலித்தனம்தான் அவரைச் சில நாட்களாவது உயரத்தில் வைத்திருந்தது.

(விவேக்கும் சரத்பாபுவும் நடிகர்கள் என்பதைத் தவிர, இருவருக்கும் வேறு சம்பந்தமெதுவுமில்லை.)

✉ **நடேசன், விமலராஜன், சிவராம் ஆகிய ஊடகவியலாளர்களைக் கொலை செய்தவர்களைக் கண்டுபிடிக்கும் விசாரணையை ஆறப்போட வேண்டாமெனக் கோரி ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்களே...இதில், கொலையுண்ட மற்றைய ஊடகவியலாளர்கள் சேர்க்கப்படாதது ஏன் என்று தெரியுமா?**

-வி.ரகுநாதசிவம், பொலன்னறுவை.

ஓ....ஏனைய ஊடகவியலாளர்களைக் கொன்றவர்கள் யாரென்பது ஆர்ப்பாட்டக் காரர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்....காரணம் அதுவாய்த்தானிருக்கும் என்பதை ஒரு சிறுவன் கூடச் சொல்லிவிடுவானே!

✉ **ஏற்கனவே ஷெரீனா வில்லியம்ஸுடன் ஆடியபோது கொடுக்கப்படாத விதத்தில், மரியா ஷரபோவாவுடன் சானியா மிர்ஸா மோதிய போது ஊடகங்கள் பரபரப்புக் காட்டியமை எதற்காக என்று தெரியுமா?**

-ஆர்.கார்த்திக், பருத்தித்துறை.

ஊடகங்களை நிறைத்திருப்பது பெரும்பாலும் ஆண் ஜொள்ளர்கள் என்பதுதான் காரணம்.

✉ **தினமுரசின் சிறப்பாக நீங்கள் கருதுவது எதை?**

-செ.ஜானகி, முப்பனைவெளி.

இங்கே தமிழ் பேசுவோருக்கு இருக்கும் ஒரே மாற்றுப் பத்திரிகை இதுதான் என்பது.

✉ **"மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடம்" என்ற முதுமொழிக்கு எமது நாட்டு அரசியலை வைத்து உதாரணம் கூற முடியுமா?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

குடமாக இருந்தால் பரவாயில்லை, கொலைகளை அல்லவா அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்!

✉ **உடல் ரீதியாகவும் பலவீனமாகப் படைக்கப்பட்டுள்ள பெண், ஆணைச் சார்ந்துதானே வாழவேண்டும்?**


-நா.பிரியா, மொறகொல்ல.

இதுமாதிரியான கேள்விகளும் கூட இன்னும் கொஞ்சக் காலத்திற்குத்தான் என்பது என் கணிப்பு. யாரும் யாரையும் சார்ந்திருக்க வேண்டியதில்லை அல்லது எல்லோருமே ஒருவரையொருவர் சார்ந்துதான் வாழ வேண்டும் என்பதுதான் விரைவில் உண்மையாகும். இது சமத்துவ சமுதாயம் பற்றிய கனவல்ல; பெண்ணை இனியும் கீழ்ப்படுத்தி வைத்திருக்க முடியாது என்பதை பெரிய புரட்சி எதுவுமின்றியே நவீன சமூகம் புரிந்து கொண்டுவிடும்.

✉ **உண்மையான நிலைவரங்களை மக்கள் அறிந்துகொள்ள தகவல்களைத் தேடித் தருவதுதானே ஊடகங்களின் பணி?**

-தீபநேசன், யாழ்ப்பாணம்.

இல்லை. ஒரு அமெரிக்க செய்தி அலை வரிசையின் விளம்பர வாசகம்: "தகவல் எங்களுடையது, முடிவு உங்களுடையது" என்பதாகும். இந்தப் பிரகடன வாசகத்திலுள்ள ஏமாற்றையும் பொய்யையும் சர்வதேச அறிஞர்கள் பலரும் உடைத்துக் காட்டிவிட்டார்கள். எல்லோரும் பயன்



சானியா

படுத்தும் சோப்பு, சீப்பு, கண்ணாடி போன்றவை எப்படித் தயாரிக்கப்படுகின்றதோ அதைப் போல பொதுமக்கள் கருத்தானதும் ஊடகங்களால் தயாரிக்கப்படுகின்றது என்பதை நோம் சாம்ஸ்கி மற்றும் ஏனைய ஊடக ஆராய்ச்சியாளர்களும் தெளிவாக்கியிருக்கிறார்கள். எங்கேனும் மக்கள் தொடர்ந்தும் அவலங்களுடனேயே வாழ்ந்து வருகிறார்கள் என்றால், அந்த அழிவுச் சூழலை அங்குள்ள ஊடகங்களே தயாரித்துக்கொண்டிருக்கின்றன என்று பொருள்.

✉ **ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து எல்லா கட்சிகளும் தங்கள் செயற்குழுவை, பொதுக்குழுவைக் கூட்டி முடிவை அறிவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழ்க் கூட்டமைப்பு மட்டும் வேறெங்கோ சமிக்ஞைக்குக் காத்திருக்கும் நிலைமையைப் பார்த்தால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது?**

-எம்.எஸ்.அஹமட் இப்ராஹீம், ஏறாவூர் - 03.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்ச வேண்டாம் என்று தோன்றுகிறது.

✉ **"கனவிலாவது வந்து ஒருமுறை காதல் சொல்லு பெண்ணே" என்றெல்லாம் உருகுவது இளவயதுப் பைத்தியக்காரத்தனம்தானே சிந்தியா?**

-கே.அஜந்த, அக்கரைப்பற்று - 08.

உண்மைதான். ஆனால் இப்படிப் பல பைத்தியக்காரத்தனங்களைக் கொண்டதுதானே வாழ்க்கை, அஜந்த!

✉ **சிந்தியா, கவிமனம் என்கிறார்களே, என்ன அது?**

-ச.நிரஞ்சலா, மஹியாவ.

அதன் அல்லாடல்களை வெளிப்படையாய்ச் சொன்ன லதா ராமகிருஷ்ணனின் வரிகள் இவை:

"மழையைக் கண்டு பரவசப்பட்டு ஆனந்தமடையும் கவிமனம், மாற்றுடையின்றி குளிரிலும் மழையிலும் தெருவில் நடுங்கியபடி ஒடுங்கிக் கொண்டிருக்கும் பிச்சைக்காரர்களை நினைவில் நிறுத்தி மறுகுவதும் தவிர்க்க முடியாததாகிறது. சமயங்களில் சில சந்தோஷங்களை முழுமையாக உள்வாங்கிக் கொள்ளும் விழைவில், இல்லாதவர்கள் பற்றிய நினைவை நமக்குள்ளிருந்து வெளியேற்றிவிட வேண்டியிருக்கிறது"

✉ **அடுத்த ஜனாதிபதி யார்? ("நிச்சயம் தமிழராக இருக்காது" என்று ஜோக்கெல்லாம் வேண்டாம்.)**

-க.ரவிச்சந்திரன், இலுப்படிச்சேனை.

சரி, நிச்சயம் ஒரு சிங்கள பௌத்தர்தான். போதுமா!

✉ **சிந்தியா, இறப்பிற்குப் பிறகு என்ன?**

-மார்க்கண்டு வாணி, கிரான்.

அழுகையும் அஞ்சலியுரைகளும்தான், வேறென்ன..... மனதைக் கலக்கும் அஞ்சலியுரைகளின் வரிசையில், சாதத் ஹசன் மண்டோவின் மறைவிற்குப் பின், அவரது சக உருது எழுத்தாளரும் சிநேகிதியுமான இஸ்மத் சுக்தாய் 'என் நண்பன் என் எதிரி' என்ற, தலைப்பில் எழுதிய நீண்ட கட்டுரை, 'இல்லாமல் போவதன்' வெறுமையை கூரிய முள்ளாய் இதயத்தில் வைக்கிறது. கட்டுரையின் முடிவுப் பந்தியைத் தருகிறேன் :

"மண்டோவின் அகால மரணத்தில் எனக்கும் பங்கிருக்கிறது என்று என் இதயம் ஏன் இப்படிக் கதறுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. எனது முன் சட்டையில் அவரின் இரத்தம் சிதறிக் கிடக்கிறது. அதை என் இதயம் மட்டுமே பார்க்க முடியும். அவரை மரணம் கொள்ள வைத்த இந்த உலகம்தான், என்னுடைய உலகமும். இன்று அவரை மரணங் கொள்ள வைத்தது - நாளை என்னையும் அதேபோல் மரணங் கொள்ள அனுமதிக்கும். பிறகு மக்கள் துக்கம் கொண்டாடுவார்கள். என் குழந்தைகளின் எதிர்காலம் அவர்களின் நெஞ்சில் பாரமாய் கனக்கும். கூட்டங்கள் நடத்தப்பட்டு நிதி திரட்டப்படும். ஆனால் நேரமின்மை காரணமாக ஒருவரால்கூட அந்தக் கூட்டத்திற்கு வர முடியாமல் போகும். காலம் நகர, அவர்கள் நெஞ்சில் உள்ள பாரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கும். பிறகு மக்கள் எல்லாவற்றையும் மறந்து போவார்கள்."

✉ **சிந்தியா, ஹிந்திப் படங்கள் பார்ப்பதுண்டா?**


-ஏ.எல்.எம்.றஸ்மி, அட்டாளைச்சேனை.

அதிகம் பார்த்ததில்லை. தொலைக்காட்சியில் பாடல் காட்சிகளைப் பார்த்தவரையில், என் கண்ணுக்குள் அந்த நடிகையின் இடுப்பு துடிதுடிப்பு நிரந்தரமாக ஆடிக்கொண்டிருக்கிறது.




**1987-88ஆம்** வருடங்களில் இந்திய அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இடையில் சென்னையில் வைத்து இடம் பெற்ற ஒரு டெஸ்ட் போட்டியின் போது, இந்திய அணியைச் சேர்ந்த கிரான் மோரே எனும் விக்கெட் காப்பாளர் 5 ஸ்டம்ப்களின் மூலம் ஐவரை ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.

இப் போட்டித் தொடரின் போது 6 முறை இவர் ஸ்டம்ப் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


ஹஷான் திலகரட்ண

இந்திய அணி சார்பில் 49 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றியுள்ள இவர், விக்கெட் காப்பாளராக இருந்து 130 வீரர்களை (110 பிடிகள், 20 ஸ்டம்ப்கள்) ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.

துடுப்பாட்ட வீரராக செயற்பட்ட இவர், 7 அரைச் சதங்கள் உட்பட 1,285 (சராசரி 25.70) ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இதே நேரம் தென்னாபிரிக்க அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் 1995-96களில் தென்னாபிரிக்காவில் உள்ள ஜோஹென்னஸ் பர்க்கில் இடம் பெற்ற டெஸ்ட் போட்டியொன்றின் போது இங்கிலாந்து அணியைச் சேர்ந்த ஆர்.வீ. (ஜெக்) ரசல் எனும் விக்கெட் காப்பாளர் 11 பிடிகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இங்கிலாந்து அணி சார்பாக 1988ஆம் வருடம் முதல் 1996ஆம் வருடம் வரை 49 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றியுள்ள ரசல், விக்கெட் காப்பாளராக இருந்து 165 வீரர்களை (153 பிடிகள், 12 ஸ்டம்ப்கள்) ஆட்டமிழக்கச் செய்துள்ளார். துடுப்பாட்டத்தில் 1,897 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார். (சராசரி 27.10)

1963ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி பிறந்த இவர், 1988ஆம் வருடம் முதன் முதலில் இலங்கை அணிக்கு எதிராக லோட்ஸ் மைதானத்தில் நடந்த டெஸ்ட் போட்டியில் பங்கு பற்றியுள்ளார்.

ஜெக் ரசல் ஓர் ஓவியராகவும் புகழ் பெற்றவர். கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புள்ள இவரது ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவையாகும்.

அவுஸ்திரேலிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஏ.டி.டபிள்யூ.கிரவுட் எனும் விக்கெட் காப்பாளர் 1957-58களில் ஜோஹென்னஸ் பர்க்கில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தனது முதலாவது டெஸ்ட் போட்டியின்போது ஆறு பிடிகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.


இவர் அவுஸ்திரேலிய அணி சார்பில் 51 டெஸ்ட் போட்டிகளில் பங்கு கொண்டுள்ளதுடன் விக்கெட் காப்பாளராகவும் இருந்து 187 வீரர்களை (163 பிடிகள், 24 ஸ்டெம்கள்) ஆட்டமிழக்கச் செய்துள்ளார். துடுப்பாட்டத்தில் இவர் 890 ஓட்டங்களைப் (சராசரி 15.08) பெற்றுக் கொண்டுள்ளார்.

1990-91களில் நியூசிலாந்து அணிக்கெதிராக வெலிங்டனில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின் போது, நியூசிலாந்து அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 671 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் இந்த இன்னிங்ஸில் விக்கெட் காப்பாளரினால் தவறி விடப்பட்ட ஓட்டங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

இப் போட்டியின் போது இலங்கை அணியின் விக்கெட் காப்பாளராக இருந்தவர் ஹசான் திலகரட்ன.

இதே நேரம் ஹசான் திலகரட்ன சாதாரணமாக பந்து தடுப்பில் ஈடுபட்டு ஒரு போட்டியின் போது 7 பிடிகளை எடுத்து உலக சாதனை படைத்துள்ளார். இந்தச் சாதனையை இவர் 1992-93களில் நியூசிலாந்துக்கு எதிராக கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் போது நிலை நாட்டினார்.

அதற்கு முன்பதாக அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த கிரேக் செப்பல், நியூசிலாந்து அணியைச் சேர்ந்த ஸ்ரீபன் ப்ளமின், இந்திய அணியைச் சேர்ந்த யஜுவிந்தர் சிங் (தனது முதலாவது டெஸ்ட் போட்டியின் போது) ஆகியோர் ஒரு டெஸ்ட் போட்டியின் போது 7 பிடிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


ப்ளெமிங்

1967 ஜுலை மாதம் 14ஆம் திகதி கொழும்பில் பிறந்துள்ள ஹசான் திலகரட்ன, கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் பழைய மாணவராவார். என்.சி.சி. விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினரான இவர், 1989-90களில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக ஹோபார்ட்டில் இடம் பெற்ற டெஸ்ட் போட்டியில் முதன் முதலில் பங்கு பற்றியுள்ளார்.

1999ஆம் வருடம் ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரின் போது பாகிஸ்தான் அணிக்கு எதிராக இலங்கை அணிக்கு தலைமை தாங்கும் சந்தர்ப்பத்தையும் பெற்றார். இவர் டெஸ்ட் போட்டிகளின் போது 4,000 ஓட்டங்களைத் தாண்டியுள்ளார்.

2003ஆம் வருடம் இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

**—மைந்தன்.**

## எண்களின் பலன்கள் எப்படி?

| *எழுத்துக்கள்* | *எண்கள்* | *கிரகம்* |
|---|---|---|
| A, J, I, Y, Q | - 1 எண் | சூரியன் |
| B, K, R | - 2 எண் | சந்திரன் |
| C, G, L, S | - 3 எண் | குரு |
| D, M, T | - 4 எண் | ராகு |
| E, H, N, X | - 5 எண் | புதன் |
| U, V, W | - 6 எண் | சுக்கிரன் |
| O, Z | - 7 எண் | கேது |
| F, P | - 8 எண் | சனி |

உதாரணம்: D. V I S A G A N
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் : 1 - கூட்டெண் : 7

1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பிறந்து, திகதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7 வருமேயானால் இவர்கள் சூரியன், கேது போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் நல்ல ஞானமும் சிந்தனா சக்தியும் பெற்று, கவிதை, கதை எழுதும் ஆசிரியர்களாயிருப்பர். பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் எல்லா வளமும் பெற்று வாழ்வர். அப்படிப் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால், பல்வேறு தோல்விகளையும், விபத்துக்களையும் சந்தித்து இறுதியில் அனுபவ சம்பாத்யம்தான் மிஞ்சும். இவர்கள் தூக்கத்தில் கனவு கண்டு உளறுவர். இவர்கள் முரடர்களாக இருந்தாலும்; ஈவு இரக்கம் அதிகம் உள்ளவர்களாகவும், மத விஷயங்களில் நாட்டம் கொண்டும் தெய்வ நம்பிக்கை கொண்டும் விளங்குவர்.

பார்த்த உடனே, இவர்களை நல்லவர்கள் என்றும் முன்கோபக்காரர் என்றும் சொல்லலாம். மற்றவர்களும் தன்மைப்போல் இருக்க வேண்டும் என்று எண்ணுவர். இதனால் இவர்களுக்கு நெருங்கிய நண்பர்களமைவது சிரமமே. பலரைப் பழகிய இவர்கள் சிலரைக்கூட உண்மையான நண்பர்களாக வைத்துக் கொள்ள முடியாது. இதனால் இந்த உலகத்தில் யாரைத்தான் நம்புவது என்று கூறுவர். சில நேரங்களில் கலகலப்பாகப் பேசும் இவர்கள் திடீரென்று பேச்சைக் குறைத்துக் கொண்டு, ஊமைபோல் அரங்கனாக இருப்பர். துயரம் தாங்க முடியாத நேரங்களில் தன்னைமீறி அழுவர். சுமாரான உயரமாகவும், வசீகரமான தோற்றமுடையவராகவும் இருப்பர். எளிமையாக ஆடை அணிந்த போதிலும், தூய்மையாகக் காட்சியளிப்பர்.

புகழ்ச்சிக்கு மயங்காத இவர்களை, மற்றவர்கள் புகழ்ந்து பேசினால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தனக்குள்ளே தீர்மானித்துக் கொள்ளுவர். உண்மையை விரும்புவதாலும், போலிகளை வெறுப்பதாலும், மற்றவர்களிடம் அபிப்பிராய பேதம் உண்டாக்கிக் கொண்டே இருக்கும். இந்த எண்ணிக்கைக்காரர்களில் பலர் அரசாங்க உத்தியோகத்தில் இருந்தாலும் நேர்மையுடன் இருப்பர்.

இதனால் பலர் இவர்களுக்கு வேதாந்தி என்று பெயர் சூட்டுவர். தனது மதத்தில் இவர்களுக்கு அளவற்ற நம்பிக்கை இருப்பதால் மதக் கோட்பாடுகள் அனைத்தும் வாழ்க்கையின் வழிகாட்டி என்று பின்பற்றுவர். மகிழ்ச்சியான நேரங்களில் சகஜமாகப் பழகும் இவர்கள் தனிமையில் இருக்கும்போது ஏகாந்த வாழ்க்கையைப் பற்றிச் சிந்திப்பர். குடும்ப வாழ்க்கை சிறப்பா இல்லை என்று சிலர் வருந்துவர். பெயர் பொருத்தமானதாக அமைந்திருந்தால் இக்குறை வராது. ஆனால் இவர்களுக்கு 9 எண் வருகின்ற வாழ்க்கைத் துணைவர் அமைந்துவிட்டால் குடும்ப வாழ்க்கை கசப்பாகிவிடும்.

இவர்களுக்குப் பொருத்தமான திகதியில் மனைவி அமைந்துவிட்டால் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் சிலர், சந்தோஷமான குடும்ப வாழ்க்கை அமையாமல் வேதனைப்பட்டு, சதா உலகத்திற்கு அப்பாற்பட்டு சிந்திப்பதை சில நண்பர்கள் மூலம் அறிவேன். பொருத்தமான பெயர் அமையாவிட்டால் இவர்களுக்கு மனவேதனையும், அடிக்கடி சோர்வும், பைத்தியம் போன்ற நிலையும் இருக்கும். ஆனால் இதை யாரிடமும் வெளியிலே கூறாது மறைத்துவிடுவர்.

பெயர் பொருத்தமாக அமைந்த இந்த எண்ணிக்கைக்காரர்கள், பெரும் பதவியில் இருப்பவராகவும், ஆராய்ச்சியாளராகவும், தொழில் அதிபராகவும், அரசியல்வாதியாகவும் இருக்கின்றனர். பொருத்தமான திகதி எண்களில் திருமணம் செய்து கொள்ளுபவர்கள் சந்தோஷமான வாழ்க்கையை அடைகின்றனர். பெயர் பொருத்தமும், வாழ்க்கைப் பொருத்தமும் அமையாதவர்கள் உடல்நோயாலும் மனநோயாலும் துன்பப்படுகின்றார்கள். இதனால் கீழே குறிப்பிட்டபடி பெயரை நன்றாக மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

**தொழில்**

இந்த எண்ணிக்கைக்காரர்கள் நெருப்பு, உலோகம், வாகனம், கல், கமிஷன் சம்பந்தமான தொழிலால் மேன்மையடைவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால், இவருடைய உழைப்பு பிறருக்குப் பயன்பட்டுவிடும். கீழே குறிப்பிட்டபடி மாற்றி அமைத்துக் கொள்ளவும்.

**நோய்**

இவர்களுக்கு மனோ வியாதி வரலாம். தேவையற்ற குழப்பம், காரணமற்ற கவலை, திடீரென்று விபத்துக்கள், நீர் சம்பந்தப்பட்ட வியாதி போன்றவைகள் வரும். தனது பெயரைப் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் நோய் குறையலாம்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்குத் திறமையும் நல்ல நிர்வாக சக்தியும் இருந்தபோதிலும், பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் துன்பப்படுவர். இதனால் சூரிய ஆதிக்கமான 19, 37, 46, 64 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொண்டும் சுக்கிர ஆதிக்கமான 15, 24, 33, 42 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொண்டும் சிறப்படையலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண் : 1, 2, 6.
யோகமான திகதிகள் : 1, 10, 19, 28; 2, 11, 20, 29; 6, 15, 24.
யோகமான நிறம் : மஞ்சள், வெளிர் நீலம், வெளிர் பச்சை.
யோகமான மோதிரக்கல் : கனகபுஷ்பராகம், தங்க புஷ்பராகம், வைடூரியம், முத்து.
ஆகாத நிறம் : கறுப்பு, சிவப்பு.
ஆகாத திகதிகள் : 9, 18, 27; 8, 17, 26.

*அடுத்த வாரம் பிறப்பெண் 1, கூட்டெண் 8 பற்றிப் பார்ப்போம்.*


# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 ❀ 03 ❀ 1961 மறைவு 11 ❀ 09 ❀ 1997



தோழனே எங்களை விட்டுப் பிரிந்து எட்டு ஆண்டுகளா? நம்பமுடியவில்லை நாம் விடும் இடைவெளியே எதிரிக்கு வாய்ப்பளிக்கும் இப்படி எப்போதும் விழிப்பூட்டும் உன் நினைவுகளை என்றும் சுமக்கிறோம். உடலால் உங்களை சாய்த்தாலும் உணர்வுகளால் எங்களோடு பயணிக்கிறாய்.

உங்கள் பிரிவால் துயருறும் தோழர்கள்.

## தம்பிராசா வடிவேல் (தோழர் ராஜு)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

# ஹென்றி ஃபோர்டு (1863 - 1947)

# உலகை வியக்க வைத்தவர்கள்

சென்றவாரத் தொடர்ச்சி

நூற்றாண்டுகளுக்கு முன்பே எலி விட்னி (Eli Whitney) என்பவர் பரிமாற்றம் செய்யக்கூடிய திறம்பாட்டு வல்லுநர் ஃபிரடரிக் வின்ஸ்லோ டெய்லர் (Frederick Winslow Taylor) இந்த உத்திகள் அனைத்தையும் ஆதரித்துத் தமது நூல்களில் எழுதியிருந்தார். பல சிறிய நிறுவகங்கள் தங்கள் செயல்முறைகளில் உறுப்புகளை ஒருங்கிணைக்கும் பிரிவுகளை ஏற்கனவே ஏற்படுத்தியிருந்தன. ஆயினும், இந்த உத்திகளை முழுமனதோடு பயன்படுத்திய முதல் பெரிய உற்பத்தியாளர் ஃபோர்டே ஆவார்.

இந்த உத்திகளினால் வியக்கத்தக்கப் பலன்கள் விளைந்தன. 1908இல் மிகவும் மலிவான "மாடல் - T (Model-T)" என்ற சீருந்து 825 டாலருக்கு விற்கப்பட்டது. 1913இல் இதன் விலை 500 டாலருக்குக் குறைந்தது. 1916இல் இதன் விலை 360 டாலருக்கு குறைக்கப்பட்டது. இறுதியில், 1926இல் இதன் சில்லறை விலை 290 டாலருக்குக் குறைந்தது. விலைகள் குறைந்ததால், விற்பனை பன்மடங்கு பெருகியது. அமெரிக்க நாடே ஒரு "சக்கர நாடாக" மாறியது. ஃபோர்டு உலகிலேயே மிகப் பெரிய பணக்காரக் குடிமகன் ஆனார்.

ஃபோர்டின் தொழிலாளர்கள் அதிக உற்பத்தித் திறன் வாய்ந்தவர்களாக மாறியதால், அவர்களுக்கு ஃபோர்டு கூடுதல் சம்பளம் கொடுக்க முடிந்தது. 1914இல் அவர் தமது தொழிற்சாலையில் குறைந்த அளவு ஊதியத்தை நாளொன்றுக்கு 5 டாலருக்கு உயர்த்தி தொழில் உலகத்தினருக்கு அதிர்ச்சியூட்டினார். அந்தக் காலத்தில் இந்த ஊதியம் மிகமிக அதிகம். ஃபோர்டு நிறுமம் முன்பு கொடுத்து வந்த சராசரி ஊதியத்தில் இது ஏறத்தாழ இருமடங்காகும். ஃபோர்ட் வழங்கிய புதிய, உயர்ந்த அளவு ஊதியம் நாடெங்கும் பரவியதும், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் வறுமையிலிருந்து நடுத்தர வர்க்கத்தினர் நிலைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

ஃபோர்டின் புதிய உத்திகள் இன்னும் விரிவான தாக்கத்தை ஏற்படுத்தின. அவர் தமது பேரளவு உற்பத்தி உத்திகளை இரகசியமாக வைத்திருக்கவில்லை. மாறாக, அவற்றை விளம்பரப்படுத்த ஆர்வமாக இருந்தார். அவரது அமோக வெற்றியைக் கண்ட மற்ற உற்பத்தியாளர்கள், அவருடைய உற்பத்தி உத்திகளை அப்படியே அவர்களும் கையாண்டார்கள். இதனால், நாடு முழுவதிலும், இறுதியில் உலகெங்கும், உற்பத்தித் திறன் அபரிமிதமாக உயர்ந்தது.

நிதித்துறையில் வெற்றியடைந்ததும், ஃபோர்டு பல்வேறு அரசியல் நடவடிக்கைகளில் தீவிர ஈடுபாடு கொள்ளலானார். எனினும், இந்நடவடிக்கைகளின் விளைவுகள் அவருக்கு ஏமாற்றமளித்திருக்க வேண்டும். முதலாம் உலகப் போரின் தொடக்க ஆண்டுகளில் அவர் சமரச முயற்சிகளில் தீவீரமாக ஈடுபட்டார். ஆனால், அவருடைய வேண்டுகோள்கள் செவிடன் காதில் ஊதிய சங்காகவே அமைந்தன. யூதர் - பினீஷியர் -



அராபியர் - ஆசிரியர் ஆகியோர் உள்ளடங்கிய 'செமிட்டிக்' என்ற மனிதப் பேரின எதிர்ப்பு இயக்கத்தில் 1920களில் சேர்ந்து பாடுபட்டார். ஆனால், இந்த முயற்சி அவருக்கு அவப்பெயரையே தேடித் தந்தது. இதனால், அவர் இந்த இயக்கத்திலிருந்து பகிரங்கமாக விலகிக் கொண்டார். 1930களில் அவர், தமது நிறுவனத்தில் தொழிற்சங்கம் தொடங்குவதை எதிர்த்துப் போராடினார். அதனால் இவருடைய தொழிலாளர்கள் இவருக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கினார்கள். இதனால் நிறுவனத்திற்கும் ஒரு பயனும் ஏற்படவில்லை. எனவே, அவர் இந்தப் போராட்டத்தையும் கைவிட்டார்.

அவருடைய இந்தப் பிற்கால நடவடிக்கைகள் அவரது புகழுக்குச் சற்றே கேடு விளைவித்த போதிலும் உலகின் மீது எந்தப் பாதிப்பையும் உண்டாக்கவில்லை. தொழில் உற்பத்தியைப் புரட்சிகரமாக மாற்றியமைத்து உற்பத்தித் திறனை அதிகரித்து, தொழிலாளர்களின் வருமானத்தைப் பெருக்கியதில் அவருடைய பங்குப் பணியின் முக்கியத்துவம் சிறிதும் குறைந்துவிடவில்லை.

**அடுத்த வாரம் மைக்கேலாஞ்சலோ வியக்க வைப்பார்**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ....**

நாட்டில நடக்கிற விஷயங்களைப் பாக்கேக்க என்ன நடக்குது, இனி என்ன நடக்கப் போகு தெண்டதையே யோசிக்க முடியாமக் கிடக்கு. ஜனாதிபதி எலக்ஷன் இந்த வருஷமே நடக்கவேணுமெண்டு நீதிமன்றம் சொன்னதில இருந்து எலக்ஷன் வேலை சூடு பிடிக்கத் தொடங்கிட்டுது. போஸ்டர்களின்ர அலங்கரிப்புகள் இனி போட்டி போடப் போகுது. இதுக்கிடையில அமைச்சர் பௌஸியின்ர ஆதங்கத்தையும் வேட்பாளர்கள் கவனத்தில எடுக்கிறது நல்லது. அதாகப்பட்டது, பொலித்தீன் பாவனையை கைவிட்டுப்போட்டு அலங்கரிப்புகளைச் செய்யுங்கோ எண்டிறார். நல்ல விஷயம்தான்: பாப்பம், யார் யார் கவனத்தில எடுத்து காரியம் செய்யப் போறாங்கள் எண்டு. இது ஒருபக்கம் இருக்க, எங்கட அரசியல் பிரச்சினையை நினைச்சால் தலை வெடிக்கும் போலை இருக்கு. அதிலையும் புலிகளின்ர அண்மைக்கால அறிக்கைகளைப் பார்த்தால் விளங்கிக்கொள்ள நினைக்கிற வனெல்லாம் நேராப் போய் தெல்லிப்பளை யிலையோ முல்லேரியாவிலையோ 'பெட்'டை புக் பண்ணி, தானே ஏறிப் படுத்துக்கொள்ள வேண்டியது தானுங்கோ. ஏன் உப்பிடிச் சொல்லுறன் எண்டால், 'பேசிறதெண்டால் கிளிநொச்சியில் பேசு. இல்லாட்டில் ஒஸ்லோவிலதான் பேசுவம்' எண்டு ஒற்றைக்காலில நிண்டு கொண்டு ஒற்றப்பிடியாச் சொல்லிப்போட்டினம். எனக்கு விளங்கிட்டுது. பெடியள் கிளிநொச்சியெண்டு வன்னியைச் சொல்லினம்; ஒஸ்லோ எண்டு நோர்வேயைச் சொல்லினம். ஏன் உந்த இடங்களைச் சொல்லினம் எண்டதுக்கு காரணத்தைக் கண்டுபிடிக்க முன்னம், என்ர வீட்டுக்கு எதிர்த்தாப்போல கடை நடத்திற கனகரெத்தினம் உந்தச் செய்தியைக் கேட்டுப் போட்டு காலங்காத்தாலை வீட்டுக்கு வந்து கேட்ட கேள்வி எனக்கு கண்ணைக் கட்டிப்போட்டுது. என்ன கேட்டார் தெரியுமோ.... ஒஸ்லோ வன்னிக் குள்ளையோ, தென்னிலங்கைப் பக்கமோ இருக்கு? எண்டிறார். கோதாரிவிழ புலிகள் ஒஸ்லோ ஏதோ தமிழீழத்துக்குள்ள இருக்கிற ஒரு இடம் எண்ட கணக்கா ஒஸ்லோ, ஒஸ்லோ எண்டு சொல்லிறதால எங்கட சனத்துக்கு ஒஸ்லோவும் எங்கையோ. எங்கட நாட்டிலதான் இருக்குதோ எண்ட சந்தேகம் வலுக்கத் தொடங்கிட்டுது.

இனி என்ன செய்யிறது? அண்டைக்கு காலையில மனிசி எவ்வளவோ சொல்லியும் கேக்காம, அவவின்ர முகத்தில முழிக்காம எழும்பினதும், போய் கதவைத் திறந்து போட்டன். அண்டைக்குப் பூராவும் எனக்கு ஏழரைதானாக்கும். எப்பவும் உப்புடி இல்லையுங்கோ. எப்பவாவது இருந்து போட்டு இப்புடி ஏடாகூடமாக யாரின்ர முகத்திலையாவது முழிக்கவேண்டி வருகுது. அண்டைக்குப் பூரா தலையிடிதான். சரி அதை விடுங்கோ. கனகரத்தினத்தாரின்ர ரெண்டாவது கேள்வியைக் கேளுங்கோவன். புலிகளின்ர போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிச் சிட்டுதோ, இல்லையோ எண்டு கேக்கிறார். மனிசனுக்கு எப்புடித்தான் உப்புடியான டவுட் எல்லாம் வருகுதோ தெரியல்லை. நானும் யோசிச்சுப் பார்த்தன். அவரின்ர கேள்வியிலையும் ஒரு நியாயம் இருக்குதுங்கோ. புலிகள் ஊரூரா எழுச்சி மாநாடு நடத்தி அதிலை வாசிக்கிற தீர் மானத்தை நீங்கள் கவனிச்சீங்களோ தெரியல்லை. தமிழ் மக்களின்ர விடுதலைப் போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேணுமெண்டு தீர்மானம் அறிவிக்கினம். ஆனால் இவையேதான் உந்தப் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு வரேக்க மற்ற ஜனநாயகக் கட்சிகளையெல்லாம் துரோகியாக்கினதோடை, தாங்கள் நடத்தின போராட்டம்தான் தமிழ் மக்களின்ர போராட்டத்தை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு போயிருக்கு; அதாலைதான் இண்டைக்கு எங்கட போராட்டத் திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைச்சிருக்கு எண்டும் பிரசாரம் செய்தவை. இப்ப என்னடா வெண்டால் சர்வதேசம் தங்கட போராட்டத்தை அங்கீகரிக்க வேணும் எண்டு கோரிக்கை விடுகினம். மூண்டு வருஷத்துக்கு முதல் சொன்னதை சனம் மறந்திருக்குமெண்டு எப்புடி வசதியா மறந்து போட்டினம் பாத்தியளோ. ஏதாவது ஒரு தீர்மானத்தைப் பின்பற்றினால் அதை மறக்க மாட்டினம். இது என்னடாவெண்டால் பருவ காலத்துக்கு ஏற்ற மாதிரி சீசனுக்கு ஒரு கோஷத் தையெல்லோ கொண்டு வருகினம். முதலில என்ன சொன்னதெண்டதை அவைக்கும் மறந்து போகுது. கேட்ட சனத்துக்கும் மறந்து போகுது. சனங்கள் கட்டாயம் மறந்து போகினம் எண்டதை தெரிஞ்சு கொண்டதாலை இவையும் தங்கட இஷ்டத்துக்கு எதையாவது சொல்லிக் கொண்டிருக்கினம்.

எது எப்புடியோ; ஒண்டு மட்டும் தெளிவா புரியுது. புலிகள் நடத்திற போராட்டம் விடுதலைப் போராட்டமாக அங்கீகரிக்கப்படுகுதோ இல் லையோ, பயங்கரவாதப் போராட்டமாக ஏற்கனவே சர்வதேச நாடுகளாலை அங்கீகரிக்கப்பட்டுட்டுது. ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கம் எண்டமாதிரி, தமிழ் மக்களின்ர விடுதலைப் போராட்டத்தின்ர நியாயத்தை சர்வதேச சமூகத்துக்குக் காட்டாமல் நியாயத்துக்கு சாவு மணியடிக்கிற பக்கங்களைக் காட்டிப் பயங்கரவாதப் பட்டத்தை எடுத்துக் கொண்டிச்சினம். நிலமை உப்புடிப் போனால் எங்கட கனகரெத்தினத்துக்கு மாத்திரமே மண்டை குழம்பும்? கண்ணில காணிறவைக்கெல்லாம் உந்தக் குழப்பம் வரத்தான் செய்யும்.

சுருக்கமாச் சொல்லிறதெண்டால் எங்கட சனத்தின்ர விடுதலை தாகத்தை புலிகள் தீர்த்து வைக்குமாப் போல தெரியல்லை. ஏன் தெரியுமோ, சமாதானத்துக்கெண்டு வந்தபோதெல்லாம் புலிகள் உடும்புப் புடியா ஒரு விஷயத்தை கடைப்பிடிச்சுக் கொண்டிருக்கினம். அது என்ன தெரியுமோ? கிடைக்காததைக் கேக்கிறதும், நடக்காததைப் பற்றிப் பேசிறதும், சரிவராததைப் பற்றி கோரிக்கை விடுக்கிறதும் எண்டு அவை மடியைப் பிடிச்சு பிள்ளை பெறச்சொல்லி கட்டாயப்படுத்திற மாதிரித்தான் ரை பண்ணினம். பார்ப்பம் ஒப்பிரேஷன் செய்யினமோ, இல்லாட்டில் மாற்றம் ஏதாவது செய்யினமோ எண்டு. உதுகள்கூட எப்ப நடந்தாலும் எனக்கென்ன எண்டு இருந்து போடுவன். உந்தமாதிரி கனகரெத்தினங்களின்ர கரைச்சல்தான் தாங்க முடியாமக் கிடக்கு. என்னைக் காப்பாத்துங்கோ... பிளீஸ்.....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(08.09.2005 தொடங்கி 14.09.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

சிங்கம் - சூரியன், புதன். கன்னி - வியாழன், வெள்ளி, கேது. மீனம் - இராகு. மேடம் - செவ்வாய், கர்க்கடகம் - சனி.
சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த் திகை முதற்கால்.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பொருள் வரவு, காரியானு கூலம், பிரயாணக் கஷ்டம், குடும்பச் சிறப்பு, உறவினர் உதவி, உத்தியோக நன்மை, மேலதி காரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் பலிதம், பொருள் வரவு, உயர்ந்த நிலை, வெளியிட வாசம், அன்னியர் சக வாசம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழில் மந்தம், செலவு மிகுதி, வீண்துயர், வெளியிடப் பயணம், அன்னியர் நட்பு, குடும்ப மேன்மை, உத்தி யோகச் சிறப்பு, மேலதிகாரிகள் கஷ்டம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியா பாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் மந்தம், செலவு அதிகம், பணக் கஷ்டம், உறவினர் உதவி, பிரயாண மிகுதி, குடும்ப மேன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதி காரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தரா டத்து முதற்கால்.) தொழில் அலைச்சல், காரிய நஷ்டம், பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை, குடும்பக் கலகம், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் கஷ்டம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் பலிதம், புதிய முயற்சி, பண விரயம், தூர இடப் பயணம், மனக்குறையதிகம், குடும்பப்பொறுப்பு, உத்தியோக மாற்றம், மனக் கலக்கம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் அலைச்சல், செலவு மிகுதி, கடன்படல், மனக்கலக்கம், குடும்பப் பொறுப்பு, உறவினர் உதவி, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் உயர்ச்சி, புதிய முயற்சி, பணவிரயம், மனக்குறை, தூர இடப் பயணம், தேகசுகக் கஷ்டம், குடும்பப் பொறுப்பு, உத்தியோக பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசா யிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் மேன்மை, காரியானுகூலம், மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.) தொழில் மேன்மை, பண வரவு, உயர்ந்த நிலை, பிரயாணக் கஷ்டம், மனக்குறை நீங்கும், குடும்ப சுமை, உத்தியோக நன்மை, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து பின்னரை.) தொழில் மேன்மை, பண வரவு, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, குடும்ப மேன்மை, உத்தியோக மகிழ்ச்சி, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட் டாதி, ரேவதி.) தொழில் மந்தம், காரியத் தடை, பணக் கஷ்டம், கடன் படல், பிரயாண மிகுதி, உறவினர் தொல்லை, உத்தியோகக் குழப்பம், மாணவர் கல்விச் சுமை, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

மாலை 6.30 தொடக்கம் இரவு 8.30 மணி வரை

கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும் இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது ஐரோப்பிய நாடுகளில் வாழும் எமது தாயக உறவுகளுக்காக செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Localization : | 13° East |
| Frequency : | 11013 MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## இளம் புயல்...



பிலியட் இப்போது அனைத்து சமூக மக்களிடமும் மிக அதிகமாகப் பரவி வரும் ஒரு விளையாட்டாகும். இங்குள்ளதும் ஒரு பிலியட் விளையாட்டு பற்றிய செய்தியாகும். பிலியட்டை சிலர் பொழுதுபோக்குக்காகவும் சிலர் தமது அன்றாடக் கடமைகளில் ஒன்றாகவும் செய்து வருகின்றனர். ஆனால் இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்டீவன் ஹென்ரி, பிலியட் விளையாட்டையே தமது பொழுதுபோக்காக விளையாடியதால் 21 வயதிலேயே அவர் பிலியட் விளையாட்டில் உலக சாம்பியனாகக் கருதப்பட்டார். சிறு வயதிலேயே சாம்பியன் ஷிப் பட்டம் வென்றவர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார். இளைஞர்கள் சாதிக்க நினைத்துவிட்டால் எதனையும் செய்துவிடலாம்.

## பாட்டுப் பாடவா?

இதுவும் ஒரு இளம் சமூகத்தைப் பற்றியது. அருகில் இருப்பவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சாலட் ஷேர்ச். இவர் தனது 12ஆவது வயதிலேயே சாதனையைச் செய்து விட்டார். அதாவது இங்கிலாந்து நாட்டின் பெருமைக்குரிய பாரம்பரிய இசையை இசை ஆல்பமாக்கும் முயற்சியில் இவர் ஒரு பாடலையும் பாடியுள்ளார். இப் பாடலுக்காகவே இந்த இசை ஆல்பம் 4 வாரங்களில் விற்றுத் தீர்ந்துவிட்டதாம். இசை ஆல்பம் வெளியிட்டு ஒரு மாதத்திலேயே இவருக்கு இங்கிலாந்து நாட்டின் உயரிய விருதுகளில் ஒன்றான 'இரட்டை பிளாட்டினம்' விருது வழங்கப்பட்டதாம். 12 வயதுக் குரலும் தற்போதைய குரலும் போட்டி போடுமா....?



## 11.... செக்கனில்



உலக கால்பந்தாட்டச் சபை, (FIFA) அரிய சாதனைகள் கால்பந்தாட்டத்தில் நிகழ்த்தப்பட்டால், அதனையெல்லாம் பட்டியல் படுத்தி வைப்பது வழமை. கால்பந்தாட்டத்தில் மிக விரைவாக கோல் போடுவதே சாதனையாம். அதனையும் மீறி துருக்கி நாட்டைச் சேர்ந்த அக்கன் சுக்கூர் எனும் வீரர் ஆட்டம் தொடங்கி 11 செக்கன்களிலேயே கோல் போட்டு உலக சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார். இச் சாதனை 2002ஆம் ஆண்டு இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மனிதர் மிகவும் வேகமானவர் போல.......


## தொட்டு பறிக்கலாமா?



அருகில் இருப்பது ஏதோ சிலையென்று யோசிக்கத் தோன்றுகின்றதா? இல்லவே இல்லை. இதுவொரு பூ. அதுவும் ஆச்சரியமான பூ. தென்மேற்காசிய காடுகளில் காணப்படும் இப் பூவினம் உலகிலேயே மிகப் பெரிய பூவினம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இதன் விட்டம் 92 சென்ரி மீற்றர், (3 அடி). இதன் நிறை 11 கிலோ கிராம். ஒவ்வொரு இதழும் 1.9 சென்ரி மீற்றர். தடிப்புடையதாம். ஆசை ஆசையாய் தொட்டுப் பறிக்க நினைக்கலாமா?

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

லண்டனில் வசிக்கும் ஜெசீலன் - யூட்சலா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஷெரோன் தனது முதலாவது பிறந்த நாளை 06.09.2005 அன்று லண்டனில் உள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா - அம்மா, இலங்கையிலுள்ள அப்பப்பா - அப்பம்மா மற்றும் சித்தப்பாமார், மாமிமார், மாமாமார், ஜேர்மனியிலுள்ள தாத்தா, அம்மம்மா மற்றும் பெரியப்பா - பெரியம்மா, அன்ரா, சித்தாமார் - சித்தப்பாமார், யூட்டிமார், அம்மம்மாமார், தாத்தாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ராமார், அங்கிள்மார்,



ஜெ. ஷெரோன்

2005.09.06

சித்தாமார், மாமாமார், மாமிமார் மற்றும் அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருள் பெற்று பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தினார்கள்.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

மண்கும்பான் மேற்கைச் சேர்ந்த அருட்செல்வன் - ரேணுகா தம்பதியரின் செல்வப் புதல்வன் கிஷானன் தனது முதலாவது பிறந்த நாளை 08.09.2005 அன்று இந்தியாவிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அன்புச் செல்வன் கிஷானனை அன்பு அப்பா - அம்மா, அப்பப்பா, பெரிய அப்பம்மா, சின்ன அப்பம்மா (இந்தியா) தாத்தா, அம்மம்மா, (யாழ்ப்பாணம்) பெரியதாத்தா, அம்மம்மாக்கள் (புளியங்கூடல்) செல்வம் பெரியப்பா - பெரியம்மா, அக்கா, அண்ணா (சுவிஸ்), குகன் பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார் (கொழும்பு) தயா சித்தப்பா - சித்தி, நிசானா அக்கா, சகானா அக்கா (லண்டன்) பிரபா சித்தப்பா (லண்டன்) சுதன் சித்தப்பா (லண்டன்) கஜன் சித்தப்பா (லண்டன்) மாமா, செல்வி அத்தை மச்சான் (கனடா) மாமா, வாணி அத்தை, (கொழும்பு) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மண்கும்பான் பிள்ளையாரின் ஆசி பெற்று, பல்லாண்டு காலம் பல்கலையும் கற்று நீடூழி வாழ்க, வளர்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அப்பா,அம்மா (இந்தியா)



2005.09.08

செல்வன் கிஷானன்